

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

மார்ச் 26 - ஏப்ரல் 01, 2014 பக்கம் - 24 30/-








மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரூ. 189 | ரூ. 300 | ரூ. 100 | ரூ. 400 |
| ரூ. 589 | ரூ. 900 | ரூ. 400 | ரூ. 1,300 |

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீருக்கு அடியில் வேகமாகச் செல்ல சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மிகவும் நேர்த்தியாகவும் அதி நவீன முறையிலும் இது அமைந்துள்ளது. இதன் விலை 12,000 ஆயிரம் பவுண்ஸ் தான். கடலுக்கு அடியில் மிக வேகமாகச் செல்லக்கூடிய இந்த சாதனம், நீருக்கு மேலும் மனிதரை இழுத்துச் செல்ல வல்லது. இதனை சுமார் 1 மணி நேரத்திற்கு பாவிக்கலாம் என்றும், பின்னர் அதனை சார்ஜ் செய்ய முடியும் எனவும் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.




மஸ்டிப் இன நாய்க்குட்டி ஒன்று சீனாவில் 2 மில்லியன் டொலருக்கு விற்பனையாகியுள்ளது. உலகளவில் ஒரு நாய்க்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகப்படியான விலை இது என தெரிவிக்கப்பட்டுள்ளது. 80 செ.மீ (31 இன்ச்) உயரமும் 90 கிலோ எடையும் கொண்ட இந்தக் குட்டியை வர்த்தகர் ஒருவர் வாங்கியுள்ளதாக தெரிகிறது. கடந்த 2011 ஆம் ஆண்டு, ஒரு சிவப்பு நிற மஸ்டிப் இன நாய்க்குட்டி 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்பட்டதே இதுவரை அதிக விலை கொடுத்து வாங்கப்பட்ட நாய்க்குட்டியாக கருதப்பட்டது.

# கழுத்தை கவர்ந்த நெக்லஸ்



பிரிட்டன் இளவரசர் வில்லியமின் மனைவி, கேத் வில்லியம், குழந்தை பிறந்த பின், மீண்டும் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். சமீபத்தில் லண்டனில் நடந்த நிகழ்ச்சியில், அவர் கலந்து கொண்டார். அந்த விழாவுக்கு வந்திருந்த ஒட்டு மொத்த, வி.ஐ.பி.,களின் கண்களும், கேத் வில்லியமின் கழுத்தையே, வைத்த கண் வாங்காமல் பார்த்தன. அவர் அணிந்திருந்த வைர நெக்லஸ், விழா அரங்கில் இருந்த விளக்குகளின் வெளிச்சத்தையும் மீறி, ஜொலி ஜொலித்தது தான் அதற்கு காரணம். இந்த நெக்லஸ், ஐதராபாத் நிஜாமுக்கு சொந்தமானது. பிரிட்டன் ராணி எலிசபெத்தின் திருமணத்துக்கு, இந்த வைர நெக்லசை பரிசளித்தாராம், நிஜாம். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, இளவரசர் வில்லியமின் பாட்டியும், பிரிட்டன் ராணியு மான, எலிசபெத்திடம், இந்த நெக்லசை இரவல் வாங்கி அணிந்து வந்திருந்தார் கேத் வில்லியம்.





தாய்லாந்தில் வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்டுள்ள இந்த வீடானது ஆறு கிழமைகளில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதனை முற்றாக பூர்த்தி செய்வதற்கு 9000 டொலரை செலவு செய்துள்ளார் வீட்டின் உரிமையாளரான ஸ்டீவ் அரீன்.
இவர் தனது நண்பரான ஹைஜார் கிப்ரன் என்பவரின் வீட்டிற்கு சென்றபோதே தனது கனவு இல்லம் பற்றி சிந்தித்துள்ளார். பின்னர் அதனை நிர்மாணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.
இந்த வீடானது சீமெந்தாலும் செங்கற்களாலும் அமைக்கப்பட்டுள்ளது. இவ் வீட்டின் அடிப்படை அலகுகளுக்கு மாத்திரம் 6000 டொலரை இவர் செலவிட்டுள்ளார். வீட்டை அழகுபடுத்துவதற்கான தளபாட வசதிகள் உள்ளடங்கிய ஏனைய விடயங்களுக்கு 3000 டொலர் உள்ளடங்கலாக மொத்தமாக 9000 ஆயிரம் டொலரை செலவு செய்துள்ளார்.

# 20 கிலோ குழந்தை

கொலம்பியாவில் 8 மாத குழந்தை ஒன்று 20 கிலோ உடல் எடையுடன் காணப்படுவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கொலம்பியாவை சேர்ந்த யுனைஸ் ஃபேண்டினோ என்ற பெண்மணி, தனது எட்டு மாத குழந்தை சாண்டியாகோ மெண்டோசாவுக்கு நாளுக்கு நாள் எடை அதிகரித்து கொண்டே போவதால் அதிர்ச்சியுற்றார். இதனையடுத்து குழந்தையின் உடல் நிலையை பற்றி ஷெப்பி ஹார்ட்ஸ் என்ற நெஞ்சக மருத்துவமனைக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.
இதில், தனது குழந்தை அழும் நேரமெல்லாம் உடனடியாக பாலூட்டுவார் என்றும் அவன் இவ்வளவு குண்டாவதற்கு தானே காரணமாகிவிட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.
இக்கடிதத்தை பார்த்த மருத்துவமனை இயக்குநர் சால்வடார் பாலேசியோ கோன்சாலேஸ், அந்தக் குழந்தையை தங்கள் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சையளித்து வருகிறார்.
தற்போது அவனது உடல் எடையை குறைக்க அறுவை சிகிச்சை செய்ய மருத்துவமனை நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

# எக்ஸ்பிக்கு மூடுவிழா

விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்திற்கான பாதுகாப்பு வசதிகள் அனைத்தையும், எதிர்வரும் ஏப்ரல் 8 முதல் நிறுத்திக்கொள்ளப் போவதாக மைக்ரோசொப்ட் அறிவித்து, தொடர்ந்து எச்சரிக்கையும் கொடுத்துவருகிறது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, பலரின் பிரியமான ஒப்பரேட்டிங் சிஸ்டமாக இயங்கிக் கொண்டிருக்கும் விண் டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தினை முடிவுக்குக் கொண்டு வர மைக்ரோசொப்ட் பல ஆண்டுகள் முடிவெடுத்து, தற்போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தயாராகிவருகின்றது.
பல்வேறு கணக்கெடுக்கின்படி, ஏறத்தாழ 48.8 கோடி கணனிகள் எக்ஸ்பியில் இயங்குவதாக கணிப்பிடப்பட்டுள்ளது.
இது ஒரு பெரிய எண்ணிக்கையாகத் தோன்றினாலும், அனைத்து நாடுகளிலும் இயங்கும் தனிப்பட்ட கணனியில் இவை ஏறத்தாழ 30 சதவீதம் மட்டுமே என Net Applications என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. அப்படியானால், இவ்வளவு எண்ணிக்கையிலான கணனிகளையா, வைரஸ்களை பரப்பும் ஹேக்கர்களின் பசிக்கு இரையாக்க மைக்ரோசொப்ட் முடிவெடுத்துள்ளது என்று பலரும் எண்ணத் தொடங்கியுள்ளனர். இவற்றில் 70 சதவீத கணனிகள் சீனாவில் உள்ளன.
மென்பொருள்களை தயாரித்து வழங்கும் நிறுவனங்களை எடுத்துக்கொண்டால், மைக்ரோசொப்ட் மட்டுமே அதிக காலம் தன் அப்ளிகேஷன்களைப் பாதுகாக்கும் தன்மை கொண்டு [illegible] இயங்கி வருகின்றது.

Microsoft Windows xp
Maintenance Tips

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாத்

# மூச்சு விடவும் உரிமையற்ற முஸ்லிம் காங்கிரஸ்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கை வந்திருந்த போது இலங்கையில் பள்ளிவாசல்கள் தாக்கப்படுவது தொடர்பாகவும் அந்தச்சம்பவங்கள் குறித்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாமை தொடர்பாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாம்.

அது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டதாம். உடனே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டாராம். "எவரும் அரசாங்கத்தை விட்டு வெளியேற விரும்பினால் எப்போதும் வெளியேறலாம்" எனக் கடுமையான முறையில் எச்சரித்தாராம்.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை உதாசீனம் செய்து விட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நவிப்பிள்ளையிடம் அறிக்கை கொடுத்தமை அவருக்கு கோபத்தை மூட்டி விட்டது.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தை விட்டு வெளியேறவில்லை. மாறாகத் தங்கள் கட்சியே 18 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கியதன் மூலம் ஜனாதிபதி தொடர்ந்து பதவியிலிருக்கப் பங்களிப்பு வழங்கியதாகத் தன் விசுவாசத்தை வெளிப்படுத்தியது. எத்தனையோ முஸ்லிம் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டன. மசூதிகளுக்குள் பன்றி இறைச்சி வீசப்பட்டது; முஸ்லிம்களின் புனித குர்-ஆன் வீதியில் தூக்கி வீசப்பட்டது. புனித ரம்ழான் பெருநாளன்று பள்ளியில் தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டு அங்கு பிரித் ஓதப்பட்டது.

இத்தனையும் பட்டப்பகலில் பலர் பார்த்திருக்கவே புத்த பிக்குகள் தலைமையில் வந்த கும்பல்களால் மேறகொள்ளப்பட்டன. ஆனால் இப்படியான சம்பவங்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை.

"மூவின மக்களினதும் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கு முஸ்லிம்களுக்கு அநீதி இழைக் கப்படும் போது அவர்களின் மத உரிமைகள் கீழ்மைப்படுத்தும்போது கோபம் வரவில்லை. ஆனால் அவை பற்றி முறைப்பாடு செய்யும் போது கோபம் வந்துவிட்டது.

எங்களுக்கு அநியாயம் இழைக்கப்படும் போது எங்களால் தடுக்கத்தான் முடியவில்லை. முறைப்பாடு செய்யவும் உரிமை இல்லையா?" என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமினால் ஜனாதிபதியிடம் கேட்க முடியவில்லை.




அதாவது முறைப்பாடு செய்யும் உரிமையும் கூட முஸ்லிம்களுக்கு இல்லையென ஜனாதிபதி முன்னிலையில் ஏற்றுக் கொண்டாரா அவர்.

அது மட்டுமல்ல,முஸ்லிம் வணக்கஸ்தலங்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணையாளரிடம் மனுக்கொடுத்த அதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் கல்முனையில் ஜெனீவாவில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்தை எதிர்த்து கண்டனப் பேரணியொன்றையும் நடத்தியுள்ளது.

அது அவர்களின் பாவவிமோசனம் போலும்!

எனினும் தேர்தல்கள் வரும் சமயங்களில் முஸ்லிம் காங்கிரசுக்கும் அரசாங்கத்திற்குமிடையே ஒரு ஊடல் ஏற்படுவதுண்டு. இப்போது மேல், தேன்மாகாண சபை தேர்தல் நாள்களிலும் இப்படி ஒரு ஊடல்.

இந்தத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகிறது. அரசுக்கு எதிராகப் பரப்புரையும் இடம்பெறுகிறது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஏற்கனவே வாக்களித்தபடி முஸ்லிம் காங்கிரசுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை வழங்காவிடில் , கிழக்கில் ஆளும் கட்சிக்கு வழங்கப் போகும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாகவும் ஒரு சவால் விடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் இப்போதும் அரசாங்கத்திற்கு பங்காளி தான். முஸ்லிம் சமூகத்தின் பேரால் ஆசனங்களை வென்று விட்டு அவற்றை அப்படியே அரசாங்கத்திடம் ஒப்படைப்பது அவர்கள் வழமை. கடந்த கிழக்கு மாகாகண சபைத் தேர்தலில் அப்படித்தான் நடந்தது. இனியும் அப்படியே நடக்கும்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு விழக்கூடிய முஸ்லிம் வாக்குகளை மரச் சின்னத்தைக் காட்டி பெற்றுவிட்ட பின் வெற்றிலைக்குள் கரைத்து விடுவது தானே அவர்கள் வழமை. கிழக்கு மாகாணத்தில் ஆளும் தரப்புக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதான அறிவிப்பும் இந்த நாடகத்தின் ஒரு பகுதிதான். எவ்வளவு தான் முஸ்லிம் காங்கிரஸ் விழுந்து விழுந்து சரணடைந்தாலும், சிங்களக் கடும் போக்காளரைப் பொறுத்த வரை அவர்கள் தேசத் துரோகிகள் தான்.

"நாட்டில் தீவிரவாதத்தைப் பரப்பி கிழக்கில் முஸ்லிம் ஆட்சியை அமைக்கும் செயலை ரவூப் ஹக்கீம் செய்து வருகிறார். நாட்டில் அநாவசியமான முறையில் பள்ளி வாசல்களை அமைத்து முஸ்லிம் சமூகத்தைத் தீவிரவாதக் கொள்கைக்கு வலுவூட்டும் வகை யில் ஹக்கீம் செயற்பட்டு வருகின்றார். முஸ்லிம் சமூகத்தைத் தீவிரவாத கொள்கையுடையவர்களாக மாற்றி நாட்டில் பிரிவினையைத் தூண்டும் கொள்கையிலேயே அவர்கள் செயற்படுகின்ற னர். எனவே இலங்கையில் மூவின சமூகங்களும் அமைதியாக வாழ வேண்டுமென்றால் முஸ்லிம் தீவிரவாதக் கொள்கையைக் கட்டுப்படுத்த வேண்டும்" இதைக் கூறியவர் பாதுகாப்புச் செயலாளரின் செல்லப்பிள்ளையான பொதுபலசேனாவின் பொதுச் செயலர் கல்கொட அந்த ஞானசார தேரர்தான்.

முஸ்லிம் காங்கிரசின் அடிபணிதலுக்கு அவர் கற்பிக்கும் அர்த்தம் இதுதான். அவர்கள் முறையிட்டாலும் தீவிரவாதம் , முறையிட்டமைக்கு பாவவிமோசனம் செய்தாலும் தீவிரவாதம்?

அதாவது முஸ்லிம் காங்கிரசுக்கு மூச்சு விடும் உரிமையும் மறுக்கப்படுகிறது. அதை அதன் தலைவரும் தலைவணங்கி ஏற்றுக்கொள்கிறார் என்பது தான் மறுக்க முடியாத உண்மை.


TVS KING

TVS

மன்னனை போல சொகுசாக பயணிக்க
ரூ.45,606/- செலுத்தி
TVS KING முச்சக்கர வண்டி ஒன்றை
வாங்குங்கள்




(ரூ. 477,904/- VAT உள்ளடங்கிய விலை)
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

சென்ட்ரல் ஃபினான்ஸ் லீசிங் திட்டத்தின் கீழ் வாங்கும் ஒவ்வொரு TVS KING முச்சக்கர வண்டியுடனும் ஒரு LED TV இலவசம்

சென்ட்ரல் ஃபினான்ஸ் கம்பனி பி.எல்.சி.
வளமாக முன்னேறவும் பயனை அனுபவிக்கவும்
www.cf.lk www.cfautomart.com
✆ 0112 038 038, 0772 228 111

TVS லங்கா (தனியார்) நிறுவனம்
இல.38, பழைய நீர்கொழும்பு வீதி,
வத்தளை.
✆ 0777 779 500

AD SHOP

கொழும்பு: ரவிந்ர - 0777 768 089, கம்பஹா: ரஸிக - 0771 924 523, களுத்துறை: ஹர்ஷ - 0776 594 723, குருநாகல், புத்தளம்: காவிந்த - 0777 266 759, மாத்தளை, கண்டி, நுவரெலிய: லங்கா - 0773 296 087, பதுளை: நதீஷ - 0773 357 787, அம்பாறை, மொனராகலை: நிரோஷன் - 0770 828 615, மட்டக்களப்பு: ராகுலன் - 0777 283 094, இரத்தினபுரி: ரங்க - 0773 402 870, அனுராதபுரம், பொலன்னறுவை: சமந்த - 0779 786 614, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை: சேனக - 0777 768 041, வட மாகாணம்: விசாரதன் - 0779 805 413




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டப்பட்ட குரல்கள்

அனுஷ்கன்



இலங்கையின் மூலை முடுக்கெங்கும் ஓங்கியொலிக்கும் தமிழ் மக்களின் உரிமைக்குரல் அடக்கியொடுக்கி அவர்களை பேசாமடந்தைகளாக்கும் செயற்றிட்டத்தை பயங்கரவாத தடுப்புப் புலனாய்வு பிரிவு மும்முரமாக செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. 2009 மே மாதம் நிகழ்ந்த புலிகளின் ஆயுத மௌனிப்புக்குப் பின்னரான இன்றைய சூழ்நிலை போரை விட கொடூரமானதாக மாறிக்கொண்டிருக் கிறது. புலிப் பூச்சாண்டியை காட்டி மனிதஉரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மாற்றுக் கருத்தாளர்கள் மீது தனது இருப்புக்கரத்தால் தினம் தினம் இறுகப் பற்றிக் கொண்டேயிருக்கிறது அரச அதிகார பீடம். நள்ளிரவுக் கைதுகள் ,சுற்றிவளைப்புக்கள், சோதனைகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு அப்பாவி மக்கள் பலிக்கடாவாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். தட்டிக்கேட்க ஆளில்லையென்பதால் நினைத்த மாத்திரத்தில் நினைத்ததை செய்து முடிப்பதில்அதிகாரபீடம் வெற்றி கண்டும் வருகின்றது. அதற்கான செயற்றிட்டம் பயங்கரவாத தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறுமி விபூசிகாவுடன் தொடங்கிய கைதுப் படலம் தமிழர் தாயகம் எங்கும் வியாபித்திருக்கிறது. இது குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்,

"மன்னார் நீதிமன்றம் தாக்குதலுக்கு இலக்கானதன் பின்னர் மன்னார் நீதிபதி யூட்சனுக்கு தொலைபேசி ஊடான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ரிஷாட் பதியூதினின் உத்தியோக பூர்வ தொலைபேசி இலக்கத்திலிருந்தே அந்த மிரட்டல் விடுக்கப்பட்டது. ஆனால் என் கைத்தொலை பேசியை எடுத்து இன்னொருவர் மிரட்டி விட்டார் என அமைச்சர் கூறிய போது அதை ஏற்றுக் கொண்ட சட்டம் . விபூசிகாவின் குரலை மட்டும் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை?" எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார். அந்தளவுக்கு அரச படைகளுக்கு ஒரு சட்டம், அமைச்சர்களுக்கு பிறிதொரு சட்டம், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்னொரு சட்டம், சிறுமி விபூசிகாவுக்கு புதிய சட்டம் என அரச அதிகார பீடம் தன்னுடைய ஆட்சியில் வெளுத்து வாங்கிக் கொண்டிருப்பதை அவர் தோலுரித்துக்காட்டியுள்ளார்.

அந்தளவுக்கு சமத்துவமற்ற நிலைமையும் பாகுபாடுகளும் அடக்குமுறைத் திமிர்த் தனங்களும் என "மஹிந்த அன் பிறதேர்ஸ்கொம்பனி" புதிய புதிய செயற்றிட்டங்களை முன்னெடுத்துக் கொண்டேயிருக்கிறது. அதன் இன்னொரு அங்கமாகவே மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவர் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ருக்கிபெர்னாண்டோ. மற்றையவர் அருட்தந்தை பிரவீன். இவர்கள் இருவரும் பயங்கரவாதத்தை உயிர்ப்பிக்க முயன்றார்கள் என்ற நியாயப்படுத்தல்களை இராணுவ மற்றும் பொலிஸ் பேச்சாளர்கள் மேற்கொள்ளத் தவறவில்லை. அண்மையில் கைதுசெய்யப்பட்ட சிறுமி விபூசிகா சம்பந்தமான தகவல்களை சேகரித்தனர் என இவர்கள் மீது பயங்கரவாத குற்றங்களை அடுக்கியிருக்கிறார் பொலிஸ்பேச்சாளர்.

அவர் கூறுவதைப் போல் ஒரு பதின்மூன்று வயது சிறுமியின் கைது சம்பந்தமான தகவல்களை சேகரித்ததற்கும் புலிகளின் மீள் உயிர்ப்புக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்பது எவருக்குமே புரியவில்லை. அது பொலிஸ் பேச்சாளருக்கு மட்டும் தெரிந்த இரகசியம். அப்படி அவர்கள் சிறுமி விபூசிகா சம்பந்தமான தகவல்களை சேகரித்தது ஒருவேளை உண்மையாக இருந்தாலும் அது அரசுக்கு ஏன் கசக்கிறது? முதுகில் புண் இல்லையென்றால் அரசு எதற்கு பற்றைக்குள் நுழையப் பயப்பட வேண்டும்? முதலில் கைதுசெய்த அதே அரசு இப்போது "குய்யோ முறையோ" என்று பதறி விழுந்தடித்து அந்த இரு செயற்பாட்டாளர்களின் வாய்களையும் வலுக்கட்டாயமாக மூடியுள்ளது. இதை வைத்துப் பார்க்கும் போது கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் பயங்கரவாத தடுப்புப் புலனாய்வுப் பிரிவு ஏதோ ஒரு நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறது எனவும் அந்த இரகசியங்கள் வெளியில் வந்து விடும் என்ற பயத்தாலேயே தான் மனித உரிமை செயற்பாட்டாளர்களான ருக்கி பெர்ணான்டோ , அருட்தந்தை பிரவின் மகேசன் ஆகியோரின் கருத்து சுதந்திரத்தை மறுதலித்து இருக்கிறது எனவும் எண்ணவேண்டியிருக்கிறது.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இருவரும் சிறை வைக்கப்பட்டமை இலங்கை அரசின் உண்மை முகத்தையும் வடக்குக் கிழக்கில் நிலவும் யதார்த்த சூழ்நிலையையும் சர்வதேசத்தின் முன் அப்பட்டமாகப் போட்டு உடைத்திருக்கிறது. ஜெனீவாவில் மனித உரிமைகள் பற்றி உலக நாடுகளுக்கிடையே விவாதங்கள் சூடு பறக்கையில் இலங்கையில் இரு மனித உரிமை செயற்பாட்டாளர்களை சிறைக் கூண்டுகளுக்குப் பின்னால் அடைத்து இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு கருத்து சுதந்திரம் மட்டுமல்ல அடிப்படை உரிமைகளையும் வழங்க முடியாது என்ற உண்மையை உலக நாடுகளின் முகத்தில் அடித்துச் சொல்லியிருக்கின்றனர் ஆட்சியாளர்கள்.

இலங்கை சர்வதிகாரம் நோக்கி செல்கிறது என அறிக்கையிட்டு வந்த ஐ.நா . மனிதஉரிமை ஆணையகத்துக்கு "நாங்கள் சர்வதிகாரத்தைத் தாண்டி அப்பாலும் சென்றுவிட்டோம். எங்களை யாரால் என்ன செய்யமுடியும் ?" என்பதை இந்த இரு மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் கைது செய்தன் மூலம் உரத்துச் சொல்லியிருக்கிறார்கள் அதிகாரபீடத்தினர்.

ஏற்கனவே இலங்கைத் தீவில் தலைவிரித்தாடும் ஊடகங்களின் மீதான கருத்துச் சுதந்திர அடக்குமுறை தற்போது இலங்கையிலுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் மீதும் திரும்பியிருக்கிறது. ஜெனீவாவில் தீர்மானம் கொண்டு வர வரிந்து கட்டிநிற்கும் வல்லரசுகளின் முகத்தில் செருப்பால் அடித்ததைப் போன்ற இந்தக் கைதுகள் நிகழ்ந்திருக்கின்றன. இவற்றுக்கு சர்வதேசம் என்ன பதில் சொல்லப்போகின்றது என்பதுதான் பலரின் முன்னால் உள்ள கேள்வியாகும்.

வழமைபோன்று இந்தக் கைதுகள் தொடர்பிலும் " ஓர் உள்ளக விசாரணையை நடத்துங்கள்" என்று வெறும் காகித அரசியல் மூலம் கால இழுத்தடிப்பை நிகழ்த்தி தாங்களும் மனித உரிமையின் காவலர்கள் என்று காட்டுவதோடு சர்வதேசம் ஒதுங்கிவிடுமா?

மழைவிட்டும் தூவானம் விடாத கதையாக நீளும் இந்த பயங்கரவாதத் தடுப்புப் போர்வையிலான கைதுகள் தமிழர் பிரதேசமெங்கும் பரவியபடியே உள்ளன. அரசு நோக்கி விரல் நீட்டி குற்றம் சாட்டும் யாராக இருந்தாலும் 4ஆம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்ற உண்மையை தினம் தினம் தாங்கள் நடத்தும் கைதுகளால் நிரூபித்துக் கொண்டே இருக்கின்றன[illegible] படைத்தரப்பினரும் அவர்களைவழிநடத்தும் அதிகார பீடத்தினரும்.

இப்படியெல்லாம் அநியாயங்கள் தலைவிரித்தாடுகையில் மக்களின் உரிமைக்காக குரல் எழுப்புகிறோம் என மூச்சுக்கு முந்நூறு தடவை [illegible]ழங்கி தம்மைத் தமிழ்த் தேசியவாதிகள் எனக் காட்டிக் கொள்ளும் கூட்டமைப்பினர் என்னசெய்கிறார்கள் என்பதும் இங்கு ஆராயப்பட வேண்டியதே . வீதியில் இறங்கி இந்த அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராட வேண்டியவர்கள், மாகாண சபையில் வெறும் கண்டனத் தீர்மானங்களுடன் தமது மக்கள் பணியை முடித்துக் கொள்வது இங்[illegible] வேதனைக்குரியது. "வடக்கு மாகாணத்தின் நிர்வாகி நான்" என்று கூறும் வடக்கு முதல்வர் தனது ஆட்சிக்குட்பட்ட மாகாணத்தின் பரவலாக நடந்தேறும் கைதுகள் பற்றி ஏன் வாய் திறக்கவில்லை?

"ஜனாதிபதியிடம் நியமனக் கடிதங்களைப் பெற்றது மத்திய அரசின் ஆதரவைப் பெறவே" என்று தன் பதவியேற்பை நியாயப்படுத்திய முதலமைச்சர் இது குறித்த ஏன் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பவில்லை. பதவியேற்பு முடிந்த அடுத்த நாளே "சத்தியப்பிரமாணம் எடுக்க மறந்துவிட்டேன்" "பேனையை விட்டு விட்டு வந்து விட்டேன்" "பென்சிலை விட்டுவிட்டு வந்துவிட்டேன்" என சின்னப் பிள்ளை போல ஜனாதிபதி வாசஸ்தலத்துக்கு ஓடும் முதலமைச்சர் இதற்கு மட்டும் ஏன் ஜனாதிபதி வாசஸ்தலத்துக்கு ஓடவில்லை? மக்கள் சித்திவதைப்படும் போது மௌனம் காக்கவா இவர்களைப் பதவிக் கதிரையில் ஏற்றிவிட்டார்கள்? நாடு பற்றி [illegible]கையில் நாவை அடக்கிக்கொண்டு பணிந்து நிற்பது எந்த நிர்வாகிக்கும் அழகாகாது. மக்கள் மீண்டும் பயத்தின் விளிம்பில் நிற்கிறார்கள். ஒரு சொல்லாவது அச்சம் போக்க உதிருங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தகராறு குடித்தது உயிரை



ஹரீஷ்

வடமராட்சி சிங்கை நகர். வல்லிபுரக் குறிச்சிக்கு மிக அருகாமையில் இருக்கும் பனை வளத்தை அதிகமாகக் கொண்ட கிராமம். வேலையை முடித்துக் கொண்டு வழமைபோல சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார் இரு பிள்ளைகளின் தந்தையான விமலநாதன். நேரம் இரவு 8.30 மணி.

பழக்கப்பட்ட பாதையென்பதால் இருட்டோ, தனிமையோ எந்தவித பயத்தையும் அவருக்கு ஏற்படுத்தவில்லை. கண்ணை மூடிக்கொண்டே வீட்டுக்கு போய்விட அவரது சைக்கிளும், பெடலை மிதிக்கும் கால்களும் பழக்கப்பட்டிருந்தன. விமலநாதனின் மனம் தனக்காகக் காத்திருக்கும் பிள்ளைகளின் முகத்தை ஒருமுறை அசைபோட அவரின் கடைவாயில் சிறுபுன்னகை பிறந்தது. மூத்த பிள்ளைக்கு வயது 9. இரண்டாவது குழந்தைக்கு இரண்டரை வயதுதான். இருவருக்கும் தகப்பன் என்றால் கொள்ளை விருப்பம். ‘அப்பா எப்போது வேலை முடிந்து வருவார்’ என்று இரவானதும் வாசலையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். விமலநாதானும் வேலையால் போகும் போது குழந்தைகளுக்கு ஏதேனும் தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டே செல்வது வழமை. தான் போனவுடன் “அப்பா!!!” என்று கூவிக்கொண்டு ஓடிவரும் பிள்ளைகளை நினைத்தபடி, வீட்டுக்கு திரும்பும் ஒழுங்கைக்குள் சைக்கிளைத் திருப்பினார்.

அந்த ஒழுங்கைக்குள்தான் ஆபத்துக் காத்திருந்தது. அவரது சைக்கிள் திரும்பிய மறுவிநாடியே, திடீரென மூன்று உருவங்கள் ஒழுங்கைக்குள் முளைத்தன.

‘டேய்! நிப்பாட்டடா சைக்கிளை’ என்று கத்தியது அந்தக் கும்பல். அந்த இரவிலும் அவர்களின் கைகளில் இருந்த வாள்கள் பளிச்சிட்டன.

விமலநாதனுக்கு என்ன நடக்கப்போகிறதென்று புரிந்துவிட்டது. அச்சத்தால் மிகுதியால் சைக்கிளை திருப்பிக் கொண்டு ஓட முற்பட்டார். ஆனால் துரத்தியவர்கள் விடவேயில்லை.

‘உன்னை வெட்டிக் கொல்லாமல் விடமாட்டம்’ கத்திக் கொண்டே விமலநாதனைத் துரத்தினர். கடைசியில் அவர்களின் துரத்தலே வென்றது. வீதியில் ஓடஓட அடுத்தடுத்து எட்டுமுறை விமலநாதனைத் தீண்டித் திரும்பியது வாள். குருதி கொப்பளித்து ஆறாக ஓடத்தொடங்கியது. விழுந்த வெட்டுக்களில் இரண்டு கழுத்தில் மிக ஆழமாக இறங்கியிருந்தன. சுருண்டு விழுந்தார் விமலநாதன். விமலநாதனின் கடைசி மூச்சும் அடங்கியதை உறுதிப்படுத்திக் கொண்ட கொலைகாரக் கும்பல் இருளோடு இருளாக மறைந்தது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்தனர் பொலிஸார். தடயங்கள் சேகரிக்கப்பட்டன. அயல் வீட்டுக்காரர்கள் உட்பட அப்பகுதி மக்கள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். இந்தக்கொலையை கொலையுண்டவரின் மைத்துனரே செய்திருக்க வேண்டுமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

**சம்பவத்தின் பின்னணி**

கொலை செய்யப்பட்ட விமலநாதனின் சகோதரியைத் தான் சந்தேகநபர் திருமணம் செய்திருந்தார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள். இந்த நிலையில் யார் கண்பட்டதோ சந்தேகநபரின் குடும்பம் பிரிவைச் சந்தித்தது. அவர் வேறொரு திருமணம் செய்து அங்கேயே வாழத் தொடங்கினார். கணவனால் கைவிடப்பட்ட தங்கையையும் அவரது குழந்தைகளையும் விமலநாதனே தன் வீட்டில் வைத்துப் பராமரித்து வந்தார். இந்த நிலையில் நீதிமன்றில் தாபரிப்பு வழக்குக்கு விண்ணப்பம் போட்டார் விமலநாதனின் சகோதரி. இது அவரது கணவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு தன் மீது மனைவி வழக்குப் போடுவதற்கு விமலநாதனே தூண்டுகிறார் என்று அவரைக் குறித்த சந்தேக நபர் பலமுறை வழிமறித்து அச்சுறுத்தியுள்ளார்.

விமலநாதன் கொலை செய்யப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னரும் தனது அண்ணன் சந்தேக நபரால் அச்சுறுத்தப்பட்டதாக தெரிவித்திருக்கிறார் அவரின் சகோதரி.

“வழக்கை நீங்கள் வாபஸ் வாங்காட்டி எல்லாரையும் குடும்பத்தோட வெட்டிச் சரிப்பன்” என்று சந்தேக நபர் மிரட்டியுள்ளார். ஆனால் அந்த அச்சுறுத்தலுக்கு விமலநாதன் அஞ்சவேயில்லை. இந்த நிலையிலே விமலநாதன் மீது மூன்று வருடங்களுக்கு முன்னர் முதலாவது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

23.08.2010 அன்றும் இரவு 7.30 மணி வேலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த விமலநாதனை சிங்கை நகர் பதனீர் கூட்டுத் தாபனத்துக்கு முன்னால் வைத்து மூன்றுபேர் வாளால் வெட்டினர். ஆனால் முழங்காலிலேயே வாள் வெட்டு விழுந்ததால் அவர் உயிர்தப்பியிருந்தார். சிறிது காலம் வைத்தியசாலையிலும் சிசிக்சை பெற்று வந்தார். சிகிச்சை பெற்றுத் திரும்பிய போதிலும் விமலநாதனுக்கு சந்தேகநபர் அச்சுறுத்தல் விடுத்தபடியே இருந்திருக்கிறார்.

இந்த நிலையிலே கடந்த 17 ஆம் திகதி மீண்டும் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கிறார் விமலநாதன். ஏற்கனவே அவர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டு படுகொலை முயற்சியில் தேடப்பட்டு வருகின்ற பிரதான சந்தேக நபரான இராஜநாயகம் இராசதுரையே இந்தவாள்வெட்டை நடத்தியதாக கூறப்படுகின்றது. ஆனாலும் இது வரை அவர் கைது செய்யப்படவில்லை. இது குறித்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றது பருத்தித்துறை குற்றப் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி வீரவர்த்தன தலைமையிலான பொலிஸ்குழு.



விசாரணையில் பொலிஸார்...

**பொலிஸ் என்ன சொல்கிறது?**

கொல்லப்பட்டவரின் கழுத்தில் ஆழமாக இரண்டு வெட்டுக்காயங்கள் விழுந்திருக்கின்றன. நீண்டகாலமாக குடும்பத்தில் நிலவிவந்த பகையே கொலைக்குக் காரணமாக இருக்கலாம். தடயங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. விசாரணை நடந்திருக்கிறது சந்தேக நபரான இராஜநாயகம் இராசதுரை தேடப்பட்டு வருகின்றார். இந்தச்சம்பவம் தொடர்பில் இது வரை யாருமே கைது செய்யப்படவில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் 26 – ஏப்ரல் 01, 2014
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# சாது மிரண்டால்...

இன்னமும் அதிக சாவுகளை நிகழ்த்தும் கொடிய நோயாக முன்னணியில் திகழ்வது புற்றுநோய்தான். இந்தப் புற்றுநோய் உடலில் ஏதோ ஒரு கலத்தை முதலில் செயலிழக்கச் செய்து தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும். பின்னர் மெல்ல மெல்ல உடலெங்கும் வியாபிக்கத் தொடங்கி கடைசியில் உயிரைக் கொல்லும்.

இப்போது தமிழர் பகுதிகளில் மெல்ல மெல்ல நடந்தேறத் தொடங்கியுள்ள சோதனைகளும் தேடுதல்களும் கூட இப்படியான புற்றுநோய்த் தன்மை கொண்டனவே.

யாரோ முகம் தெரியாத ஒருவரைப் புலிகளின் புதிய தலைவர் என்று மகுடம் சூட்டி அவர் பொலிஸ் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுச் சென்றுள்ளார் என்றுகூறியே இந்தத் தேடுதல்கள் தொடங்கின. கிளிநொச்சி தருமபுரத்தில் ஜெயகுமாரி, அவரது மகள் விபூசிகா ஆகியோரின் கைதுகளின் பின்னரே இத்தகைய அரசின் தேடுதல் நடவடிக்கையில் சோதனைக் கெடுபிடியும் வெளிச்சத்துக்கு வந்தது.

பொலிஸைச் சுட்டுவிட்டு ஓடிய கோபியைப் பிடிக்கிறோம் என்ற போர்வையில் இருநாள்கள் தருமபுரம் பகுதியை முற்றுகைக்குள் வைத்திருந்தார்கள். ஆனால் அப்படியும் அவர்கள் அணிலேற விட்டுவிட்டதாகச் சொல்லிக்கொண்டு புற்றுநோய்க் கிருமிபோல தேடுதலை வன்னியெங்கும் பரவச் செய்தார்கள்.

வன்னியில்தானே தேடுதல் என்று யாழ்ப்பாணத்தவர்கள் வழமைபோல தம்பாட்டில் இருக்கையில், திடீரென கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டைப் பகுதியும் தேடுதல் வளையத்துக்குள் சிக்கியது.

போர்க்கால நாள்களைப் போல இரவோடு இரவாக அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த படைகள் விடிந்தவுடன் வேலிகளை வெட்டிக்கொண்டு வீடுகளுக்குள் பாய்ந்தன. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸ்நிலையத்துக்கு அண்மையாக உள்ள திடல் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு அடையாள அட்டைப் பரிசோதனை, விசாரணை என்பவற்றின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். இதன் பின்னர் எங்கள் கிராமம் எப்போது சுற்றிவளைக்கப்படப் போகிறதோ? என்ற அச்சத்தில்தான் யாழ்ப்பாணத்தவர்களின் பொழுதுகள் இப்போது விடிகின்றன.

தேடுதல்களைவிடவும் மேலதிகமாகவும் படைத்தரப்பு தனது ரோந்து நடவடிக்கைகளையும் இரவு நேரச் சோதனையிடல்களையும் அதிகரித்துள்ளது. இதனால் கத்தியின்றி இரத்தமின்றி ஒரு போர்ப்பிரதேசத்துக்குள் வாழ்வது போன்ற நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எந்தவிதமான எதிர்ப்பும் காட்டாதபோதுகூட வேண்டுமென்றே தமிழர்களைச் சீண்டுகின்ற நடவடிக்கைகளைப் பேரினவாதம் கைவிடத் தயாரில்லை என்பதையே இப்போது எழுந்துள்ள சூழல் வெளிப்படுத்துகிறது. எத்தனை நாளைக்குத்தான் சீண்டல்களைப் பொறுக்கமுடியும். சாது மிரண்டால் காடுதாங்காது.

# திசை திரும்பும் துப்பாக்கிகள்

அக்கினிகுமரன்

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுத வடிவம் தோற்கடிக்கப்பட்ட போது அதை ஒரு மாபெரும் வெற்றியாகத் தென்னிலங்கை கொண்டாடியது. தென்னிலங்கையில் வாழ்ந்த சிங்கள மக்களில் பெரும்பாலானோர் ஒவ்வொருவரும் அதைத் தங்களின் சொந்த வெற்றியாகக் களித்துக் கூத்தாடினர். போரை வெற்றி கொண்ட ராஜபக் ஷ சகோதரர்கள் தாமே சிங்கள மக்களின் மீட்பர்கள் என்ற தோரணையில் நாடெங்கும் வெற்றி விழாக்களையும் , தேசத்தின் மகுடம் கண்காட்சிகளையும்



நடத்தி ஒரு பிரமாண்டமான தோற்றப்பாட்டை உருவாக்கினர்.

இன்று வரையும் வெற்றியின் மமதைப் பேச்சுக்களும் அதை நினைவூட்டும் கொண்டாட்டங்களும் தொடர்கின்றன. ஆனால் அன்று இழந்து போன தமது உரிமைகளுக்காகப் போராடிய ஒரு இனம் பல்லாயிரக்கணக்கில் உயிர்ப்பலி கொள்ளப்பட்டமைக்காக எந்த ஒரு சிங்களப் பொதுமகனும் ஒரு சொட்டுக் கண்ணீர் விடவில்லை. சாதாரணமாக தமக்கேயும் உரிய உரிமைகளைக் கோரிய ஒரு இனத்தின் மீது பேரழிவை விதைத்த துப்பாக்கிகளை அனைவரும் கொண்டாடினர்.

அந்தந்தத் துப்பாக்கிகளின் கோரத் தாண்டவத்தின் சுவடுகளை வட பகுதிக்கு வந்து பார்த்துப் பெருமை கொண்ட சிங்கள மக்கள் தொகை ஏராளம். உரிமை கேட்டுப் போராடிய மக்களையும் அவர்களின் சொத்துக்களையும் அழித்த அந்தத் துப்பாக்கிகளின் ஆற்றலைப் படம் பிடித்துச் சென்று உறவுகளுக்கும், ஊருக்கும் காட்டிப் பெருமைப்பட்டார்களோ ,எந்தத் துப்பாக்கிகள் பற்றிப் புகழ் பாடினார்களோ , எந்தத் துப்பாக்கிகளை இயக்கியவர்களை தங்கள் மீட்பர்களாகக் கருதி வழிபட்டார்களோ , அதே துப்பாக்கிகள் இப்போது திசை திரும்பி அவர்களையே குறி வைக்கின்றன.

இப்போது உரிமை கோரும் சிங்கள மக்களை நோக்கியும் அவர்களால் போற்றப்பட்ட அதே துப்பாக்கிகள் அனல் கக்க ஆரம்பித்து விட்டன.

தென்னிலங்கையின் ஹங்வெல்லையின் குனானைப் பகுதியில் இயங்கும் ஒரு இறப்பர் தொழிற்சாலைக் கழிவுகளால் குடிநீர் மாசடைவதை எதிர்த்து அப்பகுதி மக்கள் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் கேட்டதெல்லாம் சுத்தமான குடிநீர் தான். எனினும் துப்பாக்கிகள் நீண்டன. கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடித்தன.

பலர் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரின் கோரிக்கையின் பேரில் நீதிமன்றம் ஆர்ப்பாட்டத்துக்கு தடை விதித்தது. எனினும் போராட்டம் தொடர்ந்தது. வீதித் தடைக்குத் தறிக்கப்பட்ட மரம் விழுந்து ஒரு பொலிஸ் அதிகாரி இறந்தார்.

**மீண்டும் அகோரமாகச் சீறின துப்பாக்கிகள். பலர் காயம். பலர் கைது**

இந்தப்போராட்டம் அரசியல் பின்னணியில் வெளிநாட்டு சக்திகளின் தூண்டுதலில் நடத்தப்பட்டதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குற்றஞ்சாட்டுகிறார். இலங்கை சர்வதேச அளவில் நெருக்கடிகளைச் சந்திக்கும் போது இப்படியான போராட்டங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வருவதைத் தடுத்து விடும் என்பது இளம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சாஹர பண்டாராவின் கவலை. நாட்டின் முன்னேற்றத்தை விரும்பாத சில சக்திகள் மக்களையும் , மாணவர்களையும் போராட்டங்களில் ஈடுபடுத்துகின்றனர் என்பது ஜனாதிபதியின் கோபம்.

ஆனால் அந்த மக்கள் குடிநீர் மாசடைவதற்கு எதிராகப் போராடிய போதும் துப்பாக்கியே பதில் கொடுத்து மூவரைப் பலி கொண்டது. நீர்கொழும்பில் எரிபொருள் விலையுயர்வை எதிர்த்து மீனவர்கள் போராடிய போதும் துப்பாக்கிகளே பதில் சொல்லி ஒரு மீனவரைக் கொன்றது. கட்டுநாயக்காவில் கட்டாய ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்திய போதும் ஒரு தொழிலாளியின் உயிரைப் பறித்தவை துப்பாக்கிகள்தான்.

**இவையொன்றும் புதிய துப்பாக்கிகள் அல்ல!**

வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மக்களைக் கொன்று குவித்த அதே துப்பாக்கிகள் தான். இப்போது சிங்கள மக்களையும் நோக்கித் திருப்பப்பட்டுள்ளன.

எந்தத் துப்பாக்கிகளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடினார்களோ அதே துப்பாக்கிகள் இப்போது அவர்களையே இலக்கு வைக்கின்றன.

ஆட்சியாளர்களைப் பொறுத்த வரை குடிநீர் மாசடைவதால் மக்கள் சிறுநீரகக் கோளாறுகளுக்கும் உட்படுவது பற்றியோ , புற்று நோய்த் தாக்கத்துக்கு உட்படுவது பற்றியோ எவ்விதக் கவலையும் இல்லை. இவர்கள் நோக்கம் அந்நிய முதலீட்டாளர்களைத் திருப்திப்படுத்துவதும், அவர்களின் தரகுப் பணத்தில் தங்கள் வங்கிக் கணக்குகளை அதிகரிப்பதும் தான்.

இதற்கு எதிராக எவர் வாய்திறந்தாலும் துப்பாக்கிகள் பேசும். இவை ஒரு இனத்துக்கு எதிரான துப்பாக்கிகள் தான். ஆனால் எவராவது உரிமை கோரினால் இனம் , மதம், பாராமல் அந்தப் பக்கமும் திரும்பி அனல் கக்க ஆரம்பித்து விடும்.

எனினும் இந்தத் துப்பாக்கிகளின் தன்மையைச் சிங்கள மக்கள் உணர மறுக்கும் வரை இது போன்ற காவுகொள்ளல்கள் தொடரத்தான் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரியைப் புலியாக்குதல்

பிரமன்

ஒரு காட்டில சிங்கமும் புலியும் இருந்திச்சாம். காடுமுழுக்க தனக்குத்தான் சொந்தம் எண்டு சிங்கம் கர்ச்சித்துக்கொண்டே இருக்குமாம். ஆனால் புலி விடேலை. காட்டின்ர வடக்கும் கிழக்கும் தனக்கும் தன்ர ஆக்களுக்கும்தான் எண்டு சொல்லி சண்டைபோட்டு தாம். எப்பவெல்லாம் சிங்கமும் புலியும் சந்திக்கினமோ அப்பவெல்லாம் ரண்டும் கட்டிப்பிடிச்சு உருண்டு பிரண்டு ஒரே சண்டைதான். என்ன தான் இருந்தாலும் புலியின்ர பாய்ச்சலுக்குப் முன்னால கனதரம் சிங்கம்தான் வெருண்டோடிச்சாம். புலிக்குப்பின்னாலையும் நிறைய மிருகங்கள் இருந்திச்சாம். சிங்கத்துக்கு பசிக்கிறநேரமெல்லாம் புலியின்ர கட்டுப்பாட்டுப் பகுதிக்க வந்து ஒவ்வொரு மிருகமா அடிச்சு சாக்கொண்டு போடுமாம். சிலவேளையில சிங்கத்துக்கு பஞ்சிவந்தா தன்னை நம்பியிருக்கிற மிருகங்களைக்கூட கொண்டுட்டு "புலிதான் அதுகளக்கொண்டது" எண்டு கதைய மாத்திப்போடும். வரவர புலியின்ரபலம் கூடிக்கொண்டே போச்சுது. இனியும் விட்டாப் பிழைஎண்டு நினைச்ச சிங்கம் பக்கத்துக்காடுகளில இருந்த மற்றச் சிங்கங்களையும் காண்டா மிருகங்களையும் கழுகுகளையும் குள்ள நரிகளையும் கூட்டிக்கொண்டு வந்து புலியைச் சண்டைக்குக் கூப்பிடுச்சாம்.

புலியும் நடந்தது தெரியாமல் வழமைமாதிரி சண்டைக்கு வெளிக்கிட்டிச்சாம். எல்லா மிருகமும் சுத்திவளைச்சுக் குதற புலியால ஒண்டும் செய்ய ஏலாம போட்டுதாம். புலியை கொண்ட வெற்றியை சிங்கமும் துணைக்கு வந்த மிருகங்களும் பெரிசாக் கொண்டாடிச்சி னம். கொண்டாட்டம் எண்டா விருந்து இல்லாமலோ?

ஆனா விருந்துக்கு நிறைய இறைச்சி வேணுமே. புலியின்ர கட்டுப்பாட்டுக்க இருந்த கனக்க மிருகங்களை வேட்டைக்கு வந்த மிருகங்கள் கணக்குவழக்குப் பாக்காமல் அடிச்சு விழுத்தி வயிறுமுட்டச் சாப்பிட்டுட்டுப் போயிட்டினமாம். எல்லாம் முடிஞ்சு முழுக்காடும் சிங்கத்துக்கு சொந்தமாயிற்றுது. சிங்கம் குகைக்கு வெளியால வந்து மண்ணத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு "இனி புலியெண்ட கதையே இஞ்ச இருக்காது. எல்லாத்தையும் வழிச்சுத் துடைச்சு அழிச்சாச்சு" எண்டு பெரிய குரலில சொல்லிச்சாம். ஆனா பிறகு சிங்கத்துக்கு பழையபடி பசிக்க வெளிக்கிட்டுச்சு. பழக்க தோஷத்தில முந்தி புலிக்குப் பின்னால திரிஞ்ச மிருகங்கள வேட்டையாட நினைச்சுதாம். ஆனால் சிங்கத்தின்ர மந்திரி நரி" இப்ப அவையும் உங்கட ராச்சியத்துக்குள்ளதானே. எப்பிடி அவைய கொல்ல முடியும்?" எண்டு கேக்கத்தான் சிங்கத்துக்கு சிக்கல் விளங்கிச்சாம். முந்தினமாதிரி மிருகங்களை அடிச்சுக் கொண்டால் பழி புலியில விழாமல் தன்னிலதான் விழும் எண்டு தெரிஞ்சுதாம். "எட இந்த விசயம் முதலே தெரிஞ்சிருந்தால் புலியைக்கொல்லாமல் விட்டிருக்கலாமே" எண்டு சிங்கம் தன்னைத்தானே திட்டிப்போட்டு என்ன செய்யலாம் எண்டு யோசிச்சுதாம். அப்பதான் நரிகிட்டவந்து ஒரு ஐடியா குடுத்திச்சாம்.

"பேசாமல் இன்னொரு புலியை காட்டுக்க கொண்டுவந்தால் என்ன?" நரி இப்படிக்கேக்க சிங்கத்துக்கு தூக்கிவாரிப் போட்டிச்சு.

"ஏற்கனவே 30 வருசமா பட்டபாடு காணாதோ? வேலியில போன ஓணானைத் தூக்கி ஏன் உடுப்புக்க போடவேணும்" எண்டு தலையை அறம்புறமா ஆட்டிச்சாம் சிங்கம்.

"உங்களுக்கு நான் சொல்லுறது விளங்கேல. இந்த முறை உண்மையான புலியை கொண்டுவராமல் எங்கட நரி ஒண்டுக்கு புலிமாதிரி வேஷம் போட்டுவிடுவம். மிருகங்களெல்லாம் புலி வந்திட்டுது எண்டு நம்புங்கள். பிறகென்ன புலியைச் சாட்டி நீங்கள் நினைச்ச மிருகத்த வேட்டையாடலாம்" எண்டு நரிசொல்லச் சொல்ல சிங்கத்தின்ர வாயில தண்ணி ஊறத்தொடங்கிட்டுது.

" நல்ல பிளான்தான்" எண்டிட்டு உடனேயே நரியைப் புலியாக்க சிங்கம் ஓடர் போட்டுது. அடுத்தநாள் காட்டுமரங்களில எல்லாம் புலிவேசம் போட்ட நரியின்ர படம் போட்டு "மீண்டும்புலி" எண்ட நோட்டீஸ்தான் ஒட்டிக்கிடந்திச்சு. மிருகங்களுக்கு ஒண்டும் விளங்கேல.

"புதுசா எங்க இருந்து புலிவந்தது? இதப்பாக்க புலிமாதிரியே இல்லையே. இது நரிமாதிரியெல்லோ கிடக்கு" எண்டு மிருகங்கள் புறுபுறுத்துச்சினமாம். எண்டாலும் சிங்கம் தான் கொண்டுவந்த நரிதான் புலியெண்டு ஒற்றைக் காலில நிண்டுச்சு. பாவம்! வேஷம் போட்ட நரிதான் சரியா உறுமத்தெரியாம ஊளையிட்டுக்கொண்டே இருந்திச்சாம். அடுத்தநாள் பழையபடி புலிவேட்டைக்கு சிங்கம் வெளிக்கிட்டுச்சாம். இனியென்ன புலிவேட்டைக்குப் போகேக்க மற்ற மிருகங்கள் இடையில சிக்கி அழியிறதும், அப்படிச்செத்தால் பழிய புலியில போடுறதும் சகஜம்தானே.



# மீண்டும் உறுமலா?

**வட்டுக்கோட்டை 22.03.2014**

அன்றைக்கு வழமைக்கு மாறாக இருந்தது விடியல். கிட்டத்தட்ட 5 வருடங்களாக அடங்கிப்போயிருந்த ஊர் நாய்கள் சொல்லிவைத்தாற்போல் ஒரே தொனியில் குரைக்கத் தொடங்கின. எல்லோருக்கும் என்ன ஏது என்று தெரியவில்லை. "முந்தினமாதிரி ரவுண்டப் பண்ண ஆமி வாறானோ?" என்று கிண்டலாக ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள். போர் ஓய்ந்து 5 வருடங்கள் கழிந்த பின்னர் எதற்கு சுற்றிவளைக்கப்போகிறார்கள் என்ற நம்பிக்கையே இந்தக் கிண்டலுக்குக் காரணம். ஆயினும் சற்றுநேரத்துக் குள் அந்தக் கிண்டல் உண்மையா வதை உணர்ந்துகொண்டார்கள். சடசடவென வேலிகளை முறித்துக் கொண்டு போர்க்காலவெறியோடு பாய்ந்து வந்தது இராணுவம். என்ன நடக்கிறதென்று எவருக்கும் புரியவில்லை. சுதாகரிப்பதற்கு இடையில் வீட்டுக்குள் புகுந்தது படை. ஒருஇடமும் விடாமல் சல்லடை போட்டுத் தேடினார்கள். குடும்ப அட்டையைக் கேட்டார்கள். அடையாள அட்டையைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டார்கள். இவற்றையெல்லாம் மக்கள் மறந்துபோய் நீண்டகாலம் ஆகிவிட்டதே.

பலரும் பதறித் துடித்துக்கொண்டு அடையாள அட்டைகளைத் தேடிக்களைத்து வியர்வையோடு எடுத்துவந்தார்கள்.

கண்களில் சந்தேகத்தைத் தூவிக் கொண்டு அடையாள அட்டைகளை ஆராய்ச்சி செய்த படையினர் 18 வயதுக்கு மேற்பட்டவர்களை தங்களோடு வருமாறு அழைத்தார்கள்.

"ஒரு பயமும் வேண்டாம். ஒரு சின்ன விசாரணை" என்று சொல்லிவிட்டு ஊர் இளைஞர்களை மந்தைகள் போல பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள திடல் நோக்கி ஓட்டிச்சென்றார்கள். செல்லும் வழியில் ஆள்களற்ற வீடுகளின் கதவுகள் பூட்ஸ் கால்கள் பட்டு வாய்பிளந்து கிடந்தன. யானை புகுந்த தோட்டம் போல பலரது வேலிகள் சிதைந்து போயிருந்தன. கிட்டத்தட்ட போர் நடந்து முடிந்த நிலம்போல அந்தக் கிராமமே மாறியிருந்தது. முகம் கூடக் கழுவாதவர்களாக இரவு படுக்கைக்குச் சென்ற உடையோடு பகிரங்கவெளியில் நிறுத்தப்பட்டார்கள் இளைஞர்கள்.

அங்கும் விசாரணைகள். அடையாள அட்டைப்பரிசீலிப்புகள் எல்லாம் முடிய "நீங்க வீட்டுக்குப்போகலாம்" என்று சீருடைகள் பச்சைக்கொடி காட்டின. வந்தவர்களில் பலருக்கும் எதற்காகக் கொண்டுவரப்பட்டோம் என்பது புரியவேயில்லை. துணிவுள்ள சிலர் இந்தக் கேள்வியை வாய்விட்டும்கேட்டார் கள். பதில் இப்படி இருந்தது.

"புலிகளின்ர தலைவரும், புலனாய்வுப் பொறுப்பாளரும் இந்த ஊரில வந்து ஒளிச்சிருக்கினம். அவையப்பிடிக்கத்தான் இந்தத் தேடுதல்" என்று சிப்பாய்கள் சொன்னதைக்கேட்டு இளைஞர்களுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

"தலைவர் பிரபாகரனும், பொட்டம் மானுமோ? எங்கட ஊரிலயோ ஒளிச் சிருக்கினம்?" என்று அவர்கள் கேட்க

"இல்லையில்லை. அவையில்லை. இது வேறயாக்கள். கோபி,கஜிபன் எண்டு அவை யின்ர பெயர். அவையத்தான் தேடுறம்" என்று சொல்லிவிட்டு சீருடைகள் அடுத்த தேடுதலுக்காக இன் னொரு கிராமம் நோக்கிப் புறப்படுகிறார் கள். மீண்டும் உறுமல் ஒலி கேட்பதாக அவர்களே கதைகளைக் காற்றில் விதைக்கிறார்கள். உறுமல் ஒலி கேட் டால்தானே அவர்களும் பிழைப்பு? எல்லாமே ஜெனிவா நாடகத்துக்காக இங்கு அரங்கேற்றப்படும் காட்சிகள் தான் என்பது எல்லோருக்குமே புரிந்தாலும் புரியாதது போலவே மௌனித்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## காணாமல் போதல்

- ஆதி பார்த்தீபன்

மகனே!
ஒரு விளையாட்டைத்தொடங்கு
காணாமல் தொலைவது அதன் வகை
முகவரி அற்றது இழப்பு
சாபம் பெற்றது நம் இருப்பு
சரித்திரம் இழந்தது ஆன்மா
அறை முழுதும் மாயை நிறையட்டும்
கதவுகளின் வெளியில் சூரியன் கருகட்டும்
யோனிகள் முலைகள் கல்லாகிப் போகட்டும்
மயானத்தை நோக்கி நட..
காணாமல் போனவர்கள் திரும்பிவரும்
ஒரு நாளில் விடுதலை கிடைக்கும்
அங்கே உன் பறவைகளை பறக்கவிடு
மீண்டுமுன் பால்யத்துக்குள் திரும்பு
இன்றைய நாள் அவ்வாறில்லை- ஆதலால்
சுதந்திரம் தேவை என் மகனே
ஒருநாள் இறப்பதற்கும்.
மரணத்தை நேசி
துரோகத்தை சுவாசி
சாபம் பெற்றது நம் இருப்பு

அப்பா!
தீனமானது இறைகுரல்
நிச்சலனம் நிறைந்தது மரணம்




புரியாத மொழி
அறியாத மொழி
தெரியாத மொழி
உன் பருவங்களால்

என் பருவங்களில்
உன் பார்வைகள்
அலை மோதும்
என் மனக்கடலில்

அர்த்தம் காண
முயலுகின்றேன்
அகராதியில்
அர்த்தமில்லை

உன் மௌனத்திற்கு
மௌனமான - உன்
மொழி அறிய
மொழி பெயர்க்கும்
இயந்திர உருவாக்க
நாசா விஞ்ஞானியாக
முயலுகின்றேன் - அதுவும்
உன் மௌனம் போல்

## காற்றில் ஏறி கை அசைக்கிறது

மனித இனம்
மனப் போராட்டத்தின்
அழுங்குப் பிடியில்
சிக்குண்டு உணவுக்கும்
உறக்கத்துக்கும்
நிரந்தர...
விடை கொடுத்து
நடைப்பிணமாய்
வாழும் உறவுகள்
நம்மிடையே!
சான்றுகள்
அத்தனையும் சாட்சிகளாக!
நம்பிக்கையை
மனதில் இருத்தி
காணாமல் போன
உறவுகளுக்கு
விடை தேட வீதிகளில்
அலைந்தபோது
விடையில்லா வினாக்கள்
மட்டும் காற்றில் ஏறி
கை அசைக்கிறது

**முல்லை ரமணன்**

## பகடைக் காய்களாக

**உலக சதுரங்கத்தின்
பகடைக் காய்களாக
நாங்கள் - எங்கள்
ஆணவத்தின் மீதான
சுயநல அரசியல்
விளையாட்டில்
பார்வையாளர்களாக
மட்டுமே நாம்
ஒரு நம்பிக்கையில்
மீளெழும் போதெல்லாம்
குதர்க்கத்தால்
குதறப்படுகிறது
எம் வாழ்வு
"செக் மேட்" இல்லால்
தொடரப் போகும்
இந்த விளையாட்டில்
தோற்கப்போவது
நீங்களா, நாங்களா
புரியவில்லை.**

வேல்நந்தன்,
புலோலியூர்



## மனிதாபிமான மதிப்பு

*சுமத்தப்படும்
குற்றச்சாட்டுக்கள்
எதுவாயினும்
அது அப்படியே
சம்பந்தப்பட்டவர்களால்
அமர்த்தப்பட்டு
அமுக்கப்படும்!*

*ஆதாரங்களுடன்
ஆவணப்படுத்தப்படும்
குற்றச்செயல்கள் கூட
சுற்றிச் சுழலவிடாமல்
கச்சிதமாய்
குழி தோ
புதைக்கப்பட்டுவிடும்!*

*மனச்சாட்சிக்கு
மதிப்பளிக்காத
மாரீச மாமாக்கள்
மாயமான் வடிவம் எடுத்து
அரசியல் வானில்
உலா வரும்வரையில்
உண்மைகளுக்கு ஒரு
போதும் உச்ச நீதி
கிடைக்கப்போவதில்லை!*

**சேனையூரான்,
மூதூர் கிழக்கு.**



## மாயையின் விலகல்...!

**பல புறாக்கள்
சிறகடித்தால் தான்
கோபுரத்திற்கு மகிமை**

**பௌர்ணமி கீழ் நோக்கி
நகர்ந்தால் தான்
உருகி ஓடும் பனிக்கட்டிக்குப்
பெருமை**

**எறும்புகளின் ஊர்வலம்
ஒரு பள்ளத்தாக்கை
கடந்தால் தான்
உழைப்பாளிக்கு இனிமை**

**சவ ஊர்வலத்தை விட
பல ஊர்வலங்கள்
நிறுத்தப்பட்டால் தான்
ஒரு தேசம் மக்களுக்கு உரிமை**

**முதல் காதல் அடுத்த பாதியில்
உன்னைத் தொடாமல்
இருந்தால் தான் இப்போ
உன் இதயத்தில் தலை
சாய்ந்திருக்கும்
மனைவிக்கு அது இனிமை**


**பல சிதறல்கள்
மாயையிலிருந்து
விலக்கப்பட்டால் தான்
உன் ஆன்மா
உனக்கு கவிதை**

**சா. ரமேஸ்குமார்
மருதனார்மடம்.**

## என் இதயம்

காயப்படுத்தினாலும்
கஸ்டப்படுத்தினாலும்
இப்போதெல்லாம்
வலிப்பதேயில்லை
உனக்கென கொடுத்தபின்
என் இதயம்

**கு.தவசீலன்
பளை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்பாக ஆடட்டுமே

அணியின் வெற்றிக்கு ஒரு வீரர் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கினாலும் ஏனைய வீரர்களின் ஒத்துழைப்பு கிடைத்தால் மட்டுமே இறுதி வெற்றியை எட்ட முடியும். ஆனால் பொதுவாகவே போட்டி ஒன்றில் விளையாட்டு அணிகள் தோற்றுவிட்டால், உடனேயே அந்த அணியில் உள்ள நட்சத்திரவீரர்களை நோக்கியே பலரின் சுட்டுவிரல்களும் நீள்வது வழமை.

இந்த நிலையில் ஆர்ஜென்ரீனா அணி யின் நம்பிக்கை நட்சத் திரமான லயனல் மெஸ் ஸிக்கு 'உலகக்கிண்ணத்தைப் பெற்றுத் தர வேண்டும்" என்று ரசிகர்கள் இப்போதே அழுத் தம் கொடுக்க ஆரம்பித்துவிட்டனர். இதனால்



மெஸ்ஸிக்கு ஆதரவாக களமிறங்கியுள்ளார் உதைபந்து ஜாம்பவான் மரடோனா. "மெஸ்ஸி எப்போதுமே அணிக்காக அர்ப்பணிப்புடன் ஆடும் வீரர். உலக் கிண்ணத்தை பெற்றுத்தந்தால் மட்டுமே அவர் சிறந்தவீரர் என்று பொருள் இல்லை. உலக்கிண்ணத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என தனியொரு வீரர் மீது கொடுக்கும் அழுத்தம் குறித்த தொடரில் மெஸ்ஸியின் இயல்பான ஆட்டத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தி விடும். எனவே எல்லோரும் எமது அணி கிண்ணத்தை வெல்ல வேண்டும் எனப் பிரார்த்திப்போம். மாறாக வீரர்கள் மீது சுமையை ஏற்றாதீர்கள். அவர்களை இயல்பாக ஆடவிடுங்கள்" என்று மரடோனா சொல்லியிருக்கிறார். மரடோனா சொன்னது உதைபந்தாட் டத்துக்கு மட்டுமல்ல. மற்றைய விளையாட்டுத்துறை வீரர்களுக்கும் ரசிகர்களுக்கும் பொருந்துமல்லவா.

## ஊடகத்துக்கு வாய்ப்பூட்டு



ஐ.பி.எல். சூதாட்டத்துக்கும் டோனிக்கும் தொடர் பிருப்பதாக அண்மைக்காலமாக செய்திகளை வெளியிட்டு வந்த "ஸீ" தொலைக்காட்சி மீது அவதாறு வழக்கைத்தொடர்ந்துள்ளார் இந்திய அணித்தலைவர் டோனி.

சென்னை சுப்பர்கிங்ஸ் அணியின் மேலாளர் குருநாத் மெய்யப்பனுடன் இணைந்து ஆட்ட நிர்ணய சதியில் டோனி இறங்கி, சூதாட்டக் காரர்களுக்கு உதவினார் என்று குறித்த ஊடகம் தொடர்ச்சியாக செய்திகளை வெளியிட்டு வந் தது. சூதாட்டப் புகாரில் சிக்கி கைதான முக வர்களின் சாட்சிகளை அடிப்படையாக வைத்தே இந்தக் குற்றச்சாட்டை "ஸீ" தொலைக்காட்சி டோனி மீது சுமத்தியிருந்தது. ஆனால் உல கக்கிண்ண 20/20 போட்டிகள் நடைபெற்று வரும் சூழலில் இப்படியான பொய்யான குற் றச்சாட்டுகள் மன உளைச்சலை ஏற்படுத்துவ தாகவும் அதனால் தனது ஆட்டத்திறனில் பாதிப்பு ஏற்படலாமெனவும் டோனி கருதி- னார். எனவே குறித்த ஊடகத்தின் வாயை மூடுவதுதான் ஒரே வழியென்று எண்ணி, 100 கோடி ரூபா நஷ்ட ஈடு கோரி அவதாறு வழக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் உடனடியாக டோனி பற்றிய செய்திகளை "ஸீ" தொலைக்காட்சி வெளியிடவும் தடை விதித்துள்ளது.

## உண்மையைச் சொல்லக்கூடாதா?

என்னதான் கனவான்களின் விளையாட்டு என்று சொல்லப்பட்டாலும் நிறைய அபத்தமான விதிகளைக் கொண்டதாகவே கிரிக்கெட் இருக்கிறது. அதிலும் 'டக்வேர்த்-லூயிஸ்' முறை பற்றிச் சொல்லவே வேண்டாம். மழை போன்ற எதிர்பாராத காரணிகளால் ஆட்டம் குழம்பினால் வெற்றி-தோல்வியைத் தீர்மானிக்க பயன் படுத்தப்படும் முறையே இது. ஆனாலும் எல்லாச் சந்தர்ப் பங்களிலும் திருப்தியான முடிவை இந்த முறை மூலம் பெறுவது கடினம். இதனால் பல அணிகள் முக்கியமான போட்டிகளில் 'டக்வேர்த் - லூயிஸ்' முறை யால் வெல்ல வேண்டிய கட்டங்களில் கூட தோல்வியைத் தழுவியுள்ளன. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக்கிண்ண 20/20 போட்டியொன்றில் இங்கிலாந்துக்கு எதிராக ஆடிய நியூசிலாந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. உண்மையில் போட்டி இங்கிலாந்தின் பக்கம் திரும்ப தொடங்கிய சமயத்தில் போட்டி மழை மற்றும் போதிய வெளிச்சமின்மை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. அப்போது இங்கிலாந்தை விடவும் ஓட்டச்சராசரியை நியூசிலாந்து கொண்டிருந்த போதும், இங்கிலாந்தின் சுழல் பந்துவீச்சாளர்கள் பந்துவீச ஆரம்பித்திருக்கவில்லை. அத்தோடு 'பவர்பிளே' கூட முடிந்திருக்கவில்லை. பவர் பிளேயில் களத்தடுப்பு விதிகள் துடுப்பாட்ட வீரருக்கு சாதகம் என்பதால் எல்லா அணிகளுமே இந்த 'பவர்பிளேயில்' அடித் தாடுவது வழமை. அதன் பின்னரே நிதான ஆட்டத்துக்கு வரு வதுண்டு. இவ்வாறான நிலை காரணமாகவே 'டக்வேர்த் லூயிஸ்' முறையால் நியூசிலாந்து வெல்ல முடிந்தது. இத னால் கடுப்பான இங்கிலாந்து 20/20 அணியின் தலைவர் ஸ்ருவர்ட் ப்ரோட் நடுவர்களின் செயலைக் கண்டித்து சில வார்த்தைகளைச் சொல்லி விட்டார். அவ்வளவு தான்! எப்படி எங்கள் நடுவர்களைக் குறை சொல்லமுடியும் என்று பொங்கியெழுந்து, விதித்து விட்டார்கள் அபராதத்தை. வாயைத் திறந்த குற்றத் துக்காக பணத்தை கட்டி விட்டு வாய்க்கு ஒட்டு வதற்காக ஒரு பெரிய பிளாஸ்ரரை தேடித் திரி- கிறார் ப்ரோட்.

# அதிர்ச்சிக்கே அதிர்ச்சி

அயர்லாந்தின் மறுபெயர் அதிர்ச்சி என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் அந்த அணி பங்குபற்றும் ஒவ்வொரு தொடரிலும் ஏதாவது ஒரு பலமான அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்காமல் செல்வதில்லை. உலகக்கிண்ண 2007 ஆம் ஆண்டு நடந்த ஒருநாள் உலகக்கிண்ண போட்டியில் அயர்லாந்து கொடுத்த அடியில் பாகிஸ்தான் அணி முதற்சுற்றோடு வெளியேறியது. அதுவும் அந்த அணியின் பயிற்சியாளரான பொப் வுல்மர் அன்றிரவே இந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியாமல் விடுதி அறையில் உயிரைத்துறந்தார். அப்படி அதிர்ச்சிக்கு பெயர் போன அயர்லாந்துக்கே அதிர்ச்சியைக் கொடுத்திருக் கிறது நெதர்லாந்து.

உலகக்கிண்ண20/20 போட்டிகளில் 'சுப்பர்-10'பிரிவுக்கு செல்லும் அணி எது என்பதை தீர்மானிப்பதற்காக நடந்த இந்தப்போட்டியில் அனுபவமே இல்லாத நெதர்லாந்தின் பந்துவீச்சாளர்களை துவம்சம் செய்து அயர்லாந்து அணி,189 ஓட்டங்களைக் குவித்தது. அடுத்த சுற்றுக்குள் நெதர்லாந்து அனி நுழைய வேண்டுமானால் 190 ஓட்டங்களை வெறும் 14.2 பந்துப்பரிமாற்றங்களில் எடுக்கவேண்டும். 190 ஓட்டங்களை எடுப்பதே நெதர்லாந்தால் முடியாத காரியம். அதற்குள் எப்படி 14.2 பந்துப்பரிமாற்றத்தில் அதை அடைவது.? என்றுதான் எல்லோரும் எண்ணினர். ஆனால் தன்னம்பிக்கையோடு களமிறங்கிய நெதர்லாந்து வீரர்கள் "செய் அல்லது செத்து மடி" என்ற ஆவேசத்தோடு துடுப்பைச் சுழற்றினார்கள். வேகம் கைகொடுக்க 13.5 பந்துப்பரிமாற்றத்திலேயே வெற்றி இலக்கை தொட்டு அடுத்த சுற்றுக் குள் நுழைந்தது நெதர்லாந்து. பாவம்! வழக்கமாக எல்லா அணிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தே பழக்கப் பட்டு போன அயர் லாந்து இம்முறை அதே அதிர்ச்சி வைத் தியத்தை தான் வாங் கிக் கொண்டு நடை யைக் கட்டியது.





## ஊடகவியலாளரான மரிய ஷரபோவா

குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் போது பிரபல ரென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவா, பத்திரிகையாளராக பணியாற்றி யுள்ளார்.

ரஷ்ய ரென்னிஸ் நட்சத்திரமான மரியா ஷ ரபோவா (வயது- 26) நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர். சைபீரியாவில் பிறந்த இவர் தனது 2 வயதில் ரஷ்யாவின் சோச்சி நகருக்கு வந்து 6 ஆண்டுகள் வசித்துள்ளார். இந்த நகரில் தான், சமீபத்தில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடந்தது. அப்போது இவர், என்.பி.சி., 'ரீவி' நிறுவனத்தில் கலாசார தூதராக செயற்பட்டு, இரண்டு வாரம் பத்திரிகையாளராகவும் பணியாற்றினாராம்.

"ரென்னிஸில் எனக்கு எல்லாமே அத்துப்படி. அதனால் வெற்றிகளை இலகுவாகக் குவிக்க முடிந்தது.

ஆனால் ஊடகப்பணி பற்றி எனக்கு எதுவுமே தெரியாது; அதனால் மிகவும் கஷ்டப்பட்டேன். என்றாலும் எனக்கு ஊடகத்துறையும் மிகப்பிடித்திருக்கிறது. ரென்னிஸ் உலகில் இருந்து ஓய்வெடுத்த பின் கட்டாயம் முழு- நேர ஊடவியலாளராக மாறுவேன்" என்று சொல்கிறார் இந்த அழகுப்பதுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் – 5



சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர் இங்கு பிரசுரமாகின்றது.

### சீரடி பாபாவின் அவதாரமும் அவரின் முதல் சீரடி விஜயமும்

சீரடி சாயிபாவின் பெற்றோர், பிறந்த இடம் இவற்றைப் பற்றி ஒருவருக்கும் தெரியாது. பாபாவிடமும் மற்றவர்களிடமும் பல கேள்விகள் கேட்கப்பட்டன. ஆனால் திருப்தியான பதிலோ தகவல்களோ இதுவரை கிடைக்கவில்லை. சாதாரண மனிதர்களையொப்ப நாமதேவர், கபீர் முதலியோர் பிறக்கவில்லை. அவர்கள் சிசுக்களாக முத்துக்களின் தாயினிடத்தில் (ஆற்றில்) காணப்பட்டார்கள். நாமதேவ் கோணாயியால் பீமரதி ஆற்றிலும் கபீர், தமால் என்பவரால் பாகீரதி ஆற்றிலும் கண்டெடுக்கப்பட்டார்கள். சீரடிபாபாவின் விடயமும் அதையொத்ததாகும். பக்தர்களுக்காக ஒரு வேப்ப மரத்தடியில் 16 வயது இளைஞனாக தாமே முதலில் தோன்றினார். அப்போதே பிரம்ம ஞானத்தால் நிரம்பியவராகக் காணப்பட்டார். கனவிலும் இவ்வுலகப் பொருள்களின் ஆசை அவருக்கு இல்லை. மாயையை அவர் உதைத்து தள்ளினார். முக்தி அவர் தம் காலடியில் பணி செய்தது. சீரடியைச் சேர்ந்தவரும் நாநாசோப்தாரின் தாயாருமாகிய ஒரு பாட்டி அவரைக் கீழ்கண்ட விதமாக வர்ணிக்கிறார்.

அழகும் சுறுசுறுப்பும் மிகுந்த ஆற்றலும் உடைய இவ் இளைஞன் முதலில் வேப்ப மரத்தின் அடியில் ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு காணப்பட்டார். அந்தக்கிராமத்து மக்கள், இத்தகைய இளம் வயது உடையவன் வெப்பத்தையோ குளிரையோ பொருட்படுத்தாது அத்தகைய கடின பயிற்சி பழகுவதைக் கண்ணுற்ற ஆச்சரியத்தினால் தாக்கப்பட்டனர். பகலில் ஒருவருடனும் பழகுவதில்லை. இரவில் ஒருவருக்கும் அஞ்சுவதில்லை. இவ்விளைஞன் எங்கிருந்து வந்தான் என்று மக்கள் ஆச்சரியப்பட்டுக் கேட்டுக் கொண்டனர்.

அவன் மீது எல்லோரும் அன்புகொள்ளும் அளவிற்கு அவனுடைய உருவம்சங்க ளெல்லாம் அமைந்திருந்தன. வெளித் தோற்றத்திற்கு இளைஞனாகக் காணப்பட்டான். ஆயினும் அவன் செய்கைகள் அவன் உண்மையிலேயே ஒரு 'பரமாத்மா' என்பதை வெளியிட்டன. அவன் 'வேண்டுதல் வேண்டாமை' யின்மையின் பருப் பொருளாகவும் அனைவருக்கும் ஒரு மர்மமாகவும் இருந்தான்.

இந்த இளைஞனின் காலத்திலே வாழ்ந்த 'கண்டோபாகடவுள்' எனும் ஆன்மீகக் குருவை மக்கள் நாடினர். குருவே.. இவ்விளைஞனின் தந்தை யார்? அவன் எப்போது வந்தான் என்பதை சொல்லுமாறு கேட்கத் தொடங்கினார். கண்டோபா அவர்களை ஒரு மண்வெட்டியை எடுத்துவரச் சொல்லி ஒரு குறிப்பிட்ட இடத்தை தோண்டச் சொன்னார். அங்ஙனமே தோண்டப்பட்டபோது செங்கற்கள் காணப்பட்டன. அதற்கடியில் சமதளகல் ஒன்றும் இருந்தது. இந்தக் கல் அப்புறப்படுத்தப்பட்டதும் ஒரு நிலைக்கதவு தெரிந்தது. அதில் நான்கு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அது ஒரு நிலவறைக்கு அழைத்துச் சென்றது. அதில் பசுமுக உருவத்தில் ஜபம் செய்யும் பைகள், மரப்பலகைகள், ஜபமாலைகள் முதலியவை காணப்பட்டன. இங்கேதான் இவ்விளைஞன் 12 ஆண்டுகளாக ஆன்மீகத்தில் ஈடுபட்டான்.

பின்னர் மக்கள் இவ்விளைஞனிடம் இவற்றைப்பற்றிக் கேட்கத் தொடங்கினர். அவன் அவர்களை திசைதிருப்பி, அது தன்னுடைய குருவின் இடம் என்றும் அதை நன்றாகப் பாதுகாக்கும் படியும் வேண்டிக் கொண்டான். மக்கள் அப்போது கதவை முன்பிருந்தபடியே மூடிவிட்டனர்.

### மூன்று தங்குமிடங்கள்

வேப்பமரம் இருக்குமிடமும், அதைச் சுற்றியுள்ள இடமும் ஹரிவிநாயக் ஸாடே அவர்களால் வாங்கப்பட்டு 'ஸாடே'யின் பெயரில் ஒரு பெரும் கட்டிடம் (தங்குமிடம்) எழுப்பப்பட்டது. அங்கு திரண்ட புனித யாத்ரீகர்களுக்கு அது ஒன்றே தங்குமிடமாய் இருந்தது. ஒரு மேடை வேப்பமரத்தைச் சுற்றிக் கட்டப்பட்டது. தங்கும் இடமும் படிக்கட்டுக்களுடன் அமைக்கப்பட்டது. படிக்கட்டுக்களின் அடியில் ஒரு இருப்பிடம் இருக்கிறது. பக்தர்கள் அம்மேடையில் வடக்கு நோக்கி அமர்கிறார்கள். வியாழன், வெள்ளிக்கிழமை மாலை நேரங்களில் அங்கு வாசனைப் பொருள்களை எரிப்பவர்கள் இறைவன் கிருபையால் மகிழ்சியுடன் இருப்பர்.

இந்த தங்குமிடம் பழமையானது. உதிர்ந்து கொட்டும் தன்மை உடையதாகவும், பழுதுபார்க்கவேண்டியதாகவும் இருந்தது. தற்போது தேவையுள்ள பழுது பார்க்க வேண்டியவைகள், சேர்க்க வேண்டியவைகள் , மாறுபாடுகள் எல்லாம் ஸமஸ்தானத்தால் (நிர்வாகத்தால்) செய்யப்பட்டன.

சில ஆண்டுகளுக்குப் பின் தீக்ஷித் என்ற பம்பாய் சட்டத்தரணி இங்கிலாந்து சென்றிருந்தார். அங்கு நேரிட்ட ஒரு விபத்தில் தனது காலை முறித்துக் கொண்டார். இக்காயம் எந்த விதத்திலும் குணப்படும் வழியைக் காணவில்லை. நானாஸாஹேப் சார்தோர்கர், என்ற இரண்டு பக்தர்கள் சீரடிபாபாவிடம் செல்லும்படி அறிவுறுத்தினார். எனவே அவர் 1909 இல் பாபாவைக் கண்டு தனது கால் ஊனத்தைவிட தனது மன ஊனத்தை குணம் ஆக்கும் படி வேண்டிக்கொண்டார். சாயிபாபாவின் தரிசனத்தால் மகிழ்ச்சியுற்று சீரடியிலேயே தங்கி விட முடிவு செய்தார். எனவே தனக்காகவும் அடியவர்களுக்காவும் ஒரு தங்குமிடத்தை எழுப்பினார். 10-12-1910 இல் அக்கட்டடத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது. இந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 1911 இல் ஸ்ரீராமநவமி தினத்தில் உரிய மரியாதைகளுடனும் சம்பிரதாயங்களுடனும் பிரவேசம் செய்யப்பட்டது.

அத்துடன் நாக்பூரைச் சேர்ந்த புகழ் பெற்ற லட்சாதிபதியான புட்டி அவர்களால் மற்றொரு அரண்மனை மாளிகையும் எழுப்பப்பட்டது. இங்கேதான் சீரடிசாயிபாபாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இது தற்போது சமாதி கோயில் (சமாதி மந்திர்) என வழங்கப்படுகிறது.

(ஞானத்தை இன்னும் தேடுவோம்...)

## சொற்சிலம்பம் போட்டி இல. 613

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | ■ |
| | ■ | 6 | | | ■ | 7 | 8 |
| 9 | 10 | | ■ | 11 | 12 | | |
| 13 | | | 14 | ■ | 15 | | ■ |
| | ■ | 16 | | 17 | | ■ | 18 |
| ■ | 19 | ■ | 20 | | ■ | 21 | |
| 22 | | 23 | ■ | 24 | | | |
| 25 | | | | | ■ | 26 | |

**மேலிருந்து கீழ்**

1. சுமங்கலிப் பெண்ணின் நெற்றியை அலங்கரிப்பது.
2. அறுசுவையில் ஒன்று.
3. சமய.
4. பூட்டான் தலைநகர் .
5. பொய்.
8. பிடியைத் தளர்த்து.
10. மச்சம்.
12. மகாத்மா காந்தி அணிந்த ஆடை வகை.
14. மதி.
17. பஞ்ச பாண்டவரில் மூத்தவர்.
18. சந்திரன்.

**இடமிருந்து வலம்**

1. ஒன்றின் அண்ணளவான பெறுமதி.
6. அழிப்பு.
7. சூரியனின் மற்றொரு பெயர்.
9. கன்னி கழியாத இளம் பெண்.
11. ஊட்டு.
13. இயலாது.முடியாது என்பதை வெளிப்படுத்தல்.
15. மறி.
16. சிலைகளில் வீற்றிருப்பவர்.
20. செல்வம்.
21. சம்மதச் சொல்.
22. மகாகவி எனப் போற்றப்படுபவர்.
24. பெறுமதி.
25. மகாபாரத முக்கிய பாத்திரங்கள்.
26. ஒரு காட்டு மிருகம்.

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 613

சொற்சிலம்பம் போட்டி 611ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 09 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் மற்றும் ஏப்ரல்23ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 611 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.அகவை, 2.மதித்தல் , 3. வசியம், 4.தினம், 5.ஆதனம், 6.வில், 10. திருவாசகம், 1 2. அலை, 1 3.மித்திரன், 1 4.அதிபதி, 15.வேல்,17.வாளி, 18.சகல,20.தடு, 21. நவ,

**இடமிருந்து வலம்**

1.அமராவதி,5.ஆவி , 7.கதி, 8.சினத்தல், 9.வைத்தியம், 11.தரும், 12.அம்மி, 14.அல்வா, 15.வேலை, 16.சவால், 18.சதி ,19.பதகளி, 21.நகர, 22.திடும்,23.கோவலன்,

### போட்டி இல. 610 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | ஜெ. வதனி, இல.300, மாயவனூர், வட்டக்கச்சி, கிளிநொச்சி. |
| 2ஆம் பரிசு | அ. ஷண்முகப்பிரியா, தரம்-8,வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,யாழ்ப்பாணம். |
| 3ஆம் பரிசு | செல்வராசா திவ்யா, இல; 6-8/(AC), வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) இ. விஜயசிறி,
4ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை.

(2) க. குணபாலன்,
அளவெட்டி கிழக்கு, கும்பலை, அளவெட்டி.

(3) செ.தவலிங்கம்,
'தசபவனம்', சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

(4) செ. இரஞ்சிதமலர்,
'சாருஜா', சிவன்கோயில்வீதி, புத்தூர்.

(5) எஸ்.பாலசுப்பிரமணியம் ,
இல;-176/37, லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை.

(6) திருமதி. வி.மகிந்தினி,
நீர்வேலி தெற்கு,நீர்வேலி.

(7) சிவகுமாரன் சயந்தன் ,
இலங்கை மின்சாரசபை,A9 வீதி, மாங்குளம்.

(8) சி. ஜெயந்தினி,
மே/பா-வே- இராசநாயகம், சோறன்பற்று,பளை.

(9) புஷ்பம் மரியதாசன்,
'மங்கள இல்லம்', நவாலி தெற்கு, மானிப்பாய்.

(10)சி. அவிஷானி ,
குமரவாசம், ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலா? காமமா?


**கொற்றவை**

எல்லாப் பழங்குடி இனத்தவர்களையும் போல் களிப்புடன் வாழ்ந்தவர்கள்தான் ஈக் இன மக்கள். எனினும் திடீரென அவர்களின் மனங்கள் காதல் உணர்வை இழந்து நின்ற காலம் உருவெடுத்தது. உகண்டா அரசு ஈக் இனமக்கள் பாரம்பரியமாக வேட்டையாடி வந்த இடத்தில் இனிமேல் வேட்டையாடவே கூடாது என்று தடைவிதித்தது. இதனால் அந்த மக்களின் பொருளாதாரம் சிதைவுற்றது.

மூன்று தலைமுறைகள் கடும் வறட்சிக்கும், பட்டினிக்கும் பிறகு ஈக் இனத்தவர்கள் எதிர்ப்பு மனப்பான்மை உள்ளவர்களாகவும், சுய நலமுள்ளவர்களாகவும், அற்பத்தனம் உள்ளவர்களாகவும் மாறினார்கள். மேலும், அவர்கள் காதலையும் (இங்கு காதல் எனப்படுவது உடலுறவு கொள்வதைக் குறிக்கிறது), மற்ற நற்பண்பியல்களுடன் தொலைத்து விட்டனர். ஏனெனில் அதை அவர்கள் வழங்க இயலாத நிலையில் இருந்தனர். அது பொருளாதாரம் சார்ந்ததாக இருந்தது. அவர்கள் விழித்திருக்கும் ஒவ்வொரு விநாடியையும் அவர்களது கழிவறையில் உட்கார்ந்து கொண்டும், பாலியல் உறவு கொண்டும் (மிகவும் அரிதான செய்கை) உணவுக்கு வானத்தை உற்று நோக்கிக் கொண்டும் செலவிட்டனர். ஒருவருக்கொருவர் சுய இன்பம் செய்துகொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் கூட அதில் முழுமையான இன்பத்தை பெறமுடியாமல் இருந்தது. ஏனெனில் அவர்கள் எப்போதும் அவர்களுடைய எண்ணம் அடுத்தவேளை உணவு கிடைப்பது பற்றியே சுழன்றுகொண்டிருந்தது. மேலும் சீரான உணவின்மையால் அவர்களுடைய உடல் ஆரோக்கியமும் மோசமான நிலையை அடைந்திருந்ததால் காதல் சார் எண்ணங்கள் தோன்றவில்லை.

சத்துக் குறைபாடுள்ளவர்களுக்கு காதல் உணர்வு எத்தகைய மனவெழுச்சியை ஏற்படுத்தும் என்பது இங்கு கேள்விக்குறியதாக இருக்கிறது. சோமாலிய மக்களுக்கு காதலை அனுபவிக்கும் அகச் சூழலும் இல்லை, புறச் சூழலும் இல்லை.

ஒரு பழங்குடி இனத்தவரிடையே காதல் இவ்வளவு விரைவில் அழிந்து போகும் என்றால் அந்த உணர்வு மனிதனுக்கு அத்தியாவசியமான ஒன்று அல்ல என்கிறார் மானிடவியல் அறிஞரான அக்கர்மென். இந்தச் சூழலில் காதல் பற்றிய புனிதத்தன்மை கேள்விக்குள்ளாகிறது. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்ற




ஒரு சர்ச்சைத் தொடர்

ஔவையாரின் கூற்று இங்கு ஆராயத்தக்கது.

இந்தியாவிலும் இலங்கையிலும் காதல் பற்றிய புனிதப் பித்து சகித்துக் கொள்ள முடியாத நிலையை எட்டியதில் சாதியத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. பசுவின்சிறுநீரைக் கூட புனிதம் என்று சொல்லி நம்மை அருந்தச் செய்யும் திறன் மிக்க புரோகிதர்கள் நம்மிடையே இன்னும் இருக்கின்றனர்.

**(இன்னும் பேசுவோம்)**

# காதல் பேசுவோம்



2. காதலியோடு தொலைபேசியில் உரையாடுகையில் உங்கள் மன உணர்வுகளை வெளிக்காட்டும்படியான எந்த ஒரு பிடியையும் கொடுத்துவிடாதீர்கள். நீங்கள் அதிகூடிய மகிழ்வாகவோ அல்லது கோபத்திலோ இருப்பதைக் காதலி உணர்ந்து விட்டால் உங்கள் கதை அம்போதான்.

மகிழ்ச்சியாக நீங்கள் இருக்கும் தருணங்களில்தான் தங்களுக்கு வேண்டிய சில காரியங்களை காதலிகள் சாதித்துக் கொள்வார்கள். குறிப்பாக உங்களுக்கு மற்றைய நேரங்களில் பிடிக்காத விடயங்களை இந்த நேரத்தில்தான் பேசமுற்படுவார்கள். நீங்களும் இருக்கும் புளுகத்தில் அதற்கெல்லாம் தலையாட்டி விடுவீர்கள். பின்னர் சுயநினைவுவரும்போதுதான் 'அட இதற்கா சம்மதம் சொன்னேன்' என்று உங்களை நீங்களே செருப்பால் அடித்துக்கொள்வீர்கள்.

மாறாக அதியுச்ச ஆத்திரத்தில் நீங்கள் இருந்தால் இதுதான் சந்தர்ப்பம் என்று இன்னும் உங்கள் கோபத்தை அதிகப்படுத்தி தங்கள் மீது நீங்களாகவே சண்டை பிடிப்பதுபோல நிலைமையை உருவாக்கிவிடுவார்கள். கடைசியில் தவறு அவர்கள் பக்கம் இருந்தாலும் நீங்கள்தான் குற்றவாளியாகவேண்டிய நிலை உருவாகும். எனவே ஆத்திரமோ ஆனந்தமோ எதுவாக இருந்தபோதும் அந்த உணர்வை உங்கள் காதலிக்குத் தெரியப்படுத்தாமல் இருப்பது புத்திசாலித்தனமாகும்.

3. உங்கள் நினைவு முழுதும் எப்போதும் காதலியைச் சுற்றி இருப்பதாகவே நம்பவைக்கவேண்டும். அதற்காக பேச ஒன்றுமே இல்லாவிட்டாலும்கூட காதலியின் பெற்றோரில் இருந்து அவர்கள் வீட்டுப் பூச்செடிவரை நலம் விசாரிக்கத் தவறாதீர்கள். காதலி வீட்டுநாய்க்கு வருத்தம் வந்தால்கூட அ[illegible] நாள் முழுதும் 'சுகம் வந்திட்டுதோ?' என்று போனிலும் [illegible]ளிலும் விசாரித்துக்கொண்டிருங்கள்.

"என்வீட்டு நாயிலேயே இத்தனை கரிசனையென்றால் என் மீது எவ்வளவு காதல் இருக்கும்?" என்று காதலி உருகுவாள். வேண்டுமென்றால் நாயை வருத்தம் பார்க்க 'ஹோர்லிக்ஸ்', 'நெஸ்டமோல்ட்' சகிதம் ஒருநடை காதலிவீட்டுப்பக்கம் போய்வருவது உங்கள் காதல் நங்கூரம் நச்சென்று பாய்வதற்கு ஏதுவாகும்.

சிலவேளைகளில் உங்களுக்கில்லாத சூடு, சுரணை, வெட்கம் என்பனவெல்லாம் தப்பித்தவறிக்கூட உங்கள் செல்போனுக்கு வந்துவிடாமல் பார்த்துக்கொள்வதும் அவசியம்.

**(அடுத்த வாரமும் உரையாடுவோம்)**




# ஈரடியில் இதயங்கள் பற்றி...! 3

**— சரவணா கார்த்திகேயன்**

இரண்டே வரிகளில் உலகின் அத்தனை விடயங்களையும் அடக்கிய திருக்குறளில் காமத்துப் பாலை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எந்தக் காலக் காதலுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அது கொண்டுள்ளது. வள்ளுவர் எழுதிய காதல் குறள்களுக்கு நவீன கவிதைவடிவில் பொருள் சொல்லும் ஒரு புதிய முயற்சியே இந்தப் பகுதி.

கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்
பேதைக்கு அமர்த்தன கண்.
(குறள் 1084)

பஞ்சைப் போல, பட்டாடைபோல
மென்மையானவள் தான்
திருஷ்டிப் பொட்டாயிந்த
உயிர் தின்னும் கண்கள்.

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து.
(குறள் 1085)

ஒரு பெண்ணின் கண்களை
அதன் வசீகரத்தைப் பற்றிய
குறிப்புகள் நிறைந்திருக்கும்
என் மரண வாக்குமூலத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெலுங்கிலும் மலையாளத்திலும் நித்யா மேனனுக்கு இருக்கும் மதிப்பு தமிழில் அவருக்கு இல்லை என்பதை மாலினி 22 பாளையங்கோட்டை திரைப் படத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.

மாலினி 22 படத்திற்கு பிறகு அவர் தமிழில் நடித்த ஜே.கே எனும் நண்பனின் வாழ்க்கை திரைப்படம் வாங்க ஆள் இல்லாமல் முடங்கியுள்ளது.

இந்தநிலையில் நித்யாவை, படத்தில் நடிக்க வைக்க அணுகும் இயக்குநர்களிடம் அதிக உத்தரவுகளைப் போடுகிறாராம்.

தான் நடிக்கும் படத்தில் எது எது இருக்கக்கூடாது என ஒரு பட்டியலே முன் வைக்கிறாராம்.

ஆகையால் இது வேலைக்கு ஆகாது என கேரளா வரை செல்லும் இயக்குநர்கள் நித்யாவின் வீட்டை எட்டியே பார்ப்பதில்லையாம்.

# நித்தியாவை நிராகரிக்கும் இயக்குநர்கள்



நித்யா மேனன்

# 'நிமிர்

ஆரம்பகாட்சி முதல் இறுதிகாட்சி வரை ரசிகர்களின் கைதட்டல்களுக்கு குறைவில்லாத வகையில் வெளிவந்திருக்கிறது 'நிமிர்ந்து நில்'.பி.சமுத்திரகனியின் இயக்கத்தில், சமூகப்பொறுப்புணர்வுடன் கூடிய கதையாக அமைந்திருக்கிறது.

கதைப்படி, நாசர் நடத்தும் ஆசிரமம் ஒன்றில் தங்கி படித்து வரும் ஜெயம் ரவி, படிப்பு முடிந்து தனியார் தொழில் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருகிறார். சட்டம், ஒழுங்கை மக்கள் மதிப்பதில்லை என்று மனசுக்குள் பொங்கி எழும் ஜெயம் ரவி ஒருநாள், போக்குவரத்துப் பொலிஸாரிடம் மாட்டிக் கொள்கிறார். சகல ஆவணங்களும் சரியாக இருந்தும் தண்டப் பணம் கட்டச் சொல்கிறார் போக்குவரத்துப் பொலிஸார். இல்லையென்றால் 100 ரூபாய் லஞ்சமாக கேட்கிறார்.

ஆனால், லஞ்சம் கொடுக்க ஜெயம் ரவி மறுக்கிறார். அதனால், நீதிமன்றம் வரை செல்ல வேண்டியதாகிறது. அங்கு நீதிமன்றில் தன்னிடம் லஞ்சம் கேட்ட எல்லோரையும் மாட்டிவிடுகிறார். இதனால், அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால், பாதிக்கப்பட்ட அதிகாரிகள் ஜெயம் ரவியை அடித்து துவம்சம் செய்கிறார்கள்.

ஆனால், அசராத ஜெயம் ரவி ஊழல் அதிகாரிகளை மாட்டிவிட புது திட்டம் தீட்டுகிறார். அதாவது, இல்லாத ஒரு ஆளுக்காக அரசு அடையாள அட்டைகளையும், சான்றிதழ்களையும் நல்ல அதிகாரிகளின் துணையோடு பெறுகிறார். இதற்காக லஞ்சம் கொடுத்ததை வீடியோவும் எடுத்துவிடுகிறார்.

இந்த வீடியோ ஆதாரத்தை கோபிநாத் உதவியுடன் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் ஒளிபரப்புகிறார். இதில், டாக்டர், நீதிபதி, பொலிஸ், எம்.பி. என 147 பேர் சிக்குகிறார்கள். அனைவரையும் மக்கள் முன்னாலும், சட்டத்தின் முன்னாலும் நிறுத்துகிறார் ஜெயம் ரவி. இதனால், கொதிப்படைந்த அதிகாரிகள் ஜெயம் ரவியை பழிவாங்க முடிவெடுக்கின்றனர்.

இறுதியில் ஜெயம் ரவியை அவர்கள் பழிவாங்கினார்களா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

லஞ்சத்துக்கு எதிராக தமிழில் வெளிவந்த 'இந்தியன்', 'சாமுராய்', 'சிட்டிசன்', 'அந்நியன்' ஆகிய படங்களில் வரிசையில் நிமிர்ந்து நில் படமும் நிற்கிறது. ஜெயம் ரவி மிகவும் சிரத்தை எடுத்து நடித்திருக்கிறார். சண்டைக் காட்சிகளில் சிறப்பாக நடித்திருக்கிறார். இப்படத்தில் இரண்டு வேடங்களில் வரும் இவர், இரண்டிலும் நல்ல வித்தியாசத்தை காட்டியிருக்கிறார்.

அமலாபாலுக்கு இந்த படத்தில் நடிப்பதற்கான வாய்ப்பு குறைவே. கதாநாயகனை காதலிக்கவும், காதல் பாடல்களுக்கு மட்டுமே பயன்பட்டிருக்கிறார்.

இவர் இல்லாவிட்டாலும் படத்திற்கு எந்
பும் இல்லாதது போன்றே இருக்கிறது. 'க
கம்' என்ற பட்டப்பெயரோடு அறிமுகமா
நகைச்சுவையில் கொஞ்சம் சிரிக்க வைத்தி
சரத்குமார், கோபிநாத் ஆகியோர் படத்தி
நேரமே வந்தாலும் நிறைவாக செய்திருக்
முதல் பாதியில் விறுவிறுப்பாக செல்லும் தி
பிற்பாதியில் ஏனோ ஆமை வேகத்தில்
தனி மனிதன் திருந்தினால் தான் நாடு
என்ற கருத்தை சொல்ல வந்திருக்கிறார்
சமுத்திரகனி. இதில், கொலை, ரத்தம் எ
டாமல் இருந்தது கொஞ்சம் நிம்மதியை
சமுத்திரக்கனியின் முந்தைய படமான
படத்தை ஒப்பிடும்போது, கொஞ்சம் சறுக்க
ஜீ.வி.பிரகாஷ் இசையில் பாடல்கள் சு
பின்னணி இசையில் கொஞ்சம் கவனப்
யிருக்கிறார்.




'எஸ்.எம்.பி. பிக்சர்ஸ்' நிறுவனத்துக்காக ஆம்பூர் எஸ். மகேந்திரன் தயாரிக்கும் படம் "ஒவ்வொரு நண்பனும் தேவை மச்சான்". இதில் கதாநாயகனாக புதுமுகம் மிதுன் அறிமுகமாகிறார். நட்பின் மேன்மையை எடுத்துக்கூறுவதாக இந்தப் படம் அமைகிறது. 'இருக்கு ஆனா இல்ல' திரைப்படத்தில் நடித்துள்ள மனிஷாஸ்ரீ இந்த திரைப்படத்தின் கதாநாயகியாக நடிக்கிறார். இவர்களுடன் 'சொல்லுங்க டாடி சொல்லுங்க' புகழ் 'சேட்டை" செந்தில், அசார், பாண்டு, சபீதா ஆனந்த், 'நாடோடிகள்' அர்ச்சனா, சிந்து போன்ற நட்சத்திரங்கள் இணைந்து நடித்துள்ளனர். நட்பின் மேன்மையை சொல்லும் 'ஒவ்வொரு நண்பனும் தேவை மச்சான்'. படத்துக்கு எச்.ஷாஜகான் இசையமைத்துள்ளார். படத்தில் ஆறு பாடல்கள். முழுவதும் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. பாடல்களை ராஜ ராஜ ராஜன் மற்றும் நிலா ரசிகன் எழுதியுள்ளனர். சுரேஷ் தேவ் நடனம் அமைத்துள்ளார். தமிழ் இணைய வாசகர்கள் மத்தியில் 'அப்பாவி தங்கமணி' என்ற பெயரில் புகழ் பெற்ற எழுத்தாளரான புவனா கோவிந்த் இந்த திரைப்படத்தின் கதையை எழுதியுள்ளார். அதற்கு திரைக்கதை அமைத்து வசனங்கள் எழுதி இயக்கி வருபவர், ராஜ ராஜ ராஜன்.

# நட்பின் மேன்மையை கூறும் படம்



நீண்ட இடைவெளிக்குப் பிறகு கவுண்டமணி நடிக்கும் படம் '49-ஓ'. இதை கௌதம் மேனனிடம் உதவி இயக்குநராக இருந்த ஆரோக்கிய தாஸ் இயக்குகிறார்.

வடிவேலு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் நடிக்கும் படம் 'ஜகஜ்ஜால புஜபல தெனாலிராமன்'. இந்தப் படத்தை யுவராஜ் இயக்குகிறார். டி.இமான் இசையமைக்கிறார். படத்தை ஏ.ஜி.எஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

இந்த இரண்டு படங்களையும் ஏப்ரல் மாதம் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. அதுவும் ஒரே நாளில் வெளியிடுவதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. கவுண்டமணி மற்றும் வடிவேலுவிற்கு அதிக அளவில் ரசி கர் கூட்டம் இருக்கும் நிலையில், இந்த இரண்டு படங்களும் திட்டமிட்டபடி ஒரே நாளில் வெளியானால் ரசிகர்களுக்கு இரட்டைத் திருவிழாவாக இருக்கும்.



# தம்பியின்

'இது நம்ம ஆளு'. இந்
நடிக்க, படத்தை இயக்கு
சன் இசையமைப்பாளர
இந்தப் படம் பற்றி குரல
என் அண்ணன் மற்று
அப்பா ஒரு நாட்டுப்பு
இவர்கள் இருவருடனும்
நான் இசைத்த சில இ
என்னை பாராட்டியது உ

# மணிரத்தினத்

மணிரத்தினம் தமிழ், 
படத்தில் மகேஷ்பா
நடிக்கவுள்ளதாக
ஆனால் ஐஸ்
எதிர்ப்பு தெரி
வேண்டாமா
கிறது. படப்பி
பதிலாக யா
செய்தாராம் ம
ஐஸ்வர்யாவுக்
நடிக்கல
பு
விக்
தத
டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு எந்த பாதிப்
கிறது. 'கருப்புத்தங்
அறிமுகமாகும் சூரி
க வைத்திருக்கிறார்.
யார் படத்தில் சிறிது
செய்திருக்கிறார்கள்.
சல்லும் திரைக்கதை,
வகத்தில் நகர்கிறது.
தான் நாடு திருந்தும்
ருக்கிறார் இயக்குனர்
ரத்தம் எதுவும் காட்
ம்மதியை தருகிறது.
படமான 'நாடோடி'
ஞ்சம் சறுக்கல்தான்.
டல்கள் சுமார்தான்.
ம் கவனம் செலுத்தி



# ...ர்ந்து நில்'




சினி விமர்சனம்



## 'உன் சமையல் அறையில்'



ஆஷிக் அபு இயக்கத்தில் வெளியாகி, மலையாளத்தில் வெற்றி வாகைசூடிய சால்ட் அன்ட் பெப்பர் படம், தமி ழில் 'உன் சமையல் அறையில்" என்ற பெயரில் மீள் உருவாகி வருகிறது. பிரகாஷ் ராஜ் இந்தப் படத்தை இயக்கி, தயாரித்து, அவரே கதாநாயக னாகவும் நடித்து வருகி றார்.

பிரகாஷ்ராஜ் ஜோடியாக சினேகா நடிக்கிறார். இவர்களுடன் ஊர்வசி, ஐஸ்வர்யா, தம்பி ராமையா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். முழுக்க முழுக்க சாப்பாட்டை மையப்படுத்தி இந்தப் படம் தயாராகி வருகிறது. படத்தின் பெரும் பகுதி படப் பிடிப்பு ஹைதராபாத்தில் படமாக் கப்பட்டுள்ளது. தற்போது படம் இறுதிகட்டத்தை எட்டியுள்ளது. இந்தநிலையில் படத்தை மே மாதம் வெளியிட இருப்பதாக கூறுகிறார் பிரகாஷ் ராஜ் .

## இளையராஜாவும் உலகின் சிறந்த இசையமைப்பாளர் பட்டியலில் ..

சினிமா தொடர்பான இணையதளமான டேஸ்ட் ஒஃப் சினிமா, உலகின் சிறந்த இசையமைப்பாளர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.



இதில் இத்தாலியன் கம்போஸர் மொர்ரிகோன் முதல் இடத்தையும், அவுஸ்திரேலியாவில் பிறந்த அமெரிக்க இசையமைப்பாளர் மேக்ஸ் ஸ்டைனர் 2ஆவது இடத்தையும், அமெரிக்க கம்போஸர் ஜான் வில்லியம்ஸ் 3ஆவது இடத்தையும் இசைஞானி இளையராஜா 9ஆவது இடத்தை பிடித்துள்ளனர்.

சிறந்த இசைக்கோர்ப்பு, இசைக்கருவிப் பட்டியல், இசை ஒருங்கிணைப்பு, பாடகர், பாடல் ஆசிரியர் ஆகிய பிரிவில் இளையராஜா சிறப்பான பணியை வழங்கியிருப்பதாக 'டேஸ்ட் ஒஃப் சினிமா' இணையதளம் பாராட்டியுள்ளது.

## இயக்குனருக்கு அதிர்ச்சி கொடுத்த கஜால்

சித்தார்த்-அமலாபால் நடிப்பில் காதலில் சொதப்புவது எப்படி என்ற படத்தை இயக்கியவர் பாலாஜி மோகன். இவர் அடுத்து வாயை மூடி பேசவும் என்ற படத்தை துல்கர்சல்மான்- நஸ்ரியாவைக்கொண்டு இயக்கியுள்ளார். இதையடுத்து, தனுஷை நாயகனாக வைத்து இயக்க அவரிடம் ஒரு கதை சொல்லி அனுமதியும் பெற்றிருக்கிறார். தற்போது வாயை மூடி பேசவும் படம் வெளியீட்டுக்கு தயாராகி விட்டதால், தனுஷ் நடிக்கும் படத்தின் நடிகர்-நடிகைகளை ஒப்பந்தம் செய்வதில் கவனத்தை திருப்பியிருக்கிறார். இந்த நிலையில், படத்தில் பிரபல நடிகை ஒருவரைத்தான் தனுசுக்கு ஜோடியாக நடிக்க வைக்க வேண்டும் என்று முடிவு செய்த பாலாஜிமோகன், சில நடிகைகளிடம் பேசிவிட்டு கடைசியாக காஜல்அகர்வாலை தொடர்புகொண்டு பேசியிருக்கிறார். கதையைக் கேட்டுவிட்டு காஜல் கொடுத்தாராம் அதிர்ச்சி வைத்தியம். 'நான் படத்திலே நடிக்கவேண்டும் வேண்டுமென்றால் தனுஷை தூக்கித்தான் ஆக வேண்டும். காரணம், நானும், அவரும் நடித்தால் அக்கா, தம்பிபோல் இருப்போம். ஜோடிப் பொருத்தம் ஆகாது' என்றாராம் காஜல். இதைக்கேட்ட பாலாஜிமேகன்., எந்த பதிலும் சொல்லாமல் திரும்பி விட்டாராம் .

இதனால் தனுசுக்கு பொருத்தமான வேறொரு நடிகையை நடிக்கவைக்க திட்டமிட்டிருக்கின்றார்களாம்.



## ...யின் இசையில் சிம்புவின் படம்

...ஆளு'. இந்த படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக நயன்தாரா
...தை இயக்குகிறார் பாண்டியராஜ். சிம்புவின் தம்பி குரலர
...மைப்பாளராக அறிமுகமாகிறார்.
...பற்றி குரலரசு கூறுகையில், என் முதல் இசை அல்பத்தில்
...ான் மற்றும் என் அப்பா சில பாடல்கள் பாட உள்ளனர்.
நாட்டுப்புற பாடலும், சிம்பு துள்ளல் பாடலும் பாடுகிறார்.
...நவருடனும் சேர்ந்து நானும் ஒரு பாடலை பாடவுள்ளேன்.
...த்த சில இசைகளை கேட்டு அப்பாவும், அண்ணனும்
...ராட்டியது உற்சாகத்தை தந்தது என்றார்.

## ...தினத்தின் படத்தில் அசின்?

...ம் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் எடுக்கவுள்ள
மகேஷ்பாபு நாயகனாகவும், ஐஸ்வர்யாராய் நாயகியாக
...வுள்ளதாக செய்திகள் வெளிவந்தன.
...ால் ஐஸ்வர்யா நடிப்பதற்கு மாமியார் ஜெயாபச்சன்
...ர்ப்பு தெரிவித்திருந்தாராம். ஐஸ்வர்யாராய் நடிக்கலாமா,
...ண்டாமா என்ற குழப்பம் தொடர்ந்து இருப்பதாக கூறப்படு
...து. படப்பிடிப்பு தொடங்கிய நிலையில் ஐஸ்வர்யாவுக்கு
...லாக யாரை நடிக்க வைப்பது என்று ஆலோசனை
...தாராம் மணிரத்னம்.
...வர்யாவுக்கு பதிலாக அந்த கதாபாத்திரத்தில் அசினை
நடிக்கலாம் என்ற செய்திகள் வெளிவந்தபோதும் இது
பற்றி மணிரத்தினம் அதிகாரப்பூர்வமாக இன்னும் அறி
விக்க வில்லை. கடல் படம் படுதோல்வி அடைந்
ததால் தன்னுடைய திறமையை நிரூபிக்க வேண்
டிய கட்டாயத்தில் இருக்கிறாராம் மணிரத்னம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அது ஓர் அழகிய நிலாக்காலம்

மகாலிங்கம் பத்மநாபன்

ஆண்களும் பெண்களும் இணைந்து கூட்டாஞ் சோறு ஆக்குவர். சமைப்பதற்கு தண்ணீர் முக்கியம் அல்லவா. காட்டுப்பகுதிக்குள் தண்ணீருக்கு எங்கே போவார்கள். அதனால் அவர்கள் ஒருவேலை செய்வார்கள். அதை கூவல்கள் வெட்டல் என்று சொல்வர்.

**கூவல்கள் (சிறுகிணறுகள்) வெட்டல்:**

ஆற்றங்கரையை அண்மித்துள்ள சுத்தமான நிலப்பகுதியில் கிடங்கு ஒன்றை வெட்டி அதற்குள் நீர் ஊறியதும் பாவிக்கும் சிறுகிணறுகள் கூவல்கள் என்று அழைக்கப்பட்டன. கிராம மக்கள் அவற்றைப் பூவல்கள் என்றும் அழைப்பர். கூவல்கள் பற்றித் தமிழ் இலக்கியப் பாடல்களும் உண்டு. ஆற்றங்கரையில் வெட்டப்பட்ட கூவல்களில் ஒரு மணி நேரத்தில் பளிங்கு போன்ற தெளிவான நீர் ஊறிவிடும். தேங்காய் துருவுதல், கிடாரங்களில் கூவல்களில் உள்ள நீரை நிறைத்தல், கிடாரங்களில் சோறு ஆக்குதல், காய்கறிகள் யாவற்றையும் போட்டு ஒரு கறி சமைத்தல் யாவும் கூட்டாஞ் சோறு ஆக்கும்போது ஆண்களின் பணிகளாகும்.

**நீச்சல் போட்டி, சுழியோடல்:**

சமையல் முடிந்ததும் பெண்கள் குளித்து விட்டு வந்து சிறுவர்களை விளையாட்டை நிறுத்திக் குளித்துவிட்டு வருமாறு விரட்டுவர். சிறுவர் ஆற்றில் இறங்கி குளித்து, நீச்சல் போட்டியிட்டு, நீரில் மூழ்கி மூச்சுப் பிடித்து ஏனையவர்களைத் ஆச்சரியப்படுத்தி மகிழ்வர். குளியல் முடிய பெண்களும் சிறுவர்களும் உணவருந்தி ஆற்றங்கரை மணலில் நல்ல மரநிழலில் உறங்கி விடுவர்.

**ஆண்களின் இரகசியம்:**

இப்படியான குதூகலிப்பு நிகழ்வுகளின்போது ஆண்கள் மண் முட்டிகளில் கள்ளுக் கொண்டு வருவது யாவரும் அறிந்த இரகசியமாகும். பற்றை மறைவில் சிரட்டைகள், பிளாக்களில் கள் குடித்து மகிழ்வர். அதன் பின் ஆண்களின் ஆட்டம் ஆரம்பமாகும். ஆண்கள் ஆற்றில் இறங்கி அதகளப்படுத்துவர். நீச்சல் போட்டி வைப்பர். சுழியோடி விளையாட்டுக் காட்டுவர். கள்ளின் மகிமையால் சிலர் ஆற்றுத் தண்ணீரில் குஸ்தியும் போடுவர். ஆடிக் களைத்த பின்னர் ஒவ்வொருவராகக் கரையேறி உணவை உண்பர். பின் மணலில் உருண்டு, புரண்டு நித்திரை கொள்வர். மாலையானதும் அடுத்த ஆண்டு எப்போது வரும் என்ற ஏக்கத்தோடு வண்டில்களைக் கட்டிக் கொண்டு தம், தம் வீடுகளை நோக்கி விரைவர்.

கூட்டாஞ் சோறு சாப்பிட மீசாலையிலிருந்து உறவுக்கார நங்கையர் வந்திருப்பராயின் கிராமத்து இளைஞர்கள் ஆற்றங்கரையில் உள்ள உயரமான மரங்களில் ஏறி அதிலிருந்து ஆற்றில் குதித்து தம் வீரத்தைக் காட்டி மகிழ்வர். எப்படியாவது உறவுக்காரப் பெண்களின் கடைக்கண் பார்வையை பரிசாகப் பெற்றுவிட அவர்கள் இதுபோன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவர். அநேகமாக இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பல காதல் கதைகளுக்கு பிள்ளையார் சுழி போடப்படுவதுண்டு.

**(இன்னும் நிலம் விரியும்)**



## மந்திரத்தால் வருமா மலேசிய விமானம்?




ஒரு பயணிகள் விமானம் காணாமல் போனதும் போதும், மலேசிய அரசு படுகின்ற பாடும்போதும். விஞ்ஞானத்தின் விளிம்பைத் தொட்டுவிட்டதாக எல்லோரும் மார்தட்டிக்கொண்டு நிற்கும் வேளையில் எல்லா நவீன தொழில்நுட்பங்களையும் உச்சிக்கொண்டு மாயமாகிவிட்டது மலேசிய விமானம். நாளொரு கண்டுபிடிப்பும் பொழுதொரு தகவலுமாக விமானத்தைப் பற்றிய கதைகள் வேகமாகப் பரவி வருகின்றன. இந்து சமுத்திரம், தாய்லாந்து, ஆஸ்திரேலிய கடற்பரப்பு, பெர்முடா, சோமாலியா, அந்தமான் தீவு, இரணைமடு என்று ஆளாளுக்கு அவரவர் இஷ்டப்படி விமானத்தின் மறைவிடம் பற்றி கதையளந்துகொண்டிருக்கிறார்கள். விமானத்தை விஞ்ஞானத்தின் உதவியோடு தேடிக் களைத்துப்போன மலேசிய அரசு கடைசியில் மந்திரத்தை நம்பிக் களத்தில் இறங்கியது. மலேசியாவின் பிரபல மந்திரவாதி தேங்காய்களும், சீடர்களும் சகிதமாக விமானநிலையத்துக்கு வந்து தன் 'மந்திர வலிமையால்' விமானம் எங்கிருக்கிறது என்று தேடியிருக்கிறார். கடைசியில் அவர் சொன்ன பதில் "இப்போதும் விமானம் பறந்துகொண்டிருக்க வேண்டும் அல்லது தண்ணீருக்கடியில் மூழ்கியிருக்க வேண்டும்." இந்தச் சிறுபிள்ளைத்தனமான பதிலுக்காக மலேசிய அரச மந்திரவாதிக்கு கொட்டிக்கொடுத்த தொகை ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்.

## பூவுக்குள் ஒளிந்திருக்கும் சார்ஜர்கள்

சாடியில் அமைந்த சூரிய காந்தியின் வடிவத்தைக் கொண்டதும் சூரியப் படல தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டதுமான சார்ஜர்களை அமெரிக்காவைச் சேர்ந்த இலத்திரனியல் நிறுவனமொன்று உருவாக்கியுள்ளது.

இந்தச் சார்ஜர்கள் இரண்டு இலை வடிவங்களையும் 8.5 சென்ரிமீற்றர் விட்டத்தினைக் கொண்ட பூ வடிவிலான தலைப்பகுதியையும் கொண்டுள்ளன.

இந்தத் தலைப்பகுதியிலேயே சூரிய சக்தியினை மின்சக்தியாக மாற்றும் திறன்கொண்ட சூரியப்படலம் காணப்படுகின்றது. மேலும் இந்தப்பகுதியானது அதிகளவு சூரிய ஒளியினை உள்வாங்கக்கூடிய நிலையில் 35பாகை சாய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M

# பேச்சுக்கலை..!

இயந்திரத்தனமாக சுழன்றுகொண்டிருக்கின்ற இந்த உலகில் அதிக அழுத்தங்களும் வேலைப்பளுவும் மட்டும் குறைவதே இல்லை.அது அரச அலுவலாக இருக்கட்டும் அல்லது தனியார் துறையிலாக இருக்கட் டும் வேலைசெய்கின்ற போது ஏற்படுகின்ற பதற்றம் என்பது மிகவும் தலையிடியான ஒன்றுதான்.

ஆண்களானாலும் சரி பெண்களானாலும் சரி வேலை செய்கின்ற போது ஏற்படுகின்ற மனஉளைச்சலானது வீட்டில் தான் கொஞ்சம் சரி செய்யப்படுகின்றது.வேலை முடிந்து ஒரு கணவன் அல்லது குடும்பத்தலைவன் வீட்டுக்கு வருகின்ற போது அவரை மீண்டும் மீண்டும் எமது பேச்சால் துன்புறுத்துவது நல்லதல்ல.



பெரும்பாலான குடும்பத் தலைவிகள் அல்லது தாய்மார் பல முக்கியமான விடயங்களை கணவனுடன் அல்லது குடும் பத்தலைவருடன் அலசும் நேரம் இதுவாகத்தான் இருக்கின்றது.வீடு வந்ததும் வராததுமாக பேச ஆரம்பித்து தொடர்ந்து புகார் பாடியபடியே இருக்கக்கூடாது.அதே போல சாப்பாட்டு நேரங்களிலும் சிக்கலான விடயங்களைப் பற்றி பேசுவதை குறைப்பது நல்லது. வேண்டுமானால் நல்ல விடயங்களை இத்தகைய நேரத்தில் பேசலாம்.

ஒருவர் மனவுளைச்சலில் இருக்கின்ற போது எடுக்கின்ற முடிவுக்கும் சீரான மனோநிலையில் எடுக்கின்ற முடிவுக்கும் நிரம்பவே வித்தியாசங்கள் இருக்கின்றன.நேரம் தெரியாமல் பொருத்தமற்ற பேச்சுக்களை தொடங்குவதே குடும்பங்களில் பல பிரச்சினைகள் தோன்றக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

பேச்சு என்பதும் ஒரு கலைதான் சகோதரிகளே..நல்லதைப் பேசுங்கள்.காலமறிந்து பொருத்தமாக பேசுங்கள்.அழகிய வாழ்க்கையை அனுபவியுங்கள்.




# பேஸ்புக் என்பது ஒரு தொல்லையா..?

பேஸ்புக்,ருவிட்டர் மற்றும் இன்னோரன்ன சமூக வலைத்தளங்களின் ஆளுகைக் காலம் இது. அதிலும் குறிப்பாக பேஸ்புக் என்பது இன்று சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் அடிமைப்படுத்தியுள்ள ஒரு விடயமாகும்.அனுகூலமான விடயங்களுக்காக என்று அறிமுகம் செய்யப்பட்டாலும் அவற்றால் பல்வேறு அசம்பாவிதங்களும் நிகழவே செய்கின்றன.

முகப்புத்தகம் என்று தமிழில் கூறக்கூடிய பேஸ்புக் பொதுவாக கணக்கு உரிமையாளர்களின் உண்மையான முகத்தை அப்படியே காட்டுவதில்லை.

தமது நிழற்படங்களை பதிவேற்றம் செய்தல் தொடங்கி அனாமதேய கணக்குகளை உருவாக்குவது , இரவிரவாக அரட்டை அடிப்பது வரை இதிலடக்கம்.(நல்ல முறையில் பயனுள்ள விடயங்களுக்காக உபயோகிப்பதை இங்கே குறிப்பிடவில்லை).இவ்வாறான




அரட்டை காதலாகி, கசிந்துருகி, பின்னர் கண்ணீர் மல்கி முடிவுக்கு வருகின்ற சம்பவங்கள் இலங்கையில் அண்மைக்காலமாக நடந்திருக்கின்றன.அதிலும் பெண்களே அவ்வாறான முடிவுகளை எடுப்பதில் அதிகம் கவனம்செலுத்துகிறார்கள். இப்போதெல்லாம் அனேக பெற்றோர்கள் பேஸ்புக் என்பது தமது பிள்ளைகளைப் பாதிக்கின்ற ஒரு நோயாகக் கருதுகிறார்கள். ஆண்களைக் காட்டிலும் பெண்களே இது தொடர்பில் அதிகம் பேசப்படுகிறார்கள்.

அத்தகைய தன்மையிலிருந்து பெண்கள் தம்மைப் பாதுகாக்க சில விடயங்களைக் கருத்திற்கொள்ளலாம்.

உங்களுக்கு வருகின்ற நட்புக்கோரிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அவற்றின் உள்ளடக்கத்தை ஆராய்ந்துவிட்டு பின்னர் ஏற்றுக்கொள்ளலாம்.

அனாமதேய கணக்குகள் மற்றும் பொருத்தமற்ற பெயர்களிலான நட்பு விண்ணப்பங்களை தவிர்ப்பது நல்லது.

நண்பர் அல்லாமல் ஆனால் அரட்டை அடிக்க விரும்புபவர்களுடன் அரட்டையை தொடராமல் இருப்பது நல்லது.

நண்பரேயாயினும் அளவிற்கதிகமாக அல்லது தேவையற்ற விடயங்களை பேசுவதை தவிர்ப்பது நல்லது.

உங்களினுடைய நிழற்படங்களை அதிகளவில் பதிவேற்றம் செய்வதை தவிர்க்கலாம்.

# மலரும் யௌவனம்

அவள் ஏழாந்தரத்தில் படித்துக்கொண்டிருக்கிறாள். அந்தப் பாடவேளை அவளுக்கு நடைபெறவில்லை போல. நூலகத்துக்கு வந்திருந்தாள். பாடம் நடைபெறாத தருணங்களிலெல்லாம் நான் அவளை நூலகத்தில் தான் அதிகம் கண்டிருக்கின்றேன். புத்தகங்களைப் படிப்பதில் அவளுடைய ஆர்வம் வித்தியாசமானது.சக மாணவிகள் பயிற்சிப்புத்தகங்கள் போன்றவற்றோடு ஈடுபாடு காட்டும் அதேசமயம் அவள் வித்தியாசமான உலக நடப்புக்கள் , மொழிபெயர்ப்புப் படைப்புகள் போன்றவற்றோடு ஈடுபாடு காட்டுவாள்.

நானும் என்னுடைய பாடவேளைகளை முடித்துக்கொண்டு அங்கு வந்து உட்காரந்திருந்தேன்.'லைபிரரியன்' தன்ரை பழைய கதையளை கதைச்சுக்கொண்டிருந்தா.என்னடா இது எண்டிருந்தது எனக்கு.தலையைப் பிய்த்துக்கொண்டு பேசாமல் இருந்தேன்.

பாடவேளை முடிஞ்சதுக்கு அறிகுறியா மணியடிச்சுது.அப்பாடா இவாவிட்ட இருந்து தப்பிச்சா போதுமென்று நினைத்துக்கொண்டு நான் எழும்பவும் அந்த ஏழாம் வகுப்பு மாணவி எழுந்துவரவும் சரியாக இருந்தது. எழும்பி வந்த அவள் நேரே 'லைப்பிரரிய'னிடம் வந்து

"ரீச்சர் யௌவனம் எண்டா என்ன..?"

ரீச்சர் ஒருக்கா ஏற இறங்க வடிவாப் பாத்தா.

"யௌவனமோ. ஏன்யார்? சொல்லித்தந்தது?

ஒருவேளை அவாவுக்கு அந்தச் சொல் தெரியாதோ நான் யோசித்துக்கொண்டு நின்றேன்.

"இல்ல ரீச்சர். யுனிசெப்காரரின்ட புத்தக அலுமாரிக்க ஒரு புத்தகம் இருந்தது.மலரும் யௌவனம் எண்டு..அதுதான் கேட்டனான்.யௌவனம் எண்டா என்ன ரீச்சர்..?"

"ஓகோ அப்பிடியே சங்கதி.அதுதானே பாத்தன்.நீர் நூலகத்துக்கு ஓடியோடி இதுக்கே வாறனீர்.இப்பிடியான புத்தகத்தை பாக்கத்தான் நீர் 'லைபிரரி'க்கு வாறீரோ.. பொறும். அதிபரிட்ட ஒரு 'கொம்பிளைன்ட்' குடுத்து விடுறன்."

அவ்வளவுதான். அவள் மிரண்டு போனாள். தெரியாததைத் தானே அவள் கேட்டாள்.தவிர பள்ளிக்கூட நூலகத்தில இருக்கிற புத்தகம் பிள்ளையள் படிக்கத்தானே..எனக்கு கோவம் கோவமாக வந்தது.

"பாருங்கோ ரீச்சர். இதுகள் எல்லாம் இப்பவே இப்பிடி வெளிக்கிட்டால் நிலைமை எங்க போறது?

அவா ஏதோ சொல்லிக்கொண்டேயிருந்தா.எனக்கு ஒண்டுமே தலையில ஏறேல்ல.மனசு ஒரே கேள்வியத் தான் திரும்ப திரும்ப கேட்டுக்கொண்டேயிருந்தது.

பிள்ளையளுக்கு படிப்பிக்க எண்டு தந்த புத்தகங்கள் தான். ஆக்கள் இல்லாததாலும் மற்றைய பொறுப்புகளாலும் நூலகத்தில வைச்சது பிள்ளையளா படிக்கட்டும் எண்டுதான். ஆனா அதை பற்றி கேட்டதுக்கே இந்த போர்க்கொடி எண்டால் பிறகு எப்பிடி பிள்ளையள் அதை திறந்து படிக்கிறது? விழிப்புணர்வு எப்பிடி வாறது? சமூகத்தில சீர்கேடுகள் ஏற்படுறதுக்கு விழிப்புணர்வில்லை எண்டால் அதை ஏற்படுத்த தடையா நிக்கிற நாங்கள் தானே முதற்குற்றவாளிகள்.

எங்களது பொறுப்புக்களை எப்போது ஒவ்வொருவரும் உணரப்போகிறோம் ..? எங்களது சமூகத்தை எப்போது விழிப்புணர்வுள்ளதாக மாற்றப்போகிறோம்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டு வந்தவர்

கேஷாயினி

## இராணுவத்தில் இணைந்து திரும்பிவந்த தமிழ்பெண்ணின் கதை

**நா**ன் வறிய குடும்பத்தினை சேர்ந்த பெண். என் அப்பா ஒரு கூலித்தொழிலாளி. அம்மா எமது ஊரிலுள்ள ஒரு பணக்கார ஆக்கள்ட வீட்ட வேலைக்கு போறவ. எனக்கு இரண்டு அண்ணன்கள் இரண்டு அக்காக்கள் ஒரு தம்பி, பெரிய அண்ணா இயக்கத்தில இருந்து செத்துப்போய்ட்டார். சின்ன அண்ணா வெளிநாட்டுக்கு கள்ளத்தனமா போனவர். போன பிறகு ஒரு கோல் கூட பண்ணல. பெரியக்கா கல்யாணம் முடிச்சு மூன்று பிள்ளைகள். இப்ப வீட்டில ஐயா, அம்மா, சின்னக்காச்சி, தம்பி, நான் எண்டு அஞ்சு பேர் இருக்கம்.

நானும் தம்பியும் தான் குடும்பத்திலயே பள்ளிக்கு போய் கூட படிச்சிருக்கிறம். நான் உயர்தரம் படிச்சிட்டு இருந்த நேரம் தான் ஊரில ஒரு அறிவிப்பு . அரசாங்கத்தில வேல குடுக்கிறாங்களாம் எண்டு.போரால பாதிக்கப்பட்ட ஏரியா எண்டதால பெரிசாப் படிச்சிருக்கத் தேவையில்லையாம். தமிழ் பெண்கள் விண்ணப்பிக்கலாம் எண்டு சொன்னவை. நானும் படிச்சிட்டு ரிசல்ட்டுக்காக வெயிட் பண்ணிக்கொண்டிருந்தன். அப்பாவுக்கும் இப்ப முந்தினமாதிரி வேலை கிடைக்கிறேலை. தம்பியும் படிக்கிறவன். அதால நானும் இந்த அறிவிப்ப கேட்டுட்டு விண்ணப்பிச்சன்.

விண்ணப்பிச்சு ஒரு மாசத்தில ஜி.எஸ் மூலமா தகவல் அனுப்பினவை. போன இடத்தில நிறைய பேப்பரில எல்லாம் கையெழுத்து வாங்கினவை. எனக்கு பெரிசா இங்கிலீஸ் படிக்க தெரியா. நானும் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தன். பிறகு இரண்டு கிழமைக்கு பிறகு என்னை வரச்சொல்லி கூப்பிட்டவை. போன இடத்தில ரெயினிங் தரப்போறதா சொன்னவை. அதுக்கு பிறகு தான் தெரிஞ்சது நமக்கு இராணுவ பயிற்சி தரப்போறாங்க என்டு. வீட்டில யாருக்கும் விருப்பம் இல்ல. ஆனா சைன் பண்ணிட்டதால ஒண்டும் செய்யேலா தானே. பயிற்சிக்கு போனன். கொஞ்ச நாள் கழிச்சு தான் அறிஞ்சம் எங்கள முன்னாள் புலிகள் எண்டும் எங்கள புனர்வாழ்வளிச்சு இராணுவத்தில இணைச்சிருக்கம் எண்டு சொல்றாங்க என்று.

பக்கத்து வீட்டில எல்லாம் ஒரு மாதிரி பேசியிருக்கினம். அம்மாவும் அப்பாவும் இத விட்டு என்னை விடுவிக்க கேட்டவை. அதுக்கு அம்பதாயிரம் கட்டினா தான் விடுவம் எண்டாங்க. எங்களால எப்படி முடியும்? காசில்லாததால ஒண்டும் செய்ய முடியல. ஆறு மாசம் பயிற்சி எல்லாம் நடந்தது. காலையில எக்ஸசைஸ் செய்வம். பிறகு சாப்பாடு அதுக்கு பின்ன பாடம் எல்லாம் சொல்லித்தந்தவை. உடுப்பெல்லாம் தந்தவை. சில சில இடங்களுக்கும் கூட்டிப்போனவை. ஒருமுறை கொழும்புக்கு கூட்டி வந்தவை. இது தான் நான் முதல் தடவை கொழும்ப பாக்கிறது. இங்க இரண்டு நாள் நிகழ்வொண்டு நிகழ்த்தினவை. டான்ஸ், பாட்டு எல்லாம் பழகினம். இங்க வந்து நடந்த அந்த நிகழ்வுக்கு பல ஆக்கள் வந்திருந்தவை.

அங்க நான் ஒரு அக்காவ பார்த்தன். இந்தியால இருந்து வந்தவ போல இருந்தவ. ஆனா பொட்டு வச்சிருந்தவ. முதலே அவவோட கதைக்க நினைச்சன். ஆனா எங்கள வெளியாக்களோட கதைக்க கூடாது எண்டுட்டினம். எங் களுக்கு பக்கத்திலயும் சிங்கள இரா ணுவ பெம்பளைகளை நிப்பாட்டி இருந் தவை. அதால கதைக்க முடியல. பிறகு சாப்பாட்டு நேரம் அந்த அக்கா பாத்ரூம் போறத பார்த்து நானும் பின்னால போன நான். அவட்ட போய் "நீங்க தமிழா?" எண்டு கேட்டன். "ஓம்" எண்டா..

"உங்கட போன் நம்பர் தருவீங்களா? உங்களோட கதைக்க வேணும்" எண்டு கேட்டன். "பேப்பர் கூட உள்ளுக்குள்ள கொண்டு வரவிடல. அதால எழுதித்தர ஏலாது பாடமாக்கி கொள்ள முடியுமா எண்டு கேட்டா. இல்லையக்கா நான் மறந்திடுவன் எண்டு சொன்னன். அப்ப உங்க நம்பரச் சொல்லுங்கோ. நான் பாடமாக்கி கொள்றன் எண்டு கேட்டா' "இல்லையக்கா நீங்க எடுக்கிற நேரம் என்ர போன் அவங்கட்ட இருந்தா பிரச்சினை. உங்கட நம்பரைத் தாங்கோ எண்டு சொன்னன்." "சரி இங்க கனநேரம் நிக்கிறம். யாரும் யோசிக்க போறாங்க, இப்ப வெளியால சாப்பிட போறன். ஆனா எப்படியாவது இது முடிஞ்சு போகக்க என்ர நம்பரை தருவன்" எண்டு சொல்லிட்டு வெளியால கதவைத் திறந்திட்டு சாப்பிட போய்ட்டா.



அவ எங்களோட இருந்து சாப்பிடேலை. ஆமிப்பெரியவங்க எல்லாரோடையும் தான் கதைச்சு கொண்டிருந்தவ. எனக்கு கொஞ்சம் பயமாயிட்டு. அவவும் ஆமியின்ர ஆளோ எண்டு. பிறகு சாப்பிட்டு முடிஞ்சதும் எங்களுக்கு பொறுப்பாயிருந்த ஆமி அக்காட்ட எங்கட பக்கம் காட்டி கதைச்சவ. நான் நல்லாப் பயந்திட்டன். பிறகு அந்த அந்த அக்கான்ர நம்பர் இருந்திச்சு. நாலு நாளைக்கு பிறகு தான் எனக்கு அவவோட கதைக்க முடிஞ்சது. எங்களுக்கு பயிற்சி இடத்தில காலைல வீட்ட கதைக்க கொஞ்ச நேரம் போன் தருவினம். அந்த நேரத்தில தான் அவவோட கதைச்சன். அதுக்கு பிறகு ஒண்டவிட்டு ஒரு நாள் அவவோட கதைச்சு என்ர விசயம் எல்லாம் சொன்னன். அவ எனக்கு உதவி செய்யிறன் எண்டா. ஆனாத் தொடர்ந்து கதைக்க வேண்டாம்



பொறுப்பாயிருந்த அக்கா எங்களுக்கு பக்கத்தில வந்து "அந்த அக்கா ஊடகத்தில இருந்து வந்திருக்கா. உங்கள இன்ரர்வியூ எடுக்க கேட்டவ" எண்டும் மேல தமிழாக்கள் கொஞ்சப்பேர வர சொல்லியும் சொன்னா. அந்த பொறுப் பாயிருந்த அக்காக்கும் நல்லா தமிழ் தெரியும். சந்தேகப்படுவாங்கள் எண்டும் சொன்னா.

பிறகு எப்பவாவது அவவுக்கு கோல் பண்ணி கேப்பன். மூண்டு மாசத்திற்கு பிறகு தான் சில ஆக்கள் என்ன வந்து சந்திச்சு கதைச்சு சில விஷயங்கள கேட்டவை. கிட்டத்தட்ட அஞ்சு மாசத்திற்கு பிறகு எங்களுக்கு பொறுப்பாயிருந் ஆனா அவ சிங்களம் தான்.

பிறகு நாங்க மூண்டு தமிழ் பிள்ளையளும் ஒரு முஸ்லிம் பிள்ளையும் மேல போனம். அந்த பொறுப்பாயிருந்த சிங்கள அக்காவும் எங்களோட வந்தவ. மேல போன நேரம் நான் கதைச்ச அந்த அக்கா கொஞ்சப் பேரோட கமரா மைக்கெல்லாம் வச்சுக்கொண்டு நிண்டா. எங்களிட்ட சில கேள்வியளைக் கேட்டா. ஆனா எங்களுக்கு எல்லாம் சொல்ல முடியல. அந்தப் பொறுப்பாளர் அக்காவும் பக்கத்தில நிண்டு கொண்டிருந்தா. நான் மைக்கு முன்னால நிண்டு இன்டர்வியூ முடிஞ்சவுடன் அந்த ஊடகவியலாளர் அக்கா எங்கட முழுப்பெயரையும் ஊரையும் சொல்லச் சொல்லி எழுதினவ. அப்ப சடாரெண்டு என்ர கையில ஒரு ரிசுப்பேப்பரை வைச்சா. எனக்கு விளங் கிட்டு. இதில ஏதோ இருக்கெண்டு. பிறகு அவ எங்கட விடயங்கள எழுதிட்டு போய்ட்டா.

நான் பிறகு தான் பார்த்தன்.அதில தவை என்ன கூப்பிட்டு என்ன போகவிடுவதாக சொன்னாங்கள். அதில இருந்து ஒண்டரை கிழமைக்கு பிறகு என்னிட்ட சைன் எல்லாம் வாங்கிட்டு வீட்ட போக விட்டினம். எனக்கு நல்ல சந்தோஷம். ஆனா இன்னம் என்ட சேர்ட்டிபிகட் எல்லாம் தரேலை. நான் வீட்ட வந்த பிறகு அந்த மீடியாக்கார அக்காட்ட எடுத்து கதைச்சு "நான் மேல படிக்கட்டோ? அல்லாட்டி வேலை ஏதாவது எடுத்து தந்தால் வேலை செய்யிறன்" எண்டு கேட்டன்.

"என்ன படிக்க விரும்புறீங்க? எண்டு கேட்டா. எனக்கு ஓ.எல்ல நல்ல ரிசல்ட். கொமர்ஸ் படிக்க விருப்பம்" எண்டு சொன்னன். கெதியா அதுக்கு ஏதாவது ஒழுங்கு செய்றதா சொல்லிருக்கா. படிக்கிறதுக்காக காத்திருக்கிறன். ஒரு மாதிரி பழைய வாழ்க்கைக்கு திரும்பிட்டன். நல்லா படிக்கவேணும் எண்டு நினைக்கிறன். படிச்ச பிறகு நல்ல வேலைக்கு போகவேணும் எண்டு எனக்கு விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔண்யன்



45

# இருளின் கதவைத் திறந்தவன்

**தா**ன் ஒளிந்திருப்பதைக் கண்டுவிட்டுத் தான் வாகனத்தை நிறுத்தச் சொல்கிறார்கள் என்ற அச்சத்தில் யூலியனுக்கு என்ன செய்வதென்றெ தெரியவில்லை. ஆனாலும் நான் எவருக்கும் தெரியாமல் தானே உள்ளே ஒளிந்தேன். அதை எப்படி மோப்பம் பிடித்தார்கள்? ஒருவேளை பண்ணை வீட்டில் வேறுயாரும் உளவாளிகள் இருக்கிறார்களோ? அவர்கள்தான் நான் வாகனத்தில் மறைந்து செல்லும் சங்கதியை போட்டுக் கொடுத்திருக்கக்கூடுமோ? என்றெல்லாம் யூலியன் பலவாறாக யோசித்துக் கொண்டிருக்கையிலேயே வாகனம் பிரிட்டன் படைகளின் சோதனைநிலையத்தை நெருங்கிவிட்டது.

சாரதி அந்தச் சோதனை நிலையத்திலிருந்த படை வீரர்களைப் பார்த்துக் கண்ணடித்துவிட்டு, தன் இருக்கைக்கு பக்கத்தில் இருந்த பொதி ஒன்றை அவர்களிடம் கொடுத்தான்.

'வர வர உனக்கு மறதி அதிகமாகிவிட்டது' என்று செல்லமாகக் கடிந்து கொண்டே அந்தப்பொதியை வாங்கினார்கள் பிரிட்டனின் சீருடை அணிந்த ஒற்றர்கள்.

பதிலுக்கு சாரதியும் ஏதோ குறும்பாகச் சொல்லி விட்டு வாகனத்தை மீண்டும் முன்னோக்கி விரையச் செய்தான். யூலியனுக்கு போன உயிர் திரும்ப வந்தது. சிலவேளைகளில் அவர்கள் யூலியன் வெளியேறுவதைக்' கண்டு, பின் தொடர்ந்திருந்தால் அவன் போட்ட திட்டமெல்லாம் பாழாகி இருக்கும். குண்டுக்கட்டாக அவனைத் தூக்கி அடுத்த விமானத்திலேயே சுவீடனுக்கு பார்சல் பண்ணியிருப்பார்கள்.

இப்போது ஒரு கண்டத்திலிருந்து தப்பித்தாயிற்று. இனி சாரதி அறியா வண்ணம் எங்காவது ஓரிடத்தில் இறங்க வேண்டும். ஊடகங்களில் யூலியனின் முகம் பிரபலமடைந்து விட்டதால், அவன் எங்கு இறங்கினாலும் எல்லோரும் இனங் கண்டு அவனோடு உரையாடுவதற்காகக் குழுமிவிடுவார்கள். அப்படி நடந்தால் இப்படிக் கஷ்டப்பட்டு ஒளிந்து வந்ததெல்லாம் வீணாகிவிடும்.

வாகனம் மெதுவான குலுக்கலோடு நகர்ந்து கொண்டிருந்தது. ஓடிக்கொண்டிருக்கும் போதே பின்பக்கமாகக் குதித்தால் பக்கக் கண்ணாடி சாரதிக்கு யூலியன் பாய்ந்து செல்வதைக் காட்டிக் கொடுத்து விடும்.

யூலியன் சரியான சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தான்.

சிலநிமிடப் பயணத்துக்குப் பின்னர், எங்கோ ஓரிடத்தில் வாகனம் சின்னதாயொரு அதிர்வோடு நின்றது. விசிலடித்தவாறே சாரதி, கதவைத் திறந்து இறங்குவதையும், பின்னர் அவனது காலடியோசைகள் தேய்ந்து மறைவதையும் யூலியனால் உணரமுடிந்தது.

இனியும் தாமதிக்கமுடியாது. வருவது வரட்டுமென்ற தோரணையில் யூலியன் வாகனத்தை விட்டுச் சந்தடியின்றிக் குதித்தான். வீதியில் யாருமில்லை. அது அவனுக்கு இன்னும் வசதியாகிவிட்டது. கால் போனபோக்கில் நடக்கத் தொடங்கினான்.

கொஞ்சத்தூரம் நடந்ததும் கையில் இருந்த 'ஐபோனில்', வரைபடத்தில் தான் செல்ல வேண்டிய திசையைக் கண்டறிந்துவிட்டு, பாதையை மாற்றினான்.

ஆனாலும் இன்னும் ஒரு சிக்கல் அவனைப் பின் தொடரவே செய்தது. ஆளரவமற்ற வீதியில் யூலியன் மட்டும் தனியாகச் சென்று கொண்டிருப்பதை அவ்வப்போது கடந்து சென்ற வாகனங்களின் சாரதிகள் ஒரு விநோதம் போல பார்த்துச் சென்றனர். சிலவேளைகளில் பிரிட்டன் உளவாளிகள் அவ்வாறு வாகனங்களில் சென்றால் யூலியனை மிகச்சுலபமாக அடையாளம் கண்டு விடமுடியும்.

ஒரு சிக்கலில் இருந்து விடுபட்டால் இன்னொரு சிக்கல் தொடரவே செய்கிறது.

நீண்டதூரம் நடந்ததால் கால்கள் ஓய்வு கேட்டு அடம் பிடித்தன.

இந்தச் சமயத்தில் யூலியனின் போன் சிணுங்கியது. காதில் பொருத்தினான் போனை.

மறுமுனையில் யூலியனுக்கும் தூதரக அதிகாரிகளுக்குமிடையே இணைப்பாகச் செயற்படுபவர்தான் பேசினார்.

"யூலியன்! இன்றைக்கு வந்துவிடுவீர்கள் தானே?" அவர் குரலில் சந்தேகம் ஒட்டியிருந்தது.

"ஆமாம்! அதிலென்ன சந்தேகம். இன்று மாலை நீங்கள் சொன்ன இடத்தில் அவர்களைச் சந்திப்பேன்" யூலியன் உறுதியான குரலில் சொன்னான்.

"ஆனால்..அது எப்படிச் சாத்தியமாகும் , நீங்கள் பண்ணை வீட்டில் இருந்து இன்னும் புறப்படவில்லையே. அங்கிருந்து இந்தநேரம் வெளியேறியிருந்தால் தானே நான் குறிப்பிட்ட இடத்துக்கு வந்துசேர முடியும்" கேட்டவரின் குரலில் இன்னும் சந்தேகம் விலகவில்லை.

"நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள். எப்படியும் நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் அவர்களைச் சந்திப்பேன்" சொல்லிவிட்டு யூலியன் போனை துண்டித்துவிட்டான்.

அருகே ஏதாவது வாடகைக் கார் ஒன்றைப் பெற்று அதன் மூலமாக அந்த விடுதியை அடைந்துவிடத் தீர்மானித்தான். நடையின் வேகம் அதிகரித்தது. கண்கள் வாடகைக்கார் கொடுக்கும் கடைகள் ஏதாவது தென்படுகின்றதா என்று அலைபாயத்தொடங்கின.

அப்போதுதான் திடீரென ஒரு கறுப்பு நிறக்கார் யூலியன் அருகே 'கீரீச்' என்ற ஒலியோடு சடுதியாக வந்து நின்றது.

"யூலியன்! உள்ளே ஏறுங்கள்"

காருக்குள் இருந்து வெளிப்பட்டது ஒரு குரல்.

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

## செய்யாத வேலைக்கும் அடியோ...? – கனகுபன்

'அம்மா... அம்மா...' பள்ளிக்கூடத்தால வந்ததும் வராததுமாய் 'பங்' மூக்கை உறிஞ்சினான்.

'ஏனடா, இண்டைக்கு என்ன நடந்திச்சு? ஏண்டா அழுகிறாய்?'

'நான் பண்ணாத வேலைக்காவெண்டி இண்டைக்கும் எனக்கு 'ரீச்சர்' அடிச்சுப் போட்டாம்மா... ஒவ்வொரு நாளும் இப்பிடித்தான் அடிக்கிறாவம்மா...' இப்பிடி 'பங்' சொன்னதும் தாய்க்கு ரீச்சரில வந்திச்சே கோவம். ஓடிப் போய்த் தெருவில நிண்டு மனிசி சுவப்பாடு போட்டிச்சு.

'ஐயோ, உவளவை 'ரீச்சர் ரீச்சர்' எண்டு இருக்கிறாளவை... அரசாங்க உத்தியோகத்தரின்ட பிள்ளையளுக்கு ஒரு ஞாயம், காசுக்காரரின்ட பிள்ளையளுக்கு ஒரு ஞாயம், தெரிஞ்சாக்களின்ட பிள்ளையளுக்கு ஒரு ஞாயம்... நாங்கள் ஏழை பாழையெளெண்டவுடனும் ஏறி நிண்டு உழக்கிறது.... ஐயோ, என்ர பிள்ளை, என்ர பத்தரை மாத்துத் தங்கதைப் பண்ணாத வேலைக்காவெண்டி அந்த ரீச்சர் இண்டைக்கும் அடிச்சுப் போட்டாளாம்... இதுகளைக் கேக்க ஒரு நாதியில்லயோஓஓஓ....'

ஊர்ச்சனத்தில பாதி எப்பபா எங்காயாவது சத்தம் கேக்கும், போய் விடுப்புப் பாப்பம் எண்டுதானே நிக்கும். அடுத்த பத்தாவது நொடியில பாதிச் சனம் வலு 'அக்கறையா' வந்து குழுமிச்சு.

'என்ன பங்கஜம், என்ன பிரச்சினை? '

'என்ர பெடி பண்ணாத வேலையளுக்கும் அவனைப் போட்டு அடிக்கிறாளாம் இவன்ர பள்ளிக்குட ரீச்சர்... என்ர கட்டித் தங்கத்தைக் கடும் ஏச்சு ஏசுறாளாம்! ஐஞ்சடிப் பிரம்பெடுத்து அடிச்சு விளாசுறாளாம்! முட்டி போடச் சொல்லி முதுகிலயே குத்தவேணும்.'

பங்கஜத்தின் வார்த்தையைக் கேட்டு பத்தாவது நிமிசத்தில பெரும் படை திரண்டிச்சு; ரீச்சருக்கு எதிரான புறப்படலுக்குத் தயாராயிச்சு.

'மெய்யே பெடி, கோத்தை சொல்லுறதெல்லாம் உண்மையே?' எண்டு ஒரு கேள்வியையும் கேட்டினம்.

'வாயத் திறந்து சொல்லன்ரா... நீ பண்ணாத வேலைக்கெல்லாம் உனக்கு அந்த ரீச்சர் அடிக்கிறதை இந்தச் சனத்துக்குச் சொல்லடா தம்பி...' – கண்ணீரைத் துடைச்சு, கரகரத்துப் போன குரலில பங்கஜம் சொல்ல, 'பங்' கள்ள முழியோட நிமிர்ந்து பாத்தான்; சொன்னான்.

'ஓம், பொல்லாத ரீச்சர்... நான் வீட்டு வேலை செய்யாமப் போறதுக்கெல்லாம் அடிக்கிறா!'

**(கதை சொல்லடா தமிழா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

27



கை பிழைபாடாக போராளி ஒருவர் உயிரிழக்க நேர்ந்தால் ஆயுதங்களைக் கையாளும் போது அதிக கவனமும் ஒழுங்குக் கட்டுப்பாடும் மீண்டும் புதுப்பிக்கப்படும். இதனால் ஆயு தங்களோடு சீவிப்பதே எனது வாழ்வில் இணைந்து கொண்டது.

1983 இலே சென்னைக்கு நான் திரும்பிய பின்னர் ஆயுதம் தரிக்கத் தொடங்கிய முதற் பெண் நானே. பாலா வுக்கும் எனக்கும் தற்காப்புக்காக எஸ். ஐ.ஜீ சேர் பிஸ்ரல் ஒன்றை பிரபாகரன் வழங்கியிருந்தார். நான் எங்கு சென் றாலும் அதை எனது கைப்பையில் கொண்டு திரிந்தேன். கடைசியில் தானியங்கி றைபிள் ஒன்றுடன் நடமாடுவதும் எனது அறையில் அதை வைத்துக் கொண்டு தூங்குவதும் சாதாரண நடைமுறையாகியது. நன்றியுணர்வுடனேயே நான் அந்த ஆயுதத்தை வைத்திருந்தேன்.

தமிழ்நாட்டில் நாம் 1981 இலே சென்ற போது, வேறும் பல வரலாற்றுப் போராளிகள் அங்கே இருந்தார்கள். ஒருவர் மாத்தையா(மகேந்திராஜா); துயரமான முடிவுக்கு ஆளான விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவர் இவர். இனத் துரோகத்திற்காக 1994 இலே மரண தண்டனைக்கு ஆளானார். இவரும் சில நாள்கள் எம்மோடு தங்கியிருந்தார். பாராட்டுதற்குரிய ஒரு நிகழ்வே அவரை அங்கு வரவழைத்தது. விடுதலைப் புலிகளுக்கு உதவியவர்களில் ஒருவருடைய குடும்பத்தினரை சிறீலங்கா இராணுவம் வீட்டுக்காவலில் வைத்திருந்தது. காவலிடப்பட்டிருந்த பெண்ணையும் நான்கு பிள்ளைகளையும் இராணுவக் கடும் காவலுக்கு இடையே மாத்தையா துணிச்சலோடு மீட்டு, கடல் கடந்து கூட்டி வந்து சென்னையில் உள்ள கணவனிடம் ஒப்படைத்திருந்தார். மாத்தையா அதிகநாள்தங்கவில்லை ஆகவே அவரை ஆழமாகப் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு அவரோடு நான் பழகக் கிடைக்கவில்லை. மாத்தையா மென்மையாகப் பேசுவார்; கலகலப்பாக பழகமாட்டார்; பிரபாகரனுடன் நீண்ட உரையாடல்களில் ஈடுபட்டிருப்பார். அநேகமாக தமிழீழப் பிரச்சினைகள் தொடர்பானதாகவே அவை இருந்திருக் கும். பின்னைய ஆண்டுகளில் கூட ஏனைய தலைவர்களுடனும் பழகியது போல மாத்தையாவுடன் நான் என்றுமே நெருங் கிப் பழகியதில்லை. வாய்ப்புக் கிடைக்காதது தான் காரணம். மாறாக அரசியற் கருத்து வேறுபாடோ தனிப் பட்ட விருப்பு வெறுப்போ அல்ல ஆனால் பாலாஷைப் பார்ப்ப தற்காக எமது வீட்டுக்கு வரும் போதெல்லாம் மிகவும் கண்ணியமாகவே என்னோடு பழகுவார்.

ஆரம்ப காலத்தில் இருந்தே இன்னொரு வரலாற்று நாயகன் என்றால் அது, என்றுமே கலகலப்பாக உற்சாகம் மிகுந்து காணப்படும் கிட்டு தான். நாம் இந்தியா வுக்கு 1981 இலே சென்ற போது அவரை விடுதலைப் புலிகளின் மதுரை முகாமில் முதற் தடவையாக சந்தித்தோம்.

(பதிவு தொடரும்)




## மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**தன் திறன் உணர்ந்து செயல்பட்டு, நன்மை பெறுகிற மேஷ ராசிக்காரர்களே!**

உங்களிடம் கடந்த நாட்களில் உதவி பெற்றவர் விசுவாசம், கூடுதல் அன்புடன் பழகுவர். நிகழ்கால சிரமங்களை சரி செய்ய, அவர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் பாதுகாப்பு முறை தவறாமல் பின்பற்றவும். புத்திரரின் மனம், செயல் களில் உறுதி ஏற்பட அறிவுரை சொல்வீர்கள். உடல்நல ஆரோக்கியம் சீராக அமைந்திட மருத்துவ சிகிச்சை, ஓய்வு உதவும். இல்லறத்துணை சில விஷயங்களில் கருத்து பேதம் கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை மிதமான அளவில் இருக்கும். பணியாளர் தம் கடமை உணர்ந்து பணிபுரிவதால் மட்டுமே, நற்பெயரை பாதுகாக்க இயலும்.

## ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**நல்ல எண்ணங்களை, மனதில் நாளும் வளர்த்திடும், ரிஷப ராசிக்காரர்களே!**

சூரியன், செவ்வாய், புதன், குரு, சனி, ராகுவின் அளப்பரிய நற்பலனும் ஒரு சேரக்கிடைக்கும். தொடங்குகிற செயல் அத்தனையும், வெற்றிபாதையில் நடைபோடும். மனதில் மகிழ்ச்சியும், உற்சாகமும் மிகுந்திருக்கும். அக்கம், பக்கத்தவரின் கூடுதல் அன்பைப் பெறுவீர்கள். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர் அறிவாற்றல் சிறந்து படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். இஷ்ட தெய்வ வழிபாடு திட்டமிட்ட படி நிறைவேறும். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு பெறுவீர்கள்.

## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**மாறுபட்ட கருத்துகளை, துணிவுடன் தவிர்த்திடும் மிதுன ராசிக்காரர்களே!**

மனதில் வடிவமைத்த திட்டங்களை, தற்போதைய அனுகூல சூழ்நிலை உணர்ந்து செயல்படுத்துவீர்கள். உழைப்புக்கு தகுந்த பலன் உறுதியாக கிடைக்கும். நட்பு பாராட்டுபவரின் குணநலன் உணர்ந்து பேசுவது நல்லது. புத்திரரின் எதிர்கால நலனை கவனத்தில் வைத்து, அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப உதவுவது நன்மை தரும். நிர்பந்த பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணை உங்கள் வாழ்வியல் சிரமம் குறைய, ஆலோசனை சொல்வார்.

## கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**நல்ஒழுக்கமான வாழ்வு, விருப்பமுடன் பின்பற்றும் கடக ராசிக்காரர்களே!**

மனதில் புத்துணர்வும், செயல்களில் கூடுதல் நேர்த்தியும் உருவாகும். நிர்பந்தம் உருவாக்குகிற பணிகளை, தயக்கம் இன்றி நிறைவேற்றி, குடும்ப உறுப்பினர்களிடம் பாராட்டுப் பெறுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் பலத்துடன், முருகப்பெருமானின் நல்லருளும், மங்கல நிகழ்வை உருவாக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு பணி அவசியம[illegible]. புத்திரர், உங்கள் சொல்கேட்டு நடந்து பெருமை தேடித்தருவர். மாணவர்கள், நண்பரிடம்பேசுவதில் நிதானம் தே[illegible].

## சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**துன்பத்தை கண்டு துவளாத, மனம் கொண்ட சிம்ம ராசிக்காரர்களே!**

சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாப்பதில், கூடுதல் அக்கறை கொள்வீர்கள். புதியவர், உங்களின் நற்குணம், செயல்திறன் அறிந்து உதவிகரமாக நடந்து கொள்வர். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் தகுதி, திறமை வளர்த்து படிப்பு, வேலையில் சிறப்பிடம் பெறுவர். குடும்பத்தின் அத்தியாவசிய செலவுக்காக, கொஞ்சம் பணக்கடன் பெறவேண்டியதிருக்கும். இல்லறத்துணையின் குறைகளை சரிசெய்வதில், பொறுமை குணம் அவசியம். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும்.

## கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**தன்னிடம் பழகுபவர்களை, சமமாக கருது கின்ற கன்னி ராசிக்காரர்களே!**

சுக்கிரன், புதன் மற்றும் தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் நற்பலன் வழங்குகின்றனர். சிலரது வஞ்சக புகழ்ச்சி கலந்து, பேச்சை நம்பி தகுதி மீறிய செயல்களில் ஈடுபட மனதில் துணிவு உருவாகும். இதனால், சிரமம் ஏற்படலாம் கவனம் தேவை. உடன்பிறந்தவர் இயன்ற உதவி மனமுவந்து தருவர். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வாகன பாதுகாப்பில், உரிய கவனம் வேண்டும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெற, சத்து மிகுந்த உணவு உண்பீர்கள்.

## துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**சொல்லை விட, செயலுக்கு முக்கியத்துவம் தரும், துலாம் ராசிக்காரர்களே!**

சுக்கிரன், சுக ஸ்தானமாகிய நான்கில் அனுகூலமாக உள்ளார். ஆறாம் இடத்தில் உள்ள சூரியன், பாக்ய ஸ்தானத்தில் உள்ள குரு, கூடுதல் நற்பலன் தருகின்றனர். சுய தேவை பூர்த்தியாகிற அளவில், தாராள பணவசதி துணை நிற்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உருவாகும். சிலர் புதிய வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர் சில விஷயங்[illegible], முரண்பட்ட மனதுடன் நடந்து கொள்வர். எதிரியை வெல்வதற்கு, சாதகமான வழிமுறை உருவாகும்.

## விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**நல்ல காரியங்களுக்கு, பணம் தாராளமாக செலவிடும் விருச்சிக ராசிக்காரர்களே!**

செயல்களில் சுறுசுறுப்பு, நேர்த்தி அதிகரித்து, ஆதாய பலன்களை எளிதில் பெற்றுத் தரும். அக்கம், பக்கத்தவரிடம் உங்கள் மீதிருந்த அதிருப்தி எண்ணம் விலகும். அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். வாகன பயன்பாட்டு திருப்திகர அளவில் இருக்கும். புத்திரரின் உடல் நலத்தில், கூடுதல் அக்கறை கொள்வது அவசியம். எதிரியால் வருகிற இடையூறு இஷ்ட தெய்வ அருள் பலத்தினால் விலகும். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணங்களை மனதார பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, சில புதிய உத்திகளை கையாளுவீர்கள்.

## தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**அடுத்தவர் நலம் சிறக்க, இயன்ற அளவில் உதவும் தனுசு ராசிக்காரர்களே!**

வாக்கு ஸ்தானமாகிய, இரண்டாம் இடத்தில் சுக்கிரன் அனுகூலமாக உள்ளார். சனி பகவான், நட்பு கிரகம் ராகுவுடன் ஆதாய ஸ்தானத்தில் இடம் பெற்று, குருவின் சுப பார்வையை பெறுகிறார். இனிய வார்த்தை பேசி நண்பர், உறவினர் மனதில் சிறப்பிடம் பெறுவீர்கள். உங்களை அவமானப்படுத்த முயற்சிப்பவர், விலகுகிற நன்னிலை உருவாகும். வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும்.

## மகரம்

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**இறை பக்தியில், கூடுதல் நம்பிக்கையுள்ள மகர ராசிக்காரர்களே!**

சுக்கிரன், தைரிய ஸ்தானமாகிய மூன்றில் சூரியன், அனுகூல அமர்வாக அமைந்து சிறப்பான பலன்களைத் தருகின்றனர். உங்கள் நடை, உடை, செயலில் வசீகர மாற்றம் ஏற்படும். இரக்க குணத்துடன் தன்னைச் சார்ந்தவர்களின் தேவை, பூர்த்தியாக உதவுவீர்கள். உஷ்ணம், அஜீரணம் போன்ற தொந்தரவு களால், உடல்நலக் குறைவு வராமல் கவனம் கொள்ளவும். புத்திரர், நண்பருக்கு இணையாக, உங்களுக்கு உறுதுணை புரிவார். நிர்பந்த பணக்கடனில், ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

## கும்பம்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**தன் செயல்களால், நற்பெயர் பெற முயற்சிக்கும் கும்ப ராசிக்காரர்களே!**

தன் செயல்களால், நற்பெயர் பெற முயற்சிக்கும் கும்ப ராசிக்காரர்களே! இஷ்ட தெய்வ அருள் பலம், கடின செயலும் எளிதாக மாற துணை நிற்கும். உங்களின் வளம் நிறைந்த வாழ்வு முறையை, பொறுக்காத சிலர் பரிகாசம் செய்வர். அவர்களிடம் விலகுவதால், மனஅமைதியைப் பாதுகாக்கலாம். வாகனத்தில் கூடுதல் பயன்பாடு பெற, பராமரிப்பு மேற்கொள்வீர்கள். புத்திரரின் ஒவ்வொரு சொல்லும், வேத சாஸ்திர வார்த்தை போல இருக்கும். உடல் நலத்திற்கு, சிறு அளவில் மருத்துவ சிகச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை விரும்பிய பொருட்களை வாங்கித் தருவீர்கள்.

## மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**நண்பர்களிடம் நல்அன்புடன் பழகுகிற மீன ராசிக்காரர்களே!**

அஷ்டமச் சனியின் தாக்கத்திலும், சுக்கரனின் அமர்வு சில அதிர்ஷ்ட பலன் மற்றும் வாய்ப்புகளை கொண்டு வந்து தரும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் சிந்தனைத் திறன் அதிகரித்து, முன்னேற்றப் பாதையில் நடைபோடுவர். சீரான ஓய்வு, உடல்நலம் பாதுகாக்க உதவும். தியானம், தெய்வ வழிபாடு மனஅமைதியைத் தரும். இல்லறத்துணை, உங்கள் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை மிதமான அளவில் இருக்கும். இயந்திர தொழிற்சாலை பணியாளர், பாதுகாப்பு முறை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், குடும்ப நலனில் கூடுதல் அக்கறை கொள்வர். மாணவர்கள், புதிய விஷயங்களை பெற்றோரின் வழிகாட்டுதலால் அறிந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகளும் விடையும்

**01.** வெள்ளை மாளிகை. உள்ளே செல்ல வாசல் இல்லை. அது என்ன?
-முட்டை-

**02.** ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது என்ன?
-உள்ளங்கையும் விரல்களும்-

**03.** தொப்பொன்று விழுந்தான். தொப்பி கழன்றான். அவன் யார்?
-பனம்பழம்-

**04.** சட்டையைக் கழற்றினால் சத்துணவு. அது என்ன?
-வாழைப்பழம்-

**05.** பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன?
-செத்தல் மிளகாய்-

**06.** அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது. அது என்ன?
-சங்கு-

**07.** தட்டச் சீறும். அது என்ன?
-தீக்குச்சி-

**08.** உரிச்ச புறா சந்தைக்குப் போகுது. அது என்ன?
-தேங்காய்-

**09.** நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும். அது என்ன?
-தையல் ஊசியும் நூலும்-

**10.** உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்?
-எறும்பு-

**11.** கண்ணால் பார்க்கலாம். கையால் பிடிக்கமுடியாது. அது என்ன?
-நிழல்-



## குட்டி அணிலே!




எங்கள் வீட்டின்
பக்கம் வந்து
மேனி வரிகள்
மினுக்கி இருக்க,
வளைந்த வாலும்
அடர்ந்து இருக்க,
கீச்சுக் குரலில்
தொடர்ந்து கத்தி
உந்தன் குட்டி
அணில்களுக்கு
ஊட்டி
ஓட்டின் மேலே
எட்டித் தாவி,
ஏறிப் பறப்பாய்
குட்டி அணிலே!

குட்டி அணிலே
சுட்டி நீயே,
மரங்கள் ஏறி
கனிகள் சுவைத்து,
தரையில் தாவி
விதைகள் தேடி,
பொறுக்கும் எதையும்
இருகை பிடித்து,
மருள விழித்து
கொறித்து உண்பாய்!

## கடுமையான முடிவு




அது ஒரு பெரிய தொழிற் சாலை. அதன் முதலாளி மிகவும் கண்டிப்பானவர். ஒழுக்கம், கட்டுப் பாடு ஆகியவற்றைப் பெரிதும் மதிப்பவர்.

ஒருநாள் தன் தொழிற்சாலையின் ஒரு குறிப்பிட்ட பிரிவுக்குத் திடீரென்று சென்றார். எல்லா ஊழியர்களும் ஒழுங்காக வேலை செய்து கொண்டிருந் தாலும் ஒருவர் மட்டும் நாற்காலியில் உட் கார்ந்து கொண்டு, நாளிதழ் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். முதலாளிக் குக் கடும் கோபம். வேகமாக அவர் இருந்த இடத்தை அடைந்தார். முதலாளி அருகில் வந்த துமே அவர் ஆச்சரியப்பட்டுப் போனார். நாளிதழை மேடை மீது வைத்தார். ஆனாலும் படபடப்பில் எழுந்து நிற்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றவில்லை.

முதலாளிக்குக் கோபம் அதிகமானது. "உன் மாதச் சம்பளம் எவ்வளவு?" என்றார். அவர் தயக்கத்துடன், " அது வந்து" என்று இழுத்தார். 'கேட்டதற்கு மட் டும் பதில் சொல்' என்று முதலாளி கர்ஜித்தார். "நான்காயிரம் ரூபாய்" என்று பதில் வந்தது.

முதலாளி தனது கைப்பையிலிருந்து ரூபாய் நோட்டுகளை எடுத்தார். "இந்தா, உன் மூன்று மாதச் சம்பளம் பன்னி ரண்டாயிரம் ரூபாய். எடுத்துக்கொண்டு கிளம்பு. நீ எதுவும் பேசி சமாளிக்க வேண்டாம். உன் எந்த விளக்கமும் என்னைச் சமாதானப்படுத்தாது" என்றார் கடுமையான குரலில்.

பணத்தை வாங்கிக்கொண்டு தயக்கத்துடன் கிளம்பிச் சென் றார் அவர். சற்றுத் தொலைவிலிருந்த மேலதிகாரி ஒரு வரை முதலாளி தன் அருகில் அழைத்தார். "நான் வெளியே அனுப்பி னேனே, அவர் எத்தனை வருடங்களாக இங்கே வேலை செய்கிறார்?" என்று கேட்டார். "ஐயா, அவர் நம் நிறுவனத்தில் வேலை செய்பவர் இல்லை. ஏதோ பொருளைக் கொடுத்துவிட்டு அதற்கு பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்காகக் காத்திருந்தார்!"

இப்படித்தான், ஆத்திரம் கண்ணை மறைத்தால் ஆராயாமல் பெரும் தவறுகளைச் செய்துவிடுவோம். இனி கோபப்படும்போது எந்த முக்கிய முடிவுகளையும் எடுக்கமாட்டீர்கள்தானே?

## மாயத் தீவில்

### மந்திரக் கிழவி




பலிபீடம் நோக்கி ஒவ்வொரு இளவரசர்களும் இயந்திரங்கள் போல நகர்ந்து சென்று தமது கழுத்துக்களை அங்கிருந்த பீடங்களில் வைத்தனர். ஆயிரத்தொரு இளவரசர்களையும் ஓரே நேரத்தில் பலியிட ஆயிரத்தொரு பூத கணங்கள் கூரிய வாள்களோடு தயாராக நின்றன. மந்திரக்கிழவி பலிபீடத்தின் மையத்தில் அமர்ந்து கொண்டாள். பின்னர் கண்களை மூடி ஏதேதோ மந்திரங்களை உச்ச ஸ்தாயியில் உச்சரிக்கத் தொடங்கினாள். அவள் முன்னால் பெரும் யாகத்தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அதன் நடுவே மந்திரக்கிழவியின் இளமைத்தோற்றத்தை ஒத்த பொம்மை போன்ற உருவம் ஒன்று தோன்றியது. மந்திரக்கிழவி கண்களை மெல்ல திறந்து மேலே நோக்கினாள். நடுவானில் கண்களை குருடாக்கும் பிரகாசத்தோடு ஒளிப்பிழம்பொன்று தோன்றியது. அதைக்கண்ணுற்ற கிழவி மிகுந்த மகிழ்வடைந்தாள். தயாராக வைத்திருந்த ஆகுதிப் பொருட்களை யாகத்தீயில் ஒவ்வொன்றாகப் போடத்தொடங்கினாள். அவ்வாறு அவள் செய்யச் செய்ய ஒளிப் பிழம்பில் உருவம் பெரிதாகிக் கொண்டே வந்தது. இந்நிலையில்யாகப்பொருள்கள் எல்லாம் முடிந்துவிட்டன. கடைசியாக தன் கையில் இருந்த மந்திரக் கோலை யாகத்தீயில் இட்டாள் மந்திரக்கிழவி. அடுத்த கணம் வானில் இருந்த ஒளிப்பிழம்பு கொடூரமான முகம் கொண்ட காளியின் உருவமாக மாறத் தொடங்கியது.

(மந்திரக் கிழவி வருவாள்...)

## தெரிந்து கொள்வோமா?

- உலகின் மிகப் பெரிய திரையரங்கம் நியூயோர்க் நகரில் உள்ள ரொக்ஸி திரையரங்கம்.
- உலகின் மிகப் பெரிய வைரச் சுரங்கம் தென்னாபிரிக்காவில் கிம்பர்லி என்ற இடத்தில் உள்ளது.
- உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி வெனிசுலா நாட்டில் உள்ள ஏஞ்சல் நீர்வீழ்ச்சி.
- உலகின் மிகப் பெரிய அணை அமெரிக்காவில் உள்ள கௌல்டாம் அணை.
- உலகின் மிகப் பெரிய வளைகுடா மெக்ஸிகோ வளைகுடா.
- உலகின் மிகப் பெரிய அஞ்சல்துறை கொண்ட நாடு இந்தியா.
- உலகின் மிகப் பெரிய தேசிய கீதம் கிரேக்க நாட்டின் தேசிய கீதம் தான். இதில் 128 வரிகள் உள்ளன.

## குறியீடுகள்

- காற்புள்ளி - (,)
- அரைப்புள்ளி - (;)
- முக்காற்புள்ளி - (:)
- முற்றுப்புள்ளி - (.)
- ஆச்சரியக்குறி - (!)
- கேள்விக்குறி - (?)
- இடைக்கோடு - (-)
- மேற்கோள் குறி - ('),(")
- நிறை நிறுத்தக் குறி - (#)
- இணைப்புக்குறி - (&)
- நட்சத்திரக்குறி - (*)
- தொக்கிக்குறி - (....)
- அடைப்புக் குறிகள் - ((),({}),(< >)
- அடிக்கோடு - (Tamil)
- கிடைக்கோடு - (-)
- முன்சாய்கோடு - (/)
- பின்சாய்கோடு - (\)
- உடைமைக்குறி - (')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்ன மறுக்கும் நட்சத்திரங்கள்

இந்தன்



இருபத்தியெட்டு நாள்கள் மட்டுமே கொண்ட கடந்த பெப்ரவரி மாதத்தில் 28 படங்கள் (நேரடித் தமிழ்ப் படங்கள் 18, மொழிமாற்றுப் படங்கள் 10) வெளியாகியிருந்தன. இது எண்ணிக்கையில் வேண்டுமானால் சாதனையாக இருக்கலாம். ஆனால் இவற்றில் எத்தனை படங்கள் வசூல் ரீதியாக வெற்றி பெற்றன என்று பார்த்தால் படத்தைத் தயாரித்தவர்களுக்கும், வாங்கியவர்களுக்கும் பெருத்த அடிதான். ஏதாவது புதிதாக இருக்கும் என்று எதிர்பார்த்து வந்த ரசிகர்களுக்கும் ஏமாற்றம்தான்.

இயக்குநர், தயாரிப்பாளர், விநியோகஸ்தர், திரையரங்க உரிமையாளர், ரசிகர்கள் ஆகிய தரப்புகளைத் தாண்டி, படத்துடன் நேரடித் தொடர்பு கொண்ட ஒரு தரப்பை எல்லோரும் மறந்தே போய்விடுகிறார்கள். அவர்கள், அறிமுக நடிகர்கள். ஒரே இரவில் புகழ் ஒளியில் குளிக்கும் நட்சத்திரமாகிவிடலாம் என்ற கனவுடன் அறிமுகமாகும் இவர்கள் என்னவாகிறார்கள்? இவர்கள் கண்டுகொள்ளப்படாததற்குக் காரணம் தான் என்ன?

## ஊறுகாய்க்கு உதவி இயக்குநர்கள்

அனுபவம் பெற்ற உதவி இயக்குநர்களைத் தங்களுக்கு ஆலோசனைக்கும் படப்பிடிப்பு வேலைகளுக்கும் இவர்கள் வைத்துக்கொண்டாலும், அவர்கள் ஆலோசனைகளை இவர்கள் காதில் வாங்கிக்கொள்வதே இல்லை என்று திரை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனவே இதுபோன்ற படங்களில் சினிமாவுக்கான குறைந்தபட்ச இலக்கணம்கூட இருப்பதில்லை. இந்தப் படங்களை யாரும் வாங்கவோ வெளியிடவோ முன்வருவதில்லை. இந்தக் கோபத்தில் சொந்தமாகவே வெளியிடும் இந்தச் சினிமா ஆர்வலர்களின் படங்களைக் கண்டால் ரசிகர்கள் ஓட்டமெடுக்கிறார்கள்.

## தீர்மானிக்கும் வெற்றி

பணத்தைக் கொண்டு படமெடுத்து, அதில் நடித்துப் புகழை வாங்கிவிடலாம் என்று வரும் குபீர் நட்சத்திரங்கள், இயக்குநர்கள் எடுக்கும் படங்களில் ஒரு சில ஆச்சரியங்களையளித்தாலும், இவற்றில் அறிமுகமாகும் பெரும்பாலான நட்சத்திரங்களுக்கு நடிப்பு பற்றி எதுவும் தெரியாது. நாயகன் மண் வாசனையுடன் இருப்பார். அல்லது பருத்தி வீரன் கார்த்தி மாதிரி தாடி மீசையுடன் பயமுறுத்துவார். இத்தகைய நாயகர்களுக்கு ஜோடி தேடி, பல லட்சங்களைச் செலவழித்து, மும்பை, டெல்லி, பஞ்சாப், லூதியானா என்று சுற்றி, விளம்பரநாயகர்களை அழைத்து வந்து கதாநாயகி ஆக்குவார்கள். இருவரும் இணைந்து நிற்கும் புகைப்படங்கள் சுடச்சுட வெளியாகி ரசிகர்களைக் கிச்சு கிச்சு மூட்டும். கதாபாத்திரத்துக்கான நட்சத்திரத் தேர்வு என்பதே இந்த வகைப் படங்களில் இருக்காது.

## புகழை வாங்க நினைப்பவர்கள்

சமீபத்தில் நடந்த இசை வெளியீட்டு விழா ஒன்றில் பேசிய தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் கேயார் "கடந்த ஆண்டு வெளியான 164 படங்களில் 180 புதுமுக நடிகர்கள் அறிமுகமானார்கள். அவர்களில் எத்தனை பேர் மேலே வந்திருக்கிறார்கள்? இந்த எண்ணிக்கையை நினைத்துப் பாராட்டுவதா, பயப்படுவதா என்று தெரியவில்லை" என்றார். இதற்கு என்ன காரணம்?

டிஜிட்டல் தொழில்நுட்பம் வந்தபிறகு 30 லட்சம் இருந்தால் ஒரு படத்தைத் தயாரித்து விடலாம் என்ற நிலை உருவாகியிருக்கிறது. ஓரளவு செலவு செய்யும் சக்தி படைத்த பலர், தங்களது பிள்ளைகளை நடிகர்களாக்கி அழகு பார்க்க ஆசைப்பட்டுப் படமெடுக்க வருகிறார்கள். இன்னும் சிலர் இயக்குநர் ஆகி குணச்சித்திரக் கதாபாத்திரத்தில் நடிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். சிலர் முதல் படத்திலேயே ரஜினி போல சூப்பர்ஸ்டார் ஆகிவிட நினைக்கிறார்கள். சினிமா தயாரிக்கவும், நடிக்கவும், இயக்கவும், விநியோகம் செய்யவும் அனுபவம், பயிற்சி தேவை என்பதைப் பற்றி இவர்கள் அலட்டிக் கொள்வதே இல்லை.

என்னதான் கோதுமை நிற அழகிகளைக் கதாநாயகி ஆக்கினாலும் இத்தகைய படங்கள் ஓடுவதில்லை. காரணம், அழுத்தமான கதையோ, திரைக்கதையோ, காட்சிப்படுத்தலோ, இல்லாதது தான் காரணம். தொழில்நுட்ப விஷயங்களும் குப்பையாக இருக்கும். இதனால் இந்தப் படங்களில் நடிக்கும் அறிமுக நட்சத்திரங்களில் திறமைசாலிகள் சிலர் அறிமுகமானாலும் அவர்களுக்கும் ரசிகர்களின் கடைக்கண் பார்வை கிட்டாமலேயே போய்விடுகிறது. சிறு முதலீட்டுப் படத்தின் வெற்றியும், சாதகமான விமர்சனங்களும் மட்டுமே அவற்றில் அறிமுகமாகும் நட்சத்திரங்களின் பயணத்தைத் தீர்மானிக்கின்றன. திறமையான நட்சத்திரங்கள் என்றாலும் படம் கவனம் பெறாமல் போய்விட்டால், அடுத்த வாய்ப்பு தேடி வருவதில்லை; தேடிப்போனாலும் கிடைப்பதில்லை. போதிய அனுபவத்துடன், பொருத்தமான நட்சத்திரத் தேர்வுடன் எடுக்கப்படும் சிறு முதலீட்டுப் படங்கள் தோல்வியடைந்தாலும் அதில் அறிமுகமான நட்சத்திரங்களும் மீண்டும் தலையெடுக்க முடிவதில்லை. இதற்குப் 'பத்தாயிரம்' கோடி படத்தை உதாரணமாகச் சொல்லலாம்.

## விளம்பரப்பலகைகளும் நட்சத்திரங்களும்

ஆனால் இந்த வகையிலிருந்து விலகித் திரையுலகப் பின்னணி கொண்ட குடும்பங்களிலிருந்து அறிமுகமாகும் எல்லோரையும் ரசிகர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. மிகப் பெரிய பட நிறுவனம் தயாரிக்கும் படத்தில் அறிமுகமாக வேண்டும். படம் வெளியாகும்போது அவர்களுக்கு மாநிலம் முழுவதும் விளம்பரப் பலகைகள் அமைக்க வலு வேண்டும், ரசிகர் மன்றம் அமைக்க வேண்டும், ஊடகங்களின் கவனத் தைக் கவர வேண்டும். இப்படியெல்லாம் தலை கீழாக நின்று தண்ணீர் குடித்தால்தான் கவனம் பெற முடியும். கார்த்திக் கின் மகன் கௌதம் கார்த்திக், ஏ.ஆர். முருக தாஸின் தம்பி திலீபன் உட்படப் பலர் இந்தப் பாணியில் ரசிகர்களைச் சென்று அடைந்துவிட்டாலும், புத்தகம் படம் மூலம் அறிமுகமான ஆர்யாவின் தம்பி சத்யா, வெள்ளச்சியில் அறிமுகமான பாண்டு மகன் பிண்டு, விழா படத்தில் அறிமுகமான மாஸ்டர் மகேந்திரன், பொன் மாலைப் பொழுது ஆதவ் கண்ணதாசன் ஆகியோர் படத்தின் தோல்வியாலும், படங்களுக்குப் போதிய விளம்பரம் இல்லாததாலும் ரசிகர்களை எட்ட முடியாமல் போய்விட்டது. வாரிசுக் கதாநாயகிகளில் ராதா மகள் துளசி மட்டும் தப்பிவிட்டார்.

அறிமுகப் படமும், அதன் பிறகு கிடைக்கும் ஒரு சில படங்களும் தோல்வி என்றால், கதாநாயகிகள் அதிரடியாகத் தேர்வு செய்யும் அடுத்த பாதை, திருமணம் அல்லது படிப்பு. ராட்டினம் பட நாயகி சுவாதி, 555 மிரித்திகா, விழா பட நாயகி மாளவிகா மேனன் என்று பலர் இதற்கு உதாரணம்.

## தேறியவர்கள்

ஓரளவு கவனம் பெற்ற சிறு முதலீட்டுப் படங்களில் கவனம் பெற்று ஓரளவு காலூன்றிக்கொண்டவர்களும் உண்டு. 'நேரம்' நிவின் பாலி, 'பீட்சா 2' அசோக் செல்வன், 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்' மத்தாப்பு ஜெயன், 'குறும்புக்காரப் பசங்க' 'சஞ்சீவ்', 'நேரெதிர் பார்த்தி', 'சூது கவ்வும்' 'சஞ்சிதா ஷெட்டி', 'அழகன் அழகி' ஆருஷி, 'கௌரவம்' யாமி கௌதம், புத்தகம் ராகுல் ப்ரீத் சிங், 'இவன் வேற மாதிரி' சுரபி ஆகியோரைக் குறிப்பிடலாம்.



ஆனால் கள்ளத் துப்பாக்கி, ஹரிதாஸ், பரதேசி உள்ளிட்ட பல படங்களில் அறிமுகமான குழந்தை நட்சத்திரங்களுக்கு அதன் பிறகு வாய்ப்பில்லை. இது ஒவ்வொரு ஆண்டும் தொடரும் சோகம்.

# இந்தியத் தேர்தலில் போட்டியிடும் திருநங்கை



இந்தியாவிலேயே நாடாளுமன்றத் தேர்தலில் முதல் முறையாகத் திருநங்கை ஒருவர் போட்டியிடுகிறார். அதுவும் அந்தத் திருநங்கை தமிழினத்தைச் சேர்ந்தவர்தான். பாரதி கண்ணம்மா என்ற திருநங்கையே இவ்வாறு மதுரையில் போட்டியிடுகிறார்.

மதுரையைச் சேர்ந்த பாரதி கண்ணம்மா (வயது-53) இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடிவு எடுத்துள்ளார். இவர்தான் இந்தியாவிலேயே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் முதல் திருநங்கை என்று கூறப்படுகிறது. பாரதி கண்ணம்மா, மதுரை தியாகராஜர் கல்லூரியில் பொருளாதாரத்தில் இளங்கலைப்பட்டமும், மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் சமூகவியலில் முதுகலை பட்டம் பெற்றுள்ளார். இது தவிர கணினி அறிவியலில் டிப்ளோமோவும் பெற்றுள்ளார். மதுரையில் 2011இல் மேயர் பதவிக்காக போட்டியிட முயன்ற போது சரியான ஆவணங்கள் இல்லாததால் அவரால் போட்டியிட முடியவில்லை. அப்போது அவரது வாக்காளர் அட்டையில் ஆண் என்றும் வேட்பு மனுவில் திருநங்கை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அனைத்து ஆவணங்களையும் திருநங்கை என்று முறையாகப் பெற்று சுயேச்சையாக நாடாளுமன்றத் தேர்தலில் மதுரைத் தொகுதியில் நிற்க ஆர்வமுடன் தயாராகி வருகிறார் பாரதி கண்ணம்மா.

தனியார் வங்கியில் இரண்டு ஆண்டுகள் விற்பனை மேலாளராக இருந்த பாரதி கண்ணம்மா "திருநங்கைகளுக்கென்று குடும்பம் கிடையாது, எனவே ஊழல் செய்து சொத்து சேர்க்க வேண்டும் என்ற ஆசையும் கிடையாது. நான் சுயேச்சையாக நிற்பதால் எந்த ஒரு தலைவரின் உத்தரவுகளுக்காகவும் காத்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நான் ஜெயித்தால் திருநங்கைகளுக்கான கல்வியும், வேலை வாய்ப்பும் பெற கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன். பெண்களுக்கான உண்மையான உரிமைகள் கிடைக்கவும் வழி செய்வேன்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலுக்குப் புலிச்சாயம்




கோபியும் அவரது கூட்டாளியும்

அண்மையில் கிளிநொச்சியில் போடப்பட்ட கைதுகளுக்கான பிள்ளையார் சுழி தமிழர்கள் வாழும் பகுதியெங்கும் பரந்து விரியத் தொடங்கியுள்ளது. அதிலும் முதலாவதாக நிகழ்ந்த ஜெயக்குமாரி மற்றும் அவரது மகள் விபூசிகா ஆகியோரின் கைதுக்கு அரசு சொல்லியுள்ள காரணங்கள் எவராலுமே ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல. இலங்கையின் உண்மை நிலைவரத்தை வெளிநாட்டு ஊடகங்களுக்கோ அல்லது சர்வதேச அமைப்புகளுக்கோ வெளிப்படுத்த நினைப்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பதை இந்தக் துலாம்பரமாக்கியுள்ளது.

"நானும் மகளும் உணவருந்திக் கொண்டிருக்கும் போது கறுப்பு ஜக்கற் அணிந்த உயரமான ஒருவர் வீட்டு சுவருக்கு மேலாக ஏறிப்பாய்ந்து உள்ளே வந்தார். நான் எனது மகளை கூட்டிக் கொண்டு வெளியே வந்தேன். வெளியில் வரும் போது பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் வாகனத்துடன் வெளியில் நின்றிருந்தனர்.என்னையும் , மகளையும் தமது வாகனத்துக்கு அருகில் இருத்திவிட்டு வீட்டினுள்ளே பொலிஸார் நுழைந்தனர். அவர்கள் சென்று சிறிது நேரத்தில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன."

இதுவே கைதுசெய்யப்பட்ட ஜெயக்குமாரி நீதிமன்றில் அளித்த வாக்குமூலம். உண்மையில் ஜெயக்குமாரியை கைது செய்ய வேண்டும் என்பதிலேயே அரசு குறியாக இருந்துள்ளது. அதற்கு வழி தேடும் வகையில் தான் ஜெயக்குமாரியின் வீட்டு வாசலில்நின்று கொண்டு மர்ம மனிதனை உள்ளே அனுப்பி செயற்கையான சூட்டுச் சம்பவம் ஒன்றை பொலிஸார் இட்டுக்கட்டியிருக்க வேண்டும் என்பதை அயலவர்களினதும், ஏனைய தமிழ் மக்களினதும் சந்தேகமாக இருக்கிறது.

ஏனெனில் ஜெயக்குமாரியின் வீட்டை சோதனை இடச் சென்ற போது மர்ம மனிதர் ஒருவர் (அவரைத்தான் புலிகளின் புதிய தலைவர் கோபி என்று அரசு கதைவிடுகிறது) பொலிஸாருக்குச் சுட்டு விட்டு தப்பித்தார் என்று பொலிஸ் தரப்பு கூறிய சம்பவத்தை ஏற்றுக்கொள்வது கடினமாகவே இருக்கிறது. ஏனெனில் குறித்த நபர் பொலிஸாரை நோக்கி சுட்டிருந்தால் பதிலுக்கு பொலிஸ் காரர்கள் கைகட்டி வாய்பொத்தி நின்றிருக்கப் போவதில்லை. அவர்களும் பதிலுக்கு வேட்டோசைகளால் முழங்கியிருப்பார்கள். ஆனால் இதற்கும் ஒரு காரணத்தை பொலிஸ் பேச்சாளர் சொல்லியிருக்கிறார்.

"அங்கு சென்றபோது பொலிஸார் எவரும் ஆயுதங்கள் தரித்திருக்கவில்லை" என்பதே பொலிஸ் பேச்சாளரின் விளக்கம்.

சாதாரணமான குற்றவாளி ஒருவரைத் தேடிச் செல்கையில்கூட நவீன ஆயுதங்களோடு படைஎடுக்கும் பொலிஸார் புலிகளின் புதிய தலைவரை பிடிக்கச் சென்ற போதுமாத்திரம் நிராயுதபாணிகளாகச் சென்றார்களாம். அப்படி நிராயுதபாணியாகச் சென்றவர்கள்தான் இப்போது வடக்கு மாகாணம் முழுதும் இராணுவத்தை விட்டு சல்லடை போடுகிறார்களோ?

அத்தோடு குறித்த சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடத்துக்கு மிக அருகிலேயே ஒரு இராணுவ முகாமும் அமைந்துள்ளது. சூட்டுச்சத்தம் கேட்டவுடனேயே படைத்தரப்பு பறந்து வந்திருக்க வேண்டும். ஆனால் விபூசிகாவையும் அவளது தாயாரையும் இழுத்து ஜீப்பில் கொண்டு செல்லும்வரை அங்கு இராணுவம் வரவேயில்லை.

இதன் மூலம் திட்டமிட்டே விபூசிகாவையும் தாயாரையும் பயங்கரவாதத் தடுப்புப்பொலிஸார் பிடித்துச் சென்றுள்ளனர் என்பது இதன் மூலம் தெட்டத் தெளிவாகப் புலனாகின்றது.

## செந்தணல்

கிறிஸ்பூதம் , ஆவாக்குழு போன்ற போன்றே கோபி என்ற புலிகளின் புதிய தலைவரையும் செயற்கையாக உருவாக்கியுள்ளது அரசு. நிழலுக்கு புலிச்சாயம் புனையப்பட்டிருக்கிறது. புலிகளை முழுமையாக அழித்துவிட்டதாக அரசே அறிவித்து ஐந்து வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் புலிச்சாயத்தை இன்னும் அரசால் கைவிடமுடியவில்லை.

பல இடங்களில் ஆயுதங்கள்அல்லது அரசுக்கு எதிரான துண்டுப்பிரசுரங்கள் என்பன கைப்பற்றப்பட்டால் சூட்டோடு சூடாக அவற்றை ஊடகங்களில் அரசு வெளிப்படுத்தி தனது திறமையை பறைசாற்றிக்கொள்வதுண்டு. ஆனால் ஜெயக்குமாரியின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் வெடிபொருள்களை இணங்காணும் கருவி , துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றின் புகைப்படங்களை ஏன் வெளியிடவில்லை?

ஜெயக்குமாரியும் விபூசிகாவும் காணாமல் போன தங்கள் உறவுகளை மீட்டுத் தரும் படி உள்ளூர், சர்வதேச ஊடகங்களிடமும், வெளி நாட்டு தூதுவர்களிடமும் கண்ணீர் மல்கி கேட்டுள்ளனர். போரினால் பாதிக்கப்பட்ட இந்தத் தாயும் மகளையும் காணாமல் போனவர்களை மீட்டுத் தரும் படி கேட்பது தவறா? இழந்த உறவுகளை மீட்டுத்தருமாறு கதறக்கூட தமிழர்களுக்கு உரிமையில்லையா?

உண்மையைக் கூறும் தமிழர்களுக்கு இதுதான் நடக்கும் என்று பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் விடுக்கப்படுகின்ற மனிதாபிமானமற்ற எச்சரிக்கையாகவே இந்தக் கைதுநடவடிக்கையை அடையாளப்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் அரசு எண்ணியது போல நடைபெறப் போவதில்லை. சிலவேளைகளில் இந்தக் கைதுகள் கூட தமிழர்களின் இன்னொரு எழுச்சிக்கான ஆரம்பவிதையாக அமைந்துவிடக்கூடும்.

# ஸ்கைப்பிலும் இசை பயிலலாம்




சொந்த பந்தங்களை விட்டு வேலை காரணமாக வெளிநாடு செல்லும் பலரும் அங்கு சென்றவுடன் தம் உறவுகள் மற்றும் தம்முடைய கலாசாரத்தையும் மிகவும் இழந்து தவிப்பது எல்லாரும் அறிந்ததுதான்.

குறிப்பாக, ஈழத்தமிழர்கள் பலர் தங்களுடைய பிள்ளைகள் தமிழ்ப் பண்பாடு மற்றும் கலாசாரத்தை மறந்துவிடாமல் இருந்திட பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.தங்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும், இசை, நடனம் [illegible]றும் பல கலை சார்ந்த அம்சங்களுக்கு [illegible]த்[illegible]வம் அளிப்பதை புலம்பெயர் தமிழர்கள் [illegible]ழக்கம[illegible] கொண்டுள்ளனர்.

மேற்கத்தைய வாழ்வுமுறையை வாழ்ந்து வந்தாலும், அவ்வப்போது தாய்நாட்டுக்கு வரும்போது இங்குள்ள மற்ற பிள்ளைகளை போல தம் குழந்தைகளும் கர்நாடக இசை, பரதநாட்டியம் மற்றும் இசைக் கருவிகளை வாசிக்கும் திறமை படைத்தவர்களாக இருக்கவே ஆசைப்படுகின்றனர்.

கனடா,அமெரிக்கா, ஐரோப்பா, பிரிட்டன் எனப் பல நாடுகளிலும் குடியேறியுள்ள நம்மவர்கள், அவர்களின் குழந்தைகளுக்கு சங்கீதம் கற்றுக்கொடுக்க விரும்பினாலும் அவர்கள் வசிக்கும் இடத்தின் அருகிலே கர்நாடக இசை ஆசிரியர் கிடைப்பது அரிது. இதற்காக பல மைல்கள் தாண்டி சென்று கற்க வேண்டியுள்ளதால் பலரால் இதைத் தொடர முடியாமல் போய்விடுகிறது என்ற ஏக்கம் இருந்து வந்தது. இந்தக் குறையை தீர்க்கும் விதத்தில் வந்துள்ள ஏற்பாடுதான் ஸ்கைப்பின் மூலமான இசை வகுப்புகள். இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் எதுவும் சாத்தியம் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டுதான்.

ஸ்கைப் என்பது இணையத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்யக்கூடிய ஒரு மென்பொருள். இதனை கணினி அல்லது போனில் பதிவிறக்கம் செய்து கொண்டு, மைக் மற்றும் வெப் கமெரா பொருத்திவிட்டால் போதும். அமெரிக்காவில் அமர்ந்து கொண்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் இசை ஆசிரியரிடம் சரிகம... முதல் ஆலாபனை வரை கற்றுக்கொண்டு விடலாம் ஸ்கைப், உலகின் எந்த மூலையில் இருப்பவரையும் இணைக்கும் சிறப்பு படைத்ததால், இதன் பயன்பாடு மிக அற்புதமானதாகி விடுகிறது.

சில வருடங்களாக பிரபலமாகி வரும் இந்த ஸ்கைப் இசை வகுப்புகள் வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். போக்குவரத்து நெரிசலில் பயணித்து செல்லும் அவசியம் இல்லாமல், உட்கார்ந்த இடத்தில், கிடைத்த நேரத்தில், தாம் விரும்பிய வல்லுநரிடம் இசையைப் பயில இந்த முறையை சிறியவர்கள் மட்டுமின்றி, பணிக்கு செல்வோரும் உபயோகப்படுத்துகிறார்கள். இதன் மூலம் இலங்கையில் உள்ள இசை ஆசிரியர்களிடம் மட்டுமல்லாது தமிழகத்தில் உள்ள இசை ஜாம்பவான்களிடமும் சங்கீதத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக ஸ்கைப் மூலம் கர்நாடக இசையை அமெரிக்கா, லண்டன், ஆஸ்திரேலியா, போன்ற நாடுகளில் உள்ள இசை பிரியர்களுக்கு கற்று கொடுத்து வருகிறார், கர்நாடக இசை மேதை லால்குடி ஜெயராமனின் மாணவியும், பல கச்சேரிகளை செய்தவருமான வித்யா சுப்ரமணியன்.

5 வயது முதல் 75 வயது வரை உள்ளவர்கள் தன்னிடம் ஸ்கைப் மூலம் கர்நாடக இசையை பயின்று வருவதாக கூறும் அவர், "தற்போது சீனா, வளைகுடா நாடுகள், ஐரோப்பா, கொரியா போன்ற நாடுகளில் வசிக்கும் தமிழர் மற்றும் வேற்றுமொழி இந்தியர்களும் கூட கர்நாடக இசை பயில ஆர்வம் அதிகம் காட்டி வருகின்றனர். இந்தியாவிலுள்ள மற்ற நகரங்களிலிருந்தும் கூட ஸ்கைப் மூலம் என்னிடம் மாணவர்கள் இசை கற்றுக்கொள்கிறார்கள்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வைத்தியசாலைக்கு வந்து மறு தினமே சம்பள உயர்வு கோரி வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தினால் நோயாளிகள் படும் சிரமங்கள் அவஸ்தைகள் கொஞ்சமானதல்ல.

**சிறுகதை**



# மனிதம் மரணிப்பது இல்லை

த.குபேரமூர்த்தி

**பார்**வையாளர்களுக்கான நேரம் முடிவடைந்து விட்டது. என்னைப் பார்ப்பதற்காக வந்த கணவரும், பிள்ளைகளும் போய்விட்டார்கள். மனசெல்லாம் ஒரே வலி, பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொள்கிறேன்.

"கான்சர்" ஒப்ரேஷனுக்காகக் காத்திருக்கும் நோயாளி நான், இங்கு வந்து வாரங்கள்இரண்டு கடந்தும் இன்னும் ஒப்பிரேஷன் நடைபெறவில்லை. இதன் பிறகு அது நடந்து சுகம் கிடைத்து வீடு போய்ச் சேர இன்னும் எத்தனை வாரங்கள் செல்லுமோ...? இந்த ஸ்ட்ரைக் மட்டும் இல்லாவிட்டால் எனக்கு எப்பவோ ஒப்ரேஷன் முடிந்திருக்கும்.

நான் வைத்தியசாலைக்கு வந்து மறுதினமே சம்பள உயர்வு கோரும் வைத்தியர்களின் வேலை நிறுத்தத்தினால் நோயாளிகள்படும் சிரமங்கள் அவஸ்தைகள் கொஞ்சமானதல்ல. ஒன்றரை வயது சின்ன மகனின் சிங்கார முகம் என் சிந்தையிலே நிறைந்திருக்கிறது. அவனைப் பிரிந்திருப்பது பெரும் வேதனையாயுள்ளது. அவனை நினக்கும்போதெல்லாம் கண்கள் பனிக்கின்றன. முந்தானை யில் மெதுவாக கண்களை துடைத்துக் கொள்கிறேன். அப்போது என் தோளை ஒரு கரம் ஆதரவாகப் பற்றுகிறது. திரும்புகிறேன். அங்கே கவிதாம்பாள் புன்னகைத்தபடி நின்றாள்.

'ஏன் ராதாம்மா அழுறீங்களா...? என்னம்மா செய்யிறது . இப்படி ஆஸ்பத்திரி வழியாக கஷ்டப்பட வேண்டுமென்பது எங்கட தலையெழுத்து. நானும் இந்த இடத்துக்கு வந்து ரெண்டு மாசமாகுது. என்ன ஒப்ரேஷனுக்கு எடுக்கிறாங்க இல்லையே. இரத்தம் தந்தாத் தான் ஒப்ரேஷன் நடக்கும் எண்டு சொல்லீட்டாங்க' அலுத்துக் கொள்கிறாள் அவள்.

அந்த கவிதாம்பாளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். கழுத்திலே கழலை பெரிய அளவிலே முன்பக்கம் தள்ளிக் கொண்டிருக்கிறது. ஒரே மகனைத் தவிர யாருமில்லாத ஏழைத் தாய். வெளியே இருந்து இரத் தம் எடுக்கக் கூடிய பணவசதியும் அவளுக்கு இல்லை. அந்த வார்ட்டிலே தோட்டத்துப்பெண்கள் பலரும் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் வைத்தியர்கள் நன்றாகநடந்து கொண்டாலும் ஒரு சில தாதியர்களும், சிற்றூழியர்சிலரும் நடந்து கொள்ளும் முறை நன்றாகவே இல்லை. அப்பாவி நோயாளிகளைப் பார்த்துக் கடிக் காத குறையாகவே எப்பொழுதும் குரைத்துக் கொண்டிருப்பார்கள் . மொழி புரியாவிட்டாலும், ஏச்சு. வெற்றிலை போட்டு சிவந்த வாயைக் கண்டாலும் ஏச்சு. அவர்களைப் பார்த்து ஒரு கிண்டல், நக்கல் , ஏளனச் சிரிப்பு , வேறு அப்பாவி மக்களை நோக வைக்கின்ற அவர்களைத் தட்டிக் கேட்க, நியாயம் கேட்க மனசு துடித்தாலும் பெரும்பான்மை மொழியை ஒழுங்காகப் போசத் தெரியாத நான் அப்படியே அடங்கிப் போனேன்.

வைத்தியசாலை வாழ்வென்பது மறக்க முடியாதது. இப்போது என்னுடன் இங்குள்ள வைத்தியர்கள் தாதிமார், நோயாளிகள் எல்லோருமே பரிச்சயமாகி விட்டார்கள். எனக்கு இன்னும் கட்டில்கிடைக்கவில்லை. பகல் முழுக்க வாங்கிலில் உட்கார்ந்து விட்டு இரவில் பாயை விரித்து இந்த ஒரே பாயில் சிங்கள நண்பி சம்பிக்காவுடனும், தமிழ்நண்பி கவிதாம்பாளுடனும் சயனிப்பேன். உணவு உண்ணும்போதும்மூவரும் மாறி மாறிபகிர்ந்துண்போம். உண்மையில் வைத்தியசாலை இனம் ,மதம் , மொழி இவற்றுக்குஅப்பால் மக்களை உள்ளத்தால் , உறவுகளால் இணைக்கின்ற ஒரு பொது இடம். ஒருவருக்கொருவர் கொடுத்து உதவி செய்து ஒருவரை ஒருவர் தாங்கி மகிழும் ஓர் இடம்.

காலை எட்டு மணியாகி விட்டது. வார்ட்டில் ஒரே பரபரப்பு. சிற்றூழியர்கள் துப்பரவு செய்வ தில் ஈடுபடுகிறார்கள். இன்னும் சில நிமிடங்களில் வார்ட்டை பார்ப்பதற்காக டாக்டர் வந்து விடுவார் என்பதற்கு அடையாளமிது. எப்போதுமேதோட்ட மக்களைக் கண்டால் எரிந்து விழும் எரிச்சல் காரியான எக்னஸ், பத்தாம் வார்ட் டில் காலுடைந்த நிலையில் படுத்திருக்கும் பாப்பாத்திக் கிழவியின் மீது பாய்ந்து விழுவது நன்றாகக் கேட்கிறது. புனிதமான ஒரு பணிக்காக வந்து இருக்கின்ற இவர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்களோ...?

அதோ... 'டக்.. டக்' என்ற சப்பாத்து ஓசையுடன் கம்பீரமாக டாக்டர் வருகிறார். அவரைப் பின் தொடர்ந்து தாதி இருவரும் சிற்றூழியரான எக்னஸும் சுறுசுறுப்பாக வருகிறார்கள். ஒவ்வொரு நோயாளியையும் கவனித்து விட்டு வாங்கிலிலே உட்கார்ந்து இருக்கின்ற எங்களிடம் வருகிறார் டாக்டர்.

அவசரமாக எழுந்து கொண்ட கவிதாம்பாள் "கும்பிடுகிறேன் சாமி ..." என்று கைகூப்பிய படி, 'தொர ... என்ன இன்னமுமே ஒப்பரேஷன் செய்லீங்க... எனக்கு வசதியில்லீங்க... எனக்கு இரத்தம் தர யாரும் இல்லையே 'என்று பரிதாபமாகக் கூற டாக்டரும் புன்னகைத்தபடி , "மயக்க மருந்து குடுக்கிறவங்க வேலை நிறுத்தம், அது முடிஞ்சதும் ஒப்ரேஷன் நடக் கும்" என்று கூறிவிட்டு நகர்ந்தார். கோபத்தோடு அவளிடம் வந்த எரிச்சல் காறி எக்னஸ் " ஒனக்கெல்லாம் இரத்தம்தர மாட்டோம்,எங்கட பொடியன்களை ஒங்க ஆள்கள் தான் யாழ்ப்பாணத்தில கொல்றாங்கள்" என்று முகத்தில் பாய்ந்து ஏசி விட்டு செல்கிறாள். நான் அப்படியே அதிர்ந்து போனேன். என் அதிர்ச்சியைப் புரிந்து கொண்ட சம்பிக்கம்மா "இந்த எக்னஸ் அக்காட மகன் ஆமி. அவன் யாழ்ப்பாணத்துல செய்ற நேரம்செத்துப்போயிட் டான். அந்தக் கவலையில் தான் இப்படி கண்டபடிபேசுகிறாள்" என்று விளக்கம் தந்தபோது என்கஸின் மனத்தாக்கம் எனக்குப் புரிந்தது.

மறுநாள்பொழுது விடிந்தது. வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விட்டார்கள். அன்றே என்னையும் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தினார்கள். சத்திர சிகிச்சை முடிந்து என்னை விடுதிக்கு கொண்டு வந்தார்கள். என்னால் உடம்பை அசைக்க முடியவில்லை. வயித்திலே அப்படி ஒரு வருத்தம். இரவெல்லாம் இருமலும், வாந்தியும் வேறு அவதிப்படுத்தி யது எழுந்திருக்க முடியாதஎன் பக்கத்தில் விழித்திருந்து என்னைக் கவனித்தது கவிதாம்பாள் தான். அவள் கழுத்திலும் மனதிலும் வருத்தத்தை சுமந்திருக்கும்அந்தப் பெண் சற்றும் அருவருப்படையாது நான் எடுத்த வாந்தியை சுத்தம் செய்தாள். இனம், மதம், அத்தனையையும் கடந்து உதவி செய்த அந்தப் பெண்ணிலே இருந்த மனிதநேயத்தை கண்டு கண்கள் பனித்தன.

மறுநாள் வார்ட்டிலே இருக்கிற நோயாளியான மாதவியின் கணவன், கவிதாம்பாளுக்கு இரத்தம் கொடுக்க முன் வந்ததால் அவளுக்கும் இரு தினங்களில்ஒப்பிரேஷன் நடந்து முடிந்தது. இப்போதுமனதுக்கு நிம்மதியாக இருக்கிறது. கட்டிலிலே இணைந்திருந்த எனது டிக்கட்டை எடுத்து வாசித்த போது அதில் 'குபேரனுடைய இரத்தம்' என் உடம்பினுள் ஏற்றப்பட்டுள்ளது. அதே போல் கவிதாம்பாளின் உடம்பில் 'சம்விகத இரத்தமும்' மீராவின் உடம்பில் 'திலின்னாவின் இரத்தமும்' ஏற்றப் பட்டிருந்தது. நாம் தமிழர், நாம்முஸ்லீம் என்று இனங்களளவில் பேசப்படுப வர் களை நினைத்த போது சிரிப்பாக வருகிறது. ஏனென்றால் மொத்தத்தில் எல்லாமே ஒரே இரத்தம் என்பது தானே உண்மை. எல்லா இரத்தமும் ஒன்றாகக் கலந்தபின் எமக்குள் வேற்றுமையுணர்வு வரலாமா? எல்லோருமே இரத்தத்தின் இரத்தங்களே.

அன்று பொழுது புலர்ந்து காலை ஒன்பது மணியிருக்கும். வார்ட்டில் ஒரே பரபரப்பு. டாக்டர்களும், தாதிமார்களும், ஊழியர்களும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கினர். எல்லோர் முகத்திலும் பதற் றம். சில நிமிடங்களில் காரணம் புரிந்து விட்டது. மலைப் பிரதேசத் தில் பயணம் செய்துகொண்டிருந்த பேரூந்து வண்டியொன்று ஒரு பள்ளத்தில்விழுந்து விபத்துக்குள்ளாகி சிலரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகப் போக ஐந்தாறு பேர் அந்த இடத்தி லேயே உயிர்துறந்துவிட்டார்கள். காயப்பட்டவர்கள் விடுதியில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அவசரமாக இரத்தம் ஏற்றப்பட வேண்டியவர்கள், உடனடியாக சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டியவர்கள் என பல நோயாளர்கள், அந்தக் காட்சிகளை அவர்கள் படுகின்ற வேதனை களைப் பார்க்க பார்க்க மனசெல்லாம் பதறியது. வைத்தியர் களும், தாதிகளும் பம்பரமாகச் சுழன்றனர். எனது பக்கத்து கட்டிலில் பரிதாபமான நிலையில் ஒரு பெண் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிறார். நிறைமாத கார்ப்பிணியான அவளுக்கு இரத்தம் ஏற்றப்படவும் வேண்டும். ஒப்ரேஷன் செய்யப்படவும் வேண்டும். இந்தப் பெண்ணுக்குரிய இரத்தம் வங்கியில் இல் லாத நிலை தாயையும் பிள்ளையையும் காப்பாற்ற வேண்டிய போராட்ட நிலையில் டாக்டர்கள் போராடினார்கள். ஏதோ ஒரு வங்கியிலிருந்து இரத்தமும் கிடைத்து சில மணி நேரங்களின் பின் ஒப்ரேஷன் செய்யப்பட்ட நிலையில் தாயையும் குழந்தையையும் காப்பாற்றி விடுதிக்கு கொண்டு வந்தார்கள். இப்போது தான் எமக்கு நிம்மதியாக இருந்தது.

அந்தப் பெண், டாக்டருக்கு கைகூப்பி நன்றியைத் தெரிவித்தாள். "நீங்க மனசு வைச்சு என்னையும் என் பிள்ளையையும் காப்பாத்தீட்டீங்க, என்னைப் பொறுத்த வரைக்கும் நீங்க வைத்தியரல்ல தெய்வம்" என்று கண்ணீர் வடித்தாள். அவளின் தலையை ஆதரவாகத் தடவிய வைத்தியர், "நான் ஒரு வைத்தியர். என்ன தெய்வமாக்கிவிடாதேயும், என் கடமையைத் தான் நான் செய்தேன்" என்று கூறிவிட்டு அப் பால் நகர்ந்தார். மனிதன் மதங்களால் ,இனங்களால் மாறு பட்டிருந்தாலும் மனிதநேயம் மரணிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எஸ்.லோன்' நிறுவனத்தின் வியாபார முகவர்களுக்கான விருது



எஸ்.லோன். நிறுவனத்தின் வியாபார முகவர்களுக்கான வெற்றியாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு 20.03.2014 அன்று ஞானம்ஸ் விடுதியில் நடைபெற்றது. இதில் முதலாமிடத்தை நியூ கமால் செரமிக் நிறுவனமும், இரண்டாம் இடத்தை ஜெய ஜெய ராம் செரமிக் நிறுவனமும் மூன்றாம் இடத்தை சாய்.பி.வி.சி. அன்ட் பிற்றிங் நிறுவனமும் பெற்றுக்கொண்டன.

இந்த நிகழ்வில் இருந்து சில பதிவுகள்.





யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாணத்துக்கான எஸ்.லோன்.லங்கா பிறைவேட் லிமிட்டெட்டின் ஏகவிநியோகஸ்தருமான கௌரவ ஈ.சரவணபவன், கப்பிற்றல் மகா ராஜா நிறுவன குழுமப் பணிப்பாளர் எஸ்.சி.வீரசேகர ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர்.

## விருது பெற்ற வெற்றியாளர்கள்









வெற்றியாளர்களும் குழும அங்கத்தவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 மார்ச் 26 ஆம் திகதி வெளியிடப்பட்டது.